
# காஞ்சி

மூன்றாம் ஆண்டு மலர்

நிறுவனர் அண்ணாதுரை




விலை ரூ 1


matsya
nylon fish nets
THE MADRAS FISH NET MFG COMPANY
CHEMBARAMPAKKAM
MADRAS
net
for
the
big
catch

கோட்டாகுடி
கோவிந்தசாமி அவர்களின்
நூல் தொகுப்பு


நாட்டுக்கு ஒரு தலைவன்!

வீட்டிற்கு ஒரு தலைவி!

ஏட்டிற்கு நம் குறள்!

ஆடைகளுக்கு காஞ்சி பட்டாடை!



காஞ்சி பட்டாடைகளை கவினுறும் பல்வண்ணங்களில் பெரும் அளவில் தயாரித்து 300-க்கும் மேலான நெசவாளர் குடும்பங்களுக்கு நல்வாழ்வு நல்கி வருகிறது.

## காஞ்சிபுரம்

# திருவள்ளுவர்

## பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கம் லிட்., நெ. 2054

### காஞ்சிபுரம் 207-பி, காந்திரோடில் தேரடிக்கு எதிரில்

அமையப் பெற்றிருக்கும் எங்கள் விற்பனை நிலையத்தில்
தேவைக்கேற்ற எல்லா பட்டு ரகங்களும் கிடைக்கும்.
உத்தரவாதமான ரகங்கள்; நேர்மையான விலை!


மாண்புமிகு அறிஞர் பெருந்தகை தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்களால் திறந்து வைக்கப்பெற்ற எங்கள் அழகுறு விற்பனை நிலையத்திற்கு தங்கள் வருகை வேண்டப்படுகிறது

போன் நெ. 222

தந்தி: 'திருகோசில்க்'

இரா. வெங்கடேசன்,
தலைவர்.

# வழுதியும் வாரணமும்!



ஏனைய பெண்டிர் எரிமூழ்கக் கண்டுதன்
தானையால் கண்புதைத்தான் தார்வழுதி—யானையும்
புல்லார் பிடிபுலம்ப தம்கண் புதைப்பவே
பல்யானை பட்ட களத்து.

—முத்தொள்ளாயிரம்.

# தம்பி

## கனியும் மலரும் நீயே!

தித்திக்கும் அந்தச் சொல்லை கிழமை தவருமல் 'காஞ்சி' இதழ் மூலம் சொல்லிச் சொல்லி மகிழ்ச்சி பெற்றுக்கொண்டு வந்த உன் அண்ணன், இன்று......!


ஆமாம்! என் அண்ணன் இன்று முதல் அமைச்சர் என்று பெருமிதத்துடன் கூறுகிருய், அறிகிறேன்; ஆனல், நான......!

ஒவ்வொரு கிழமையும் நாட்டு நடப்புகள் பற்றி, பிரச்சினைகள் குறித்து எனக்குத் தோன்றிடும் எண்ணங்களை உன்னுடன் பங்கிட்டுக்கொண்டு, உன் மூலம் மற்றவருக்கு அந்த எண்ணங்களை அளித்துக்கொண்டு வந்த அந்த நாட்களை எண்ணிக்கொண்டால்...!

சொல்ல வேண்டுவனவற்றை சொல்லியாகிவிட்டது என்ற நிலையும் இல்லை. ஏதேதோ நிரம்ப, தொடர்ந்து, சொல்லிக்கொண்டே இருக்கவேண்டும் எனத் தோன்றுகிறது. நாட்டிலும் வெளியிலும் நமது கவனத்தை ஈர்க்கத்தக்க நமது வாழ்வுடன் தொடர்பு கொண்டுள்ள எத்தனை எத்தனையோ நிகழ்ச்சிகள் சுழன்றபடி உள்ளன; அவைபற்றி உன்னுடன் உரையாட வேண்டும் என்ற ஆவல் உள்ளத்தில் ததும்பியபடி இருக்கிறது; ஆனல்......!

ஒரு நிலைக்கு ஆட்பட்டுவிட்டிருக்கிறேன் — உன் ஆணை காரணமாக நான் மேற்கொண்டுவிட்டுள்ள ஒரு கடமையுடன் பிணைக்கப்பட்டிருக்கிறேன்; தேவையற்றது என்றும் கூறமாட்டேன், தேனென இனிக்கிறது என்றும் கூறமாட்டேன்; ஏற்றுக்கொண்டுள்ள பொறுப்பினைச் செம்மையாக நிறைவேற்றித் தீருவார் என் அண்ணன், பாரீர்! பாரீர்!—என்று ஊரெல்லாம், தம்பி! நீ கூறியபடி இருந்திடுவதுதெரிகிறதே நான் அந்த உன் உணர்வுக்கு ஏற்றபடி பொறுப்பினை நிறைவேற்றியாக வேண்டுமே இல்லை என்ருல் "என்னடா வீரனே! ஏதேதோ பேசிக்கொண்டாயே உன் அண்ணனைப் பற்றி! அவன் இலட்சணம் இவ்வளவு தானு!" என்று எங்கேனும் எவரேனும் ஒரு சுடுசொல் கூறிடின், துடிதுடித்துப் போவாயே; அதனை உணர்ந்திருபபவனல்லவா, உன அண்ணன். ஆகவே சாலையில் தங்காமல், சோலைகண்டு மயங்காமல் ஓடையில் நீந்திட நினைக்காமல், ஓய்வினை நாடிடாமல், கடமை! கடமை! கடமை! என்று ஓடியபடி உள்ளதே நீராவியால் உந்தப்படும் ஊர்தி, அதுபோல, ஒவ்வொரு நிமிடமும், பணியாறறியபடி இருக்கிறேன்; கடினம் இல்லை என்று கூறுவதறகு இல்லை; வெற்றி இல்லை என்று கூறுவாறும் இல்லை; ஆனலும், உன்னுடன் கிழமை தவருமல, காஞ்சி' இதழ்மூலம் அளவளாவிவிடுவேனே. அதனை இழந்திருபபதனை எண்ணிக்கொள்ளும்போது, ஒரு ஏக்கம், ஒரு பெருமூச்சு, ஒரு தவிப்பு, ஏற்படத்தான் செய்கிறது. என் செய்வது!

'ஆண்டு மலருக்காகிலும்........'' என்று முடிவுபெருத வாக்கியத்தை வீசினன், இளங்கோவன்; ''ஆகட்டும்'' என்று பதிலளிக்க ஆரம்பித்து, அடடா! அது 'அவருடைய' பணியல்லவா என்ற நினைவு எழவே சிரித்தேன்; ''என்ன அப்பா! ஏன் சிரிப்பு, ஏன்?''— என்ருன் இளங்கோவன். முன்பு — சில ஆண்டுகளுக்கு முன்பு தயாரித்து வைத்திருந்த



குறிப்பு ஒன்றினைக் கண்டெடுத்து காட்சிக் கதை யாக்கி, காஞ்சி' — ஆண்டு மலருக்கெனத் தந் தேன்; எப்போதும்போல, மலரில் என் இதழும் இருக்கும் என்பதிலே ஒரு மகிழ்ச்சி. ஆனால் இந்த மகிழ்ச்சியை ஒவ்வொரு கிழமையும் பெறமுடிந் தால்......பெற முயற்சித்தால் என்ன......முயற்சிக் கலாம் என்ற எண்ணம் வலுவடைந்து வருகிறது ......முயற்சிக்கிறேன்...ஆயினும் இதுபோது நான் மேற்கொண்டுள்ள கடமை......! எவ்வளவு நேரம் கிடைப்பினும் அவ்வளவையும் விழுங்கிவிட்டு..... மேலும் வேண்டும் வேண்டும் என்று கேட்டபடி இருக்கிறது.

கவலை அதிகமா அண்ணு!—என்று கேட்கத் தோன்றும்; நாமாக ஏற்றுக்கொண்ட கடமையைச் செய்து முடித்திட முனையும்போது, கவலை எங் கனம் நம்மை கப்பிக்கொள்ள முடியும். கவலை அல்ல, தம்பி! கவலை அல்ல!! செய்து முடித்திட எண்ணிடும் பணிகளைக் கணக்கெடுக்கும்போது, அவ்வளவுக்கும் தேவையான ஆற்றலைப் பெற்றி ருக்கிறோமா என்ற ஐயப்பாடு எழத்தான் செய் கிறது.

இது என்ன பிரமாதம்!
இது எனக்கு எம்மாத்திரம்!
இதுவா! பூ! மிகச் சாதாரணம்!

என்று நான் எப்போதும் சொல்லிப் பழக்கப்பட்டா தவன்; சொல்லாததற்குக் காரணம், அத்தகைய ஒரு எண்ணம் என்றுமே எனக்கு ஏற்படாதது தான். ஆயினும்,

வேறு எவர்மீதாவது சுமையைப்
போட்டுவிடுவோம்

என்ற போக்கிலேயும், நான் என்றும் இருந்தது இல்லை.

நம்மால் முடிந்த அளவு செய்
வோம்.

நம்மைவிட வல்லவர்கள் கிடைக்
கிறவரையில் நாம் இதனைச் செய்து வரு
வோம்.

என்ற எண்ணம் எனக்குப் பல காலமாகத் துணை இருந்து வருகிறது.

செய்யப்பட வேண்டியவைகளை எண்ணிக் கொள்ளும்போது.........!

குப்பை கூளங்களை அப்புறப்படுத்த ஒரு தாய் பெருக்கிக்கொண்டிருக்கும்போது, தத்தித் தத்தி நடந்துவரும் குழந்தை பொருளை எடுத்து இங்கு மங்கும் வீசிடக்கண்டு, வேலை மேலும் வளரு கிறதே என்ற கவலை பிறந்திடினும், குழந்தையை முத்தமிட்டு — [பரிசு தருகிருள்! வேலையைக் கெடுத்ததற்கு!!]—மகிழ்கின்ருளே. அந்தத்தாயின் உள்ளத்திலே குழந்தையின் எதிர்காலம் எழி லுடன் விளங்கிட என்னென்ன செய்திட வேண் டும் என்று எண்ணிடுகிருள் — அறிந்திட முயற் சித்ததுண்டா? கேட்டுப் பார்த்ததுண்டா?

கேட்டால் மட்டும் என்ன, அந்தத் தாய், விவரமாக எடுத்துக் கூறவா செய்வாள்? ஒரு புன் னகை மலரும், அதிலே ஓராயிரம் ஆவல்கள் ஒளிவிடும்! என் மகனே...என் மகனே...என்று ஒரு இசை பிறக்கும், மற்றவற்றை எல்லாம், முத்தங் களாக்கிக் குழந்தையின் கன்னத்தில் பதித்துவைப் பாள். அந்தக் கன்னம், தான் பெற்ற செய்தியினை எடுத்து இயம்பவா செய்யும்! கலகலவெனச் சிரிப் பான் குழந்தை! பொருள் என்ன......? முயன்றவர் பலர். அந்தப் பொருளை அறிந்திட! வென்றவர் எவரும் இல்லை!

புள்ளினமும் பேசிடக் கேட்கிருேம்; பூங் காற்றும் ஏதோ பேசத்தான் செய்கிறது; புன லிடைத் துள்ளிடும் மீனினமாகட்டும், கானிடை ஓடிடும் மானினமாகட்டும், பேசாமலா உள்ளன? அருவியே ஏதோ ஒலிமூலம் எதையோ சொல் லியபடிதானே இருந்திடக் காண்கிருேம்! பொருள் மட்டுந்தானே விளங்கவில்லை. அந்தப் பொருள் மட்டும் விளங்கிவிட்டால்,.........! எண்ணிடும் போதே, இந்த உலகிற்குள் உறங்கிக்கிடக்கும் ஒரு உலகம் நிழலளவுக்குத் தெரிவதுபோல் தோன்றுகிறது.

......எனக்கு உள்ள வேலை, இந்த இயற்கையின் புதிர் தரும் பொருளைக் கண்டறிந்திடுவது அல்ல. அது என்னுல் முடியக்கூடியது என்று எண்ணு வதுகூட பேதமை.

எனக்கு அளிக்கப்பட்டுள்ள பணி, பொருள் விளங்க நன்கு புரியும்படி, மக்கள் தமது தேவை களை எடுத்து இயம்புகிருர்களே, அவைகளைக் கேட்டு தீர்த்து வைத்திட முயற்சி எடுத்திடுவ தாகும்.

எளிதானது என்பாயா, தம்பி! கூறிடமாட் டாய்! அறிவுத் தெளிவுள்ளவனல்லவா, நீ! நீ அறிவாய், தேவைகளை அறிந்து நிறைவேற்றி வைத்திடுவது எளிதல்ல என்பதனை.

சரியான முறையிலே அறிந்து
கொள்வதற்கே ஒரு தனித் திறமை
வேண்டும்.

ஏ.வெ. கோவிந்தசாமி அவர்களின்
நூல்


தொடர் தொடராகத் தேவைகள் வளருகின்றனவே, என்று எண்ணி, சலிப்பு அடையாதிருக்க வேண்டும்.

ஒரு தேவையை நிறைவேற்றிய உடனே மற்றோர் தேவையின் எடுத்துக் காட்டுகின்றனரே என்று எரிச்சல் அடையாதிருக்க வேண்டும்.

இதற்கே பலருக்கு முடிவதில்லை. ஆனல் அண்ணனுக்கு இதிலே அதிகமான கஷ்டம் கிடையாது—பொறுமையுடன் இருந்து இருந்து பழகிவிட்டிருக்கிருன்—என்பாய். உண்மைதான் ஓரளவுக்கு! ஓரளவுக்கென்ன, பெருமளவு உண்மைதான்! ஒப்புக்கொள்கிறேன்.

ஆனல், தேவைகளைக் கணக்கெடுப்பதுடன், வரிசைப்படுத்துவது, வகைப்படுத்துவது, என்பது அவ்வளவு எளிதானது அல்ல. தேவைகளின், நியாயத்தைக் கண்டறிவது, அதனினும் கடினம்.

அதனினும் கடினம், ஒருவருடைய 'தேவை'யை நிறைவேற்றி வைக்கும்போது அது வேறு ஒருவருடைய 'தேவை'யையும், 'உரிமை'யையும், 'வசதி'யையும், கெடுத்து விடுகிறதா என்று கண்டறிவது.

எல்லாவற்றையும் விடக் கடினம், நியாயமானது என்று அறிந்தான பிறகும் அந்தத் தேவையை நிறைவேற்றிக் கொடுப்பதற்கான 'வலிவும் வாய்ப்பும்' பெற்றிடுவது.

காத்தான் ஒரு ஏழை! வீட்டு மனை வேண்டும் என்கிருன். தேவை, நியாயம்! இடம் கூடக் காட்டுகிருன், இலுப்பத் தோப்புக்குப் பக்கத்தில் ஒரு இடம்; கரம்பு; விலை அதிகம் தரத்தேவையில்லை, என்கிருன். மறுப்பதற்கில்லை.

முத்தன், ஒரு உழவன்; பிறர் கையை எதிர்பார்த்துத் தீரவேண்டியநிலை அல்ல; அதேபோது 'பிரமாதமான' பணக்காரனும் அல்ல. அவன்அந்த 'கரம்பு'க்குச் சொந்தக்காரன், அதுதான் என் வயலுக்கு வழி! அது பறிக்கப்பட்டுவிட்டால், அடைக்கப்பட்டுவிட்டால், என் ஆறு ஏகர் அயன் நஞ்சையும் பாழாகிவிடும்; பிறகு நான் அதோகதிதான் என்கிருன். நியாயம்! இதுவும்!!

முத்தன் பக்கம் நிற்பதா — காத்தானிடம் கனிவு காட்டுவதா......?

தேவைகளின் தன்மைகளையும் ஒன்ருேடொன்று அந்தத் தேவைகள் மோதிக்கொள்ளக் கூடிய வகையினையும் விளக்கிட, காத்தானையும் முத்தனையும், சான்றுகூற அழைத்தேன்! அவர்கள் என் கற்பனையூர்' வாசிகள்! அந்த இருவர். எங்கே உளர், வடார்க்காடா, தென்ஆற்காடா என்றுதேடிடத் தேவையில்லை என்பதனைக் கூறிவை, தம்பி!!

கடினமும் சிக்கலும் இருந்திடினும், பிரச்சினைகளைத் தீர்க்காமல், காலத்தை ஓட்டிக்கொண்டிருக்க முடியுமா! காலமல்லவா, கடமையை மேற்கொண்டுள்ளவர்களைக் கடுமையாக வேலை வாங்குகிறது!

அந்தவேலை செய்ததுபோக 'மிச்சம்' நேரம் கிடைத்து, முன்புபோல 'காஞ்சி' மூலம் உன்னுடன் அளவளாவ விரும்புகிறேன்,

'அந்தவேலை' செய்வதற்குத் தேவைப்படும் 'தெம்பு' கூட, உன்னுடன் அளவளாவுவதன் மூலம் பெறமுடியுமே......பெற்றுக்கொண்டு பெருமிதம் கொண்டவன்தானே.........

ஆகவே, தம்பி! இந்த மலரில், என் 'நிலை' பற்றி ஒரு 'துளி' எடுத்துக் கூறினேன்! இதிலேயே எத்தனையோ மகிழ்ச்சி பெறுகிறேன்! இதனைத் தொடர்ந்து......!!

கதைகளாக, வரலாற்றுத் துணுக்குகளாக' உரையாடலாக...எத்தனை எத்தனையோ கூறிடத் துடித்தபடி இருக்கிறேன்......

அண்ணு! கிழமை தவருமல் மடல் பெற்று மகிழ்ந்தவனே நான்! இனியும் அந்தச் சுவை பெறத்தான் விழைகிறேன். ஆனல் உனக்குள்ள புதிய பொறுப்பினை உணர்ந்துகொள்ளாதவனல்லவே! ஆகவே உன்னுல் இயன்ற அளவு 'காஞ்சி, இதழ் மூலம், கருத்தளித்து வந்திடின் போதும், கடிதமோ, கட்டுரையோ, கதையோ. வரலாருே --வடிவம் எங்கணம் இருப்பினும், உன் எண்ணத்தை எனக்கு அறிவித்து வந்திடின் போதும்—இயன்ற அளவு — என்று கூறிடுவாய். உணர்கிறேன், முயற்சிக்கிறேன்.

நான் மேற்கொண்டுள்ள பணி வெற்றி பெற, உன்னைத்தான் நம்பியிருக்கிறேன்; அறிவாய். உன் உள்ளத்தில் உலவிடும் எண்ணங்களை நான் கண்டறிந்த மட்டில், செயல்படுத்தி நாட்டினைச் சீர்படுத்தி, மக்களின் வாழ்வினைச் செம்மையான தாக்கிட, என்னுல் இயன்ற அளவு பணியாற்றி வருகிறேன்; அந்தப் பணியாற்றிடும்போது, ஒவ்வொரு நிமிடமும், தம்பி உடையான் படைக்கு அஞ்சான்! என்றபழமொழியை எண்ணிக்கொள்கிறேன். நான் செய்திட முனையும் ஒவ்வொரு நற் செயலின் போதும், நீ உடன் இருக்கிருய் என்ற உணர்வு

டனேயே இருந்து வருகிறேன். பிரச்சினைகளின் கடினம் என்னை மிரட்டும்போது, அவைகளை நிறைவேற்றி வைத்திடும் ஆற்றல் நம்மிடம் ஏது என்ற கவலை எழும்போது, உன்னைத்தான் எண்ணிக்கொள்கிறேன்; தம்பிகளின் தனித்தனி ஆற்றலின் மொத்தத்தின் தன்மையைக் கணக்கெடுக்கும் போது, பிரச்சினைகளைத் தீர்த்திடத் தேவைப்படும் ஆற்றல் போதுமான அளவு கிடைத்திடும் என்ற நம்பிக்கை எழத்தான் செய்கிறது. என் ஆற்றலை மட்டுமே நம்பிடின், ஏக்கமோ. ஏமாற்றமோதான் விளைவாகிட முடியும், என் ஆற்றல், என் ஆற்றல் மட்டுந்தானு! இல்லை, தம்பி! இல்லை! என் ஆற்றல் என்றது, என் தம்பிமார்களின் ஆற்றலின் கூட்டு-நான், இந்த கூட்டுச் சக்தியின் உரிமையாளன்!

ஆகவே, தம்பி! உன் விருப்பத்தை அறிந்து' ஆணை கேட்டு, அரசாளும் பொறுப்பை ஏற்றுக் கொண்டதனுலே ஏற்பட்டுவிட்டுள்ள புதிய நிலையில் நாம் பொறுப்புடன் நடந்து, பொது மக்களின் நல் வாழ்வுக்கான வழியினில் நடந்து, வெற்றி கண்டோம் என்பதனை ஊரும் உலகமும் ஒப்புக் கொண்டு பாராட்டத்தக்க முறையில், நாம் நடந்து கொள்ளவேண்டும், தம்பி! நான், தம்பிமார்களின் தனித் தனி ஆற்றலின் ஒட்டு மொத்தம் என்று குறிப்பிட்டேன்;


ஆகவே என் ஆற்றல், உன் ஆற்றலிலே இருக்கிறது.

என் ஆற்றலின் வளர்ச்சி, உன் ஆற்றலின் வளர்ச்சியிலே இருக்கிறது.

கனி குலுங்கா மரமும், மலர் ஆடாச் செடியும் கதிர் குலுங்காப் பயிரும், எற்றுக்கு!

கழகம், உன் ஆற்றல் நிரம்பிய கழனி! கனியும் மலரும் நீயே! கதிர் மணியும் நீயே! கனி பெற்றதால் மரம் பெருமைகொள்வதுபோல, உன்னைக் கொண்டிருப்பதால், கழகம் பெருமை பெற்றுளது. உன்னைத் தம்பியாகப் பெற்றுள்ள நானே! சொல்லவா வேண்டும், களிப்பிலே மிதக்கிறேன். கனவு பல காணுகின்றேன். நமது நாட்டை எழிலுள்ளதாக்கிட! மக்களின் வாழ்வு செம்மையானதாக்கிட! உன் துணை கொண்டு. அந்தத் தூய தொண்டிலே வெற்றி பெற்றிட முடியும் என்று நம்புகிறேன்! வா! தம்பி! வா! தூய தொண்டாற்றி வெற்றி கண்டிடலாம், வா! என்று அழைக்கின்றேன்; மறுகணம், மனக் கண்ணுல் காண்கின்றேன், உன் குறும்புப் புன்னகையை! பொருளும் தெரிகிறது! வா! வா! என்று அழைக்கிருயே, அண்ணு நான் எங்கே சென்றுவிட்டேன், உன்னுடன்தானே இருக்கின்றேன் என்று அந்தப் புன்னகை கூறுகிறது. ஆமாம்! தம்பி! அறிந்து அக மகிழ்கின்றேன்! வாழ்க, வளர்க, வெல்க உன் ஆற்றல்!

அண்ணன்,




# படித்து விட்டீர்களா?

# "ஹோம் ரூல்"

தி. மு. க. ஆங்கில வார (இதழ்)

நிறுவனர்: அறிஞர் அண்ணு

## விற்பனையாளர்கள் விண்ணப்பிக்க வேண்டுகிறோம்.

விலை 20 காசு


விவரங்களுக்கு:


"ஹோம் ரூல்"


9. அவின்யு ரோடு, சென்னை. 34



முதலாளித்துவம்
மார்க்ஸிஸம்
சோஷலிஸம்
வெள்ளையர் வழி
கம்யூனிஸம்
வலதுசாரி
இடதுசாரி
முக்கிய பாடம்
காங்கிரஸ்
பட்ட மரம்
டில்லி
மாகாணங்கள்


ஐக்கிய முன்னணி அரசு
வெடி மருந்து


அமைச்சர் மாதவன்
மொரார்ஜி
சிம்ம சொப்பனம்!


மக்களின் நண்பர்
ரூபாய் ஒரு படி
பஞ்சப்படி

# புதிய அரசின் புரட்சித் திட்டங்கள்

புதிய அரசின் புரட்சித் திட்டங்களால்

- ★ ஏழைகளை வாழ்விக்கும் படியரிசி ஏற்பாடு
- ★ எங்கும் தமிழ் முழங்கும் எழிலான காட்சி
- ★ பேருந்து வண்டிகளில் கட்டணக் குறைப்பு
- ★ கிராமங்களை இணைக்கும் புதிய வழிகள்
- ★ தொலைதூர வழிகள் அரசுடைமை
- ★ ஏரி, குளங்கள், சாலைகள் சீர்ப்படச் சீரணி
- ★ கல்வி வளர்ச்சிக்கு வருவாயில் கால்பாகம்
- ★ ஆலைகள் இயங்க அரசு உதவி
- ★ ஜாதிகளை ஒழிக்க கலப்புத் திருமணத்திற்குப் பரிசு
- ★ சுயமரியாதை திருமணம் செல்லுபடியாக்க சட்டம்

மக்களை வாழ்விக்கும் மாபெரும் முயற்சிகள்

வெற்றிக்கு உதவுவீர்!

வளம்பெற்று உயர்வீர்!

(தமிழகச் செய்தித்துறையால் வெளியிடப்பட்டது)

# john wriston Corporation

5, சாந்தோம் ஹைரோடு, .. சென்னை 4.

ரீ வயரிங் செய்வதற்கு மிக சுலபமானதும், நம்பிக்கை யானதும், விலை சரசமானதுமான எங்கள் வயரிங் ஹார்னஸ்களை உபயோகியுங்கள்.

எல்லா மாடல் கார்கள், ட்ரக்குகள். பஸ்கள், மோடார் சைகிள்கள், ஸ்கூட்டர்கள், மற்றும் ட்ராக்டர்களுக்கு ஏற்றபடி தயாரிக்கிறோம்.

## நல்வாழ்த்துக்கள்!

காலஞ்சென்ற மதுரை E. M. கோபாலகிருஷ்ண கோன்

(புத்தக வெளியீட்டாளர். மிராசுதார்) அவர்களது குமாரர்

# E. M. G. சௌந்தரராஜன்

உரிமையாளர்:

**ஸ்ரீ மீனாட்சி டாக்கீஸ், மதுரை.**

டிரஸ்டி:


**ஸ்ரீ கோபாலகிருஷ்ண ஹைஸ்கூல்**

சிறுதூர்.

**E. M. கோபாலகிருஷ்ண கோன்,**

புக் டிபோ, மதுரை.

போன்: அலுவலகம் 2325
இல்லம் 3517



மணவிழாவிற்குத் தலைமையேற்றுச் சிறப்பித்த

மாண்புமிகு முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களுக்கும்

வருகைதந்து வாழ்த்துரை வழங்கிய அனைவர்க்கும்

## எங்கள் மனமார்ந்த நன்றி!

உரிமையாளர்:

## குழந்தைவேலுக் கோனார்,

## சொக்கன் டிரான்ஸ்போர்ட், மதுரை.

போன்: 177 நிறுவனம்: 1946.

# விருதுநகர்
# கூட்டுறவு பால் வழங்கும் நிலையம்
## லிமிடெட், எண் Q. 133.
## விருதுநகர்

(இராமநாதபுரம் மாவட்டம் தமிழகம்)

மாநிலத்திலேயே பெரியதும் சிறந்ததுமான கூட்டுறவு பால் வழங்கும் நிலையம் என்று ஒருமுகமாக்த் தீர்ப்புரைக்கப் பெற்றதும்,

தமிழக அரசாங்கத்திடம் பதக்கம் பரிசு பெற்றதுமான நிறுவனம்.

மேலும் கூடுதலாக நாளொன்றுக்கு 5000 லிட்டர்கள் பால் உற்பத்தி செய்து வழங்குவதன் மூலம் இதுஒரு மீட்சிஸ்தாபனமாகச் சிறப்புற்றது!

அத்துடன்

மாட்டுத் தீவனங்கள் தயாரித்து அதன் சொந்த உறுப்பினர்களுக்கும் பிற பால் வழங்கு நிலையங்களும் அளிக்கிறது.

**K. M. A. C.** வேலுமுத்துசாமி, துணைத் தலைவர்.

**V. V.** ராமசாமி, தலைவர்.

# G. N. Motor Works

ALL KINDS OF UNDERTAKING LATHE JOBS

Motor Cycles Servicing & Repairs Authorised. Service Point For Royal Enfield. Specialists in Manufacturing components for Motor CYCLES & MOTOR Cars Etc.

**5185, Royapettah High Road, MADRAS-14.**

# Balaji Fabricators And Fasteners

*

101/1, Mount Road,

**(opp) Poultryfarm, Madras-35.**

*

**HEAVY & LIGHT FABRICATION FOR SUGAR CANE FACTORIES, MANUFACTURERS FOR HIGH TENSILE BOLTS FOR AUTOMOBILES.**

பழங்கால இல்லறக் காட்சி

# அவளால் 'அவர்'



## அண்ணதுரை

தெருக்-காட்சி.

போர் வீரர்களை. அழைக்கும் பாடல்.

"நாட்டுக்கு ஆபத்து வீட்டுக்கொருவீரன்தேவை"

வீரர்கள் எழுச்சியுடன் வருகிருர்கள்.

வீட்டின் உட்புறம் பலராமன், சோகமாகப்பட்டாளத்து உடையை அணிந்து கொண்டிருக்கிருன்.

வாளும் கேடயமும் ஒரு புறத்தில் தொங்க விடப்பட்டிருக்கிறது.

தொலைவிலிருந்து, போர் வீரர்களை அணி வகுப்புக்கு அழைக்கும் சத்தம் கேட்கிறது.

அந்த சத்தம் கேட்டதும், பலராமன் முகத்தில் மேலும் பயம் அதிகரிக்கிறது.



மனைவி வருகிருள். அவன் சோகத்தைக் கண்டு கேலி செய்கிருள்.

அ:- நீயும் ஒரு ஆம்பிள்ளை தானு? இப்படி பயந்து சாகறியே. ஊர் நாடெல்லாம் ஒண்ணு திரண்டு—போகுது நாட்டைக் காக்க, நீ இப்பத்தான் ஒய்யாரம் பண்ணிக்கிறே...

ப:- ஆமாம்...ஒய்யாரம் பண்ணிக்கொள்ருங்க, ஒய்யாரம்! கண்ணுல வீட்டுக்கில்ல இப்ப போறது. (அழுகுரலில்) போறஇடத்திலே என்னென்ன நேரிடுதோ —காலே போகுதோ, கையேபோகுதோ—உயிரேத் தான் போகுதோ...

அ:- கால் போகுதோ, கை போகு தோன்னு பயந்துக் கிட்டுவீட்டுக்குள்ளேகிடந்தா, மானமில்லபோகும்.

ப:- (பல்லைக் கடித்துக்கொண்டு) போறேன்-போறேண்டிம்மா போறேன்-பொழைச்சி வந்தாப்பேசிக்கறேன். நீ போ எனக்கு ஒண்ணும் புத்தி சொல்ல வேணும்...

[மனைவி வாளும் கேடயமும் எடுத்து தருகிருள். உடையைச் சரிப்படுத்திவிடுகிருள். பால், பழம் கொடுக்கிருள்.]

ப:- பாலும் பழமும் கொடுக்கறயா, ரொம்ப அன்பா. ஆத்தாளுக்குக் கிடா வெட்டறபோது, கழுத்திலே மாலை போட்டு, பொட்டுக்கிட்டு, இழுத்துக்கிட்டுப் போருங்க இல்லை...

அ:- அப்படி எல்லாம் எண்ணிக்கிட்டு, மனசைக் குழப்பிக்காதே......இதோ, பவானி பிரசாதம்,

[நெற்றியில் திலகம் வைக்கிருள்]

[பலராமன் பாலும் பழமும் சாப்பிட்டுக்கொண்டு]

பః:- பாலும் பழமும் சாப்பிட்டுவிட்டு படுகளத்துக்குப் போறதைவிட, பழய சோறு சாப்பிட்டு விட்டு, ஏரடிக்கப் போகலாம்...

[ஊதுகுழல் சத்தம் கேட்கிறது.]

பః:- (முகத்தில் சோகம் கப்பிக் கொண்ட நிலையில்) ஊதிட்டாண்டி ... உசிரைக் கொண்டாந்து குடுடான்னு கூப்பிடருன், பாவிப்பய...

அ:- (அவன் வாயை மூடியபடி) இப்படி எல்லாம் பேசாதே. நீ ஒரு வீரனில்லே..கையில் என்ன? கத்தி.

பః:- எதிரியிடம் மட்டும் என்ன வாம் கத்திதான்...

[வெளியே இருந்து ஒரு போர் வீரன் பலராம்! பலராம்! என்று கூப்பிட, அந்தச் சத்தம் கேட்ட அன்னம்...]

அ:- உள்ளே வந்துடுவான், உன் சிநேகிதன்..கொஞ்சம் புஞ்சிரிப்பா இரு ... உம். கொஞ்சம் ... அட இழவே! அந்த அழுமூஞ்சியைக் கொஞ்சம் மாத்திக்கோ...அதோ.

[நண்பன் உள்ளே நுழைகிருன். அப்போது பலராம், மனைவிக்குத் தைரியம் கூறுவதுபோல நடித்து]

பః:- கலங்காதே! போர்வீரன் மனைவி புலம்பலாமா? போருக்குக் கிளம்பும் போது...

[அன்னம், கண்களைத் துடைத்துக் கொண்டு, ஏதோ நினைவிற்கு வந்ததால் இருங்க...இதோ வந்து விடுகிறேன் என்று கூறிவிட்டு உள்ளே போகிருள்.]

பః:-(நண்பனிடம்) நாம்ப, எவ்வளவுதான் தைரியம் சொன்னுக்கூட, பொம்பளைத்தானே, பாவம், கலங்கரு, கதறரு, கையைக்காலை பிடிச்சுக்கிட்டு கெஞ்சரு, என்ன ஆயிடுமோ ஏது ஆயிடுமோன்னு பயப்படரு. இவ்வளவு நேரமா சமாதானம் சொல்லிக் கொண்டிருந்தேன்.

நண்பன்:- நம்ப வீட்டிலேயும் இதே தான்.

பః:- ரொம்ப கலங்கினுங்களா?

ந:- அதே ஏன் கேக்கறே, போ. ஒரே அழுகைமயம்...

பః:- இவ இருக்கருளே...

[அன்னம் உள்ளே இருந்து வந்து, ஒரு கங்கணம் எடுத்து வந்து, பலராம் கரத்தில் கட்டுகிருள்.]

ந:- பலராம்! உன் மனைவியின் அன்பைப் பார்த்தாயா?

பః:- பார்த்தேன்...... காலையிலே இருந்து பார்த்துக் கொண்டு தானே இருக்கிறேன்...

[மனைவி, பலராமனை அன்புடன் பார்க்கிருள். பலராம் பயத்துடன் பார்க்கிருன், மனைவி, நண்பன் இருப்பதை ஜாடை காட்டுகிருள். உள்ளே மறுபடி சென்று திருஷ்டி கழிக்கும் ஏற்பாட்டுடன் வருகிருள். திருஷ்டி கழித்துவழிஅனுப்புகிருள்.]



நாட்டைக் காப்பாற்ற வேண்டிய அவசியத்தை விளக்கிடும் பாடல் கேட்கிறது.

படை வரிசைகள் செல்லுகின்றன .

போர்க்காட்சிகள்.

அடிபட்டவர்களைத் தூக்கிக் கொண்டு வருகிருர்கள்.

வைத்திய விடுதி.

சில வீரர்கள் அங்கு இருக்கிருர்கள்,

கண் இழந்தவர்கள் கால் இழந்தவர்கள் கரம் இழந்தவர்கள் பலராமன் அதைப் பார்த்து பயப்படுகிருன்.

பலராமன் காலிலே பெரிய கட்டு கட்டிக்கொண்டிருக்கிருன்.

வலி தாங்க முடியாதவன் போல் கூவுகிருன்.

வைத்திய விடுதிக்காரன்:- பொறுத்துக்கொள்ளப்பா...... அதிகமாகக் கூவாதே....மற்றவர்களும் அதைரியப்படுவார்கள், நாலைந்து நாளிலே குணமாகிவிடும்...

பலராமன்:- நாலைந்து நாளுங்களா? இல்லீங்க...இரண்டு நாள் போதுமுங்க...

வை:- அப்படியா? பிறகென்ன? இரண்டு நாள் வலியைத் தாங்கிக் கொள்ளக்கூடாதா...

பல:- (அவனை முறைத்தபடி) இரண்டு நாளிலே வலியா போய் விடும் — உயிரு ஐயா, உயிரு போயிடும்—இங்கேயே கிடந்தா—தெரியுதா—இதுக்கு உடனே பச்சிலை வைத்துக் கட்டாப்போனு பிராணன் போயிடும் — இங்கே, பச்சிலை கிடையாது...

[மேலதிகாரி வருகிருன். இருவரும் பேசுகின்றனர்.]

மேலதிகாரி:- (வேருெர் வீரனைக் காட்டி) துணைக்கு, இவனை அழைத்துக்கொண்டு, ஊருக்குப் போ, வைத்யம் செய்துகொண்டு ......

பல:- (மகிழ்ச்சியுடன்) குணமானதும் ஒரு விநாடிகூடத் தாமதிக்க மாட்டேனுங்க...

மேல:- அதுதான் சுத்த வீரனின் இலட்சணம் — போய்வா.... துணைக்கு?

பல:- வேண்டாங்க......இங்கேயே, போர்வீரர் தொகை குறைவு — இவரும் என்னேடு வந்தா...

[அனுமதிச் சீட்டு பெற்றுக்கொண்டு பலராமன் தள்ளாடியபடி நடக்கிருன்.

களத்தைத்தாண்டி ஓரிடம்.

பலராமன் சற்றுமுற்றும் பார்த்துவிட்டு, கால் கட்டுகளை அவிழ்த்து உள்ளே ஒட்டி வைத்திருந்தவைகளை பிய்த்தெறிந்தபடி]

பல:- படாத பாடுபட்டு இவனுங்களை ஏமாத்திவிட்டேன்.

ஆறு, வீட்டிலே? எமகாதகி யாச்சே! இவனுங்க நல்ல மனுஷனுங்க. நம்பிட்டானுங்க. அவ? பத்ரகாளியாச்சே விடப்போருளா?

[யோசித்தபடி செல்கிருன்.]

பலராமன் காட்டுப்பாதையில் செல்கிருன்.

ஒவ்வொரு சத்தமும் திகிலாக இருக்கிறது.

பல:- (பயத்துடன்) அந்த இடமே பரவாயில்லே போலிருக்குதே! எவன் வெட்டவர்ரான். எவன் கொல்லவர்ரான் என்பதாவது தெரியும்...இங்கே (மிரள மிரள பார்த்தபடி) எந்தப் பக்கத்திலே இருந்து எது வந்து பாயுமோன்னு தெரியலேயே......

[மரத்தின் இடுக்கில் ஒரு மூட்டை தெரிகிறது. அடே......

[மூட்டையை எடுத்துப் பிரிக்க அதில், வேஷச் சாமான்கள் இருக்கக்கண்டு, பலராமனுக்கு யோசனை உதிக்கிறது, காவி உடைகளை அணிந்துகொள்கிருன். தாடி மீசை ஒட்டிக்கொள்கிருன்.

ஊர்க்கோடி சென்று ஒரு மரத்தடியில் அமர்ந்துவிடுகிருன்.]

கோயில் குளத்தருகே பெரிய ஆலமரம்.

மண்மேடு.

பலராமன், சாது வேடத்தில் அமர்ந்திருக்கிருன், எதிரே, சிறிய பவானி சிலை,

சில சுவடிகள் உள்ளன. பெண்கள், குடம் எடுத்துக் கொண்டு வருகிருர்கள்.

சில பெண்கள், பாரமான மூட்டைகளைத் தூக்கிக் கொண்டு போகிருர்கள்,

ஒரு மாது:- நமஸ்காரம் சாமியாரே! எந்த ஊரு...

சாது:- ஆசீர்வாதம்... எல்லாம் நமக்கு ஊரே......

மாது:- இந்தச் சண்டை எப்படி முடியும்...

சாது:- ஜெயம் நிச்சயம்......

மாது:- நம்ம பக்கம் தானுங்களே...

இன்னோர் மாது:- அவருதான்' எல்லா ஊரும் அவருக்குச் சொந்த ஊர் என்கிருரே....,எந்த



நாடுஜெயித்தா அவருக்கு என்ன?

சாது:- காஷாயம் தரித்தால் என்ன? கமண்டம் எடுத்தால் என்ன? நாட்டுப் பற்று பட்டுப்போய் விடுமா...பெண்ணே! உன் புருஷன்...

மாது:- (பயந்து) அவருக்கு ஒரு ஆபத்தும் வராதுங்களே,...

சாது:- நீட்டு கையை–மூடு கண்ணை ...(ரேகை பார்த்தபடி)ஆஹா ஹா உன் புருஷன் பேர், ரங்கன் தானே...

மாது:- ஆமாம்.........உங்க மகிமையே மகிமை......

சாது:- மூடு கண்களை......பிராண பயம் இல்லை. உன் புருஷனுக்கு... கண்ணைத்திற...

மாது:- பிராண பயம் இல்லையா...? ஆண்டவனே, இப்பத்தான் மனம் நிம்மதியாச்சு.

சாது:- பிராண பயம் இல்லை என்று மட்டும்தானே, சொன்னேன் அதற்குள்ளாகவா, ஆனந்தம்?

மாது:- ஐய்யய்யோ! என்னங்க சாமி விஷயம்?...

சாது:- உயிர் போகாது...ஆனல் அவனுடைய [illegible] ஒன்று துண்டிக்கப்பட்டுப் போகும். சம்போ! மகேஸ்வரா!...

மாது:- தெய்வமே! இந்தக் கதியா என் புருஷனுக்கு...இதுக்கு ஒரு விமோசனமும் இல்லையா...

சாது:- உண்டு உன் புருஷனுக்கு என்னென்ன பண்டம், பலகாரத்தின் மீது பிரியமோ, அவைகளை, 14 நாட்கள், இங்கு கொண்டு வந்து, நாகத்துக்குப் படையல் போடு—தோஷம் போகும்—கை போகாது.

மாது:- ஆகட்டுங்க....,ஆகட்டும்

(வேறு சில பெண்களும் கை காட்டுகிருர்கள்.

ஊரில் ஒரு தெரு, பெண்கள் தண்ணீர்க்குடத்துடன்)

ஒருவள்:- உள்ளதை உள்ளபடிச் சொல்கிருரடி...மகா சக்திவாய்ந்தவரடி இந்தச் சாது......

மற்றவள்:- என் புருஷனுக்கு முன்னே சண்டையிலே, ஒரு காது, போயிட்டுதே, அதைக் கூடச் சொன்னுரடி...

மாது:- பெரிய அதிசயம்தான்,

(அன்னம் இடுப்பில் கூடையுடன் வருகிருள்.)

அ:- என்னத்தடி கண்டுட்டிங்க அதிசயம்? ஆத்து மீனு ஆகாசத்திலே பறந்துச்சா?

மாது:- கேளண்டி, நடந்ததை. மரத்தடியிலே ஒரு சாமியாரு உட்கார்ந்திருக்காரு...

அ:- பெரிய அதிசயந்தாண்டி மரத்தடியிலே சாமியாரு உட்காரமே, உங்க மாமியாரா போயி உட்காருவா, அதிசயம் சொல்ல வந்தூட்டா, அதிசயம்.

மாது:- உன்னேடு, யாருடி பேசுவாங்க... இஷ்டமிருந்தா போய்ப் பாரேன்...

உள்ளதை உள்ளபடி சொல்ருரு ...என் புருஷன் பேரு...இவ புருஷனுக்கு காது போனது —நடந்தது, நடக்கப் போவது, எல்லாம் சொல்ருரு...

[அன்னம் செல்கிருள் சாதுவைக் காண.]

மரத்தடியில் சாது.

அன்னம் வரக்கண்டு பயந்து. கண்களை மூடிக் கொள்கிருன் பலராம்.

அ:- அட, நான் வந்த நேரமாப் பாத்தா, கண்ணை மூடிக்கொள்ளேணும், சாமியாரு. எப்ப, கண்ணைத் தொறப்பாரோ, தெரியல்லே. வீட்டிலே வேணவேலை கிடக்குது சாமி! சாமி—(உரத்தக் குரலில்) சாமீ!

(சாது கண்திறந்தபடி)

சா:- சாந்தியைக் கெடுத்துவிட்டாயே...

அ:- என்னங்க கோவிக்கறிங்க ஊரே உங்களைப்பத்தி புகழுது... தெரிசித்தா புண்யம்னுதானே வந்தேன், கோவிக்கறிங்களே......... (கையை நீட்டியபடி) என் கையைக் கொஞ்சம் பாருங்க.

(சாது, அவள் கை ரேகையைப் பார்த்தபடி)

சா:- பெண்ணே! நீ பெரிய அதிர்ஷ்டசாலி.

அ:- என்னங்க இது, அண்டப் புளுகு. எம்புருஷன் ஒரு அன்னக்காவடி. வேலை வெட்டிக்குப் போவாமே, சத்திரம் உண்டா, சாவடி உண்டான்னு சுத்திக்கிட்டு கிடக்கும்...

சா:- (முறைத்தபடி) யார்? உன் புருஷனு? அபசாரம்! அபசாரம்! அன்னம்......

அ:- (திடுக்கிட்டு) ஐயோ, என் பேரு, எப்படித் தெரிஞ்சுது.



சா:- ஆண்டவன் அருள். அன்னம், உன் புருஷன், சாமான்யமானவனில்லை, வீரன்......

அ:- இருங்க இருங்க சாமியாரே! நீங்க என்ன, என் கைரேகையைப் பார்த்தூட்டா இதெல்லாம் சொல்றிங்க

சா:- இதோபார், இது உன்புருஷன் ரேகை...இதுபுகழ்ரேகை...இரண்டும் ஒன்ருகச் சேர்கிறது பார்த்தாயா? உன்புருஷன் புகழோடு இருப்பான் என்று பொருள். அவன், மகாவீரன்.

அ:- (சிரிப்பை அடக்கிக்கொண்டு) எம் புருசனு? எம் புருசனையா, மகாவீரனுன்னு சொல்றிங்க. என்னங்கஇது, வேடிக்கையாஇருக்கு. எம்புருசன் வீரனு! அதுபாவம், சுத்த பயந்தாங்கொள்ளி—தொடைநடுங்கி...நான் 'கொஞ்சம் கோவமா, தொட்டுப் போட்டா, எட்டடிக்குத்தாவும்—நீங்க என்னுன்னு, அவரு, பெரிய வீரரு, சூரருன்னு சொல்றிங்க.

சா:- உன் புருஷனேடே அருமை பெருமை, உனக்குத் தெரியவில்லை. நாடே கொண்டாடப் போகிறது. இப்போதே யுத்த களத்திலே, அவன் வீரத்தைப் புகழ்கிருர்கள், எல்லோரும்.

அ:- அத்தே பட்டாளத்தோடே போகவைக்க, நான் பட்டபாடு எனக்கல்ல தெரியும். அழுமூஞ்சியைத் தொடைச்சி அக்கம் பக்கம் தெரிஞ்சா கேலி செய்வாங்களேன்னு சொல்லி, சட்டையை மாட்டி, பொட்டு இட்டு.

சா:- பாலும் பழமும் கொடுத்து......

அ:- (ஆச்சரியப்பட்டு) அடி அதெல்லாமும் தெரிஞ்சிருக்குதா ......நெஜந்தான்...ஆனு அதைப் போயி, வீரர்னு சொன்னு, விழுந்து விழுந்து சிரிக்கலாம்னு தாங்க தோணுது...

சா:- வீட்டிலே, சாதுபோல இருந்தான்...

அ:- ஐயோ, அதுக்கு வீட்டுக்குள்ளேயும் பயந்தான், வெளியேப் போனுலும் பயம்தானுங்க.

சா:- அதெல்லாம் பழய கதை. இப்போது உன் புருஷன் பெரிய வீரன். எட்டுத் தலைகளை வெட்டி வீழ்த்தினன், பட்டம் கொடுக்கப் போருங்க, பார்.

அ:- நெஜமாவுங்களா......

சா:- பொய் பேசாது, இந்த வாய்... நப்பாதவர் நரகம் போவார்கள்...

அ:- மன்னிச்சிடுங்கோ......இல்லாமலா சொல்லுவிங்க......காளைங்க மாதிரி துள்ளிகிட்டு பட்டாளத்துக்குப் போனுங்க பலபேரு; என் புருஷன் ஆமைமாதிரி நகர்ந்து போனரு......அங்கே......என்னடான்னு, சிங்கமா இருந்திருக்காரு...சூட்சமம் தெரியாமே, நான் கிடந்தேன்.

சா:- எந்தப் புற்றிலே எந்தப் பாம்பு இருக்குமோ யார் கண்டார்கள், என்ற பழமொழி தெரியாதா...

அ:- (சோகமாக) பாவம்! இவ்வளவு புகழ் பெறப்போறவரை நான்



என்னென்ன சொல்லி ஏசிகிட்டு இருந்தேன் தெரியுங்களா? சமயக் கட்டுப் பக்கம் போனு, உடனே கூச்சலிடுவேன் என்ன அது பெருச்சாளி மாதிரி, சட்டி பானையை உருட்டறேன்னு...... மனசு வெகு பாடுபட்டிருக்கும்...

சா:- பரவாயில்லே. அவன்பொறுமை சாலி. மன்னித்துவிடுவான், எதற்கும் ஒரு மண்டலம் மண்டி பூசை நடத்து.

அ:- மண்டி பூசைன்னு?

சா:- காலேயும் மாலேயும், உன் புருஷனை எண்ணிக்கொண்டு மண்டியிட்டு பூஜை நடத்து. அவனுக்குப் பிடித்தமான பண்டம், பலகாரம் படைத்து யாராவது, சாதுக்குக்கொடு.

[அன்னம் குப்பிட்டுவிட்டுச் செல்கிருள்

சில நாட்களுக்குப் பிறகு சாதுவின் இருப்பிடம் வளர்ச்சி அடைந்திருப்பது தெரிகிறது.

பெண்கள், பலகாரத் தட்டுகளுடன் வந்து, கும்பிட்டுவிட்டுப் போகிருர்கள்.

அன்னம் வருகிருள் கூடையுடன்.

சாது, உட்பக்கம் இருக்கிருர்.

அன்னம், மரத்தடியைச் சுத்தம் செய்கிருள்.

ஆசனத்தின் தூசியைத் துடைக்கிருள்.

கங்கணம் கிடைக்கிறது. ஆச்சரியப்படுகிருள். உள்ளே எட்டிப் பார்க்கிருள் வெளியே வருகிருள்...... கோபம்கொள்கிருள்! ஆகட்டும்! ஆகட்டும்! என்று விரலே ஆட்டியபடி, நிற்கிருள் சாது வருகிருர்.

ஏதுமறியாதபடி அன்னம் வணங்கிவிட்டு பலகாரத் தட்டை வைக்கிருள்.]

சாது:- பெண்ணே! உன் புருஷன் பிரம்மானந்தமாக இருக்கிருன்.

அன்னம்:- இருக்கும்ங்க......உங்க மகிமை இலேசானதா........சாமி! ஒரு விஷயம் சொல்லலாமா, கூடாதான்னு யோசிச்சு யோசிச்சுப் பார்த்தேன்......கடைசியிலே சொல்லியேபோடறதுன்னு தீர் மானிச்சுவிட்டேனுங்க.

சா:- என்ன விஷயம், அன்னம்,

அ:- எனக்கு நீங்க இப்படி மரத் தடியிலே கிடக்கறது கொஞ்சம் கூடப் பிடிக்கல்லீங்க......

சா:- பெண்ணே! சாதுக்களுக்கு மரத்தடியும் ஒன்றுதான் மாளிகையும் ஒன்றுதான்.

அ:- அது சரிங்க. ஆனு, வீடு வாசல் எதுவும் கிடைக்காது போனு, இப்படி இருக்கலாம், உங்களோட, தவசு எப்படிப்பட்டது? மகிமை எப்படிப்பட்டது? நீங்க போயி இங்கே இருந்தா...

சாது:- பரவாயில்லே, அன்னம்...

அ:- அது சரியில்லேங்க, நீங்க நம்ம வீட்டுத் திண்ணையிலே வந்து குந்திக்கொள்ளுங்களேன் — நான் உங்களுக்கு சகல பணிவிடையும் செய்துகிட்டு இருக்கறேன். எங்க பக்கத்துப் பெண்களெல்லாம்கூட புதுசு புதுசா வருவாங்க, பூஜை செய்ய...

சாது:- ஏன், அவர்களும் இங்கேயே வரலாமே...

அ:- ஏன், நீங்கத்தான் அங்கே வந்தா, என்னவாம்?

சாது:- சரி......நீ இவ்வளவு பக்தியுடன் கூப்பிடுகிறபோது...

[அன்னம் பூஜை சாமான் களே எடுத்துக்கொள்கிருள். சாது, பின் தொடர்கிருன்.

அன்னம் வீட்டுத் திண்ணே.

அங்கு, ஆசனம் போட்டு, சாதுவை அமரச்சொல்கிருள்.

பலரும் வந்து கும்பிடுகிருர்கள். அன்னம் அவர்களிடம்]

அ:- அவரோட தவசு கெட்டு கெட்டுவிடப் போவுது. வந்தமா பார்த்தமா, கும்பிட்டமான்னு, போங்க...

[சாது கண்களே மூடிக் கொள்கிருர்.

ஒரு சிறுவன் மீசை வைத்துக்கொண்டு, ராஜ நடை நடையுடன் வருகிருன்.

அன்னம், சிறுவனேக் கண்டு சிரித்தபடி]

அ:- இது, என்ன வேஷம்?

[என்று கேட்டதும் சாது, பதறிக் கண்களைத் திறந்து பார்க்க]

அ:- பாருங்க சாமி பாரே! வேஷம் போட்டுக்கிட்டுத் திரியுது.

[நிம்மதி அடைந்து கண் களே மூடிக்கொள்கிருர் சாது



[அன்னம் ஒரு செம்பில், தண்ணீர் வைத்துவிட்டு]

அ:- சாமி! ராத்திரிக்கு, தாகமா இருந்தா, குடிங்க......

[இரவு வளருகிறது. சாது படுத்துக்கொள்கிருர்.

அன்னம் வெளியே வந்து பார்த்துவிட்டு ஆகட்டும், ஆகட்டும் என்று ஜாடை காட்டியபடி, உள்ளே போகிருள்.

சாது தூக்கம் பிடிக்காமல் படுத்துப் புரள்கிருர்.

மெள்ளத் தூங்குகிருன்]

அ:- (அலறியபடி வெளியே வந்து) சாமியாரே! சாமியாரே!......

[சாது பதறியபடி]

சாது:- என்ன? என்ன?

அ:- (பயந்தவள் போல நடித்து) உள்ளே, ஏதோ ஒரு உருவம், கருப்பா, உலவுகிற மாதிரியா இருக்குதுங்க.

[பயத்தால் தண்ணீரை எடுத்துக் குடித்துவிட்டு]

சாது:- உருவமா? உலவுதா?

[கலக்க மடைகிருன்]

அ:- உலாவற மாதிரியா இருந்துது —விழிச்சிக்கிட்டேன் —தேடிப் பார்த்தேன் ஒண்ணும் தட்டுப் படலிங்க.

சாது:- தூக்கக் கலக்கமா இருக்கும் ..இந்தா விபூதி நெற்றியிலே தடவிக் கொண்டு படுத்துக் கொள்ளு. பயம் போய்விடும்.

[விபூதிக்குப் பதிலாக பலகாரம் தர, அன்னம் சிரிக்க, சாது தன் தவறைத் திருத்திக்கொள்கிருன். விபூதி தர, அன்னம் அதைப் பூசிக் கொண்டு, மேலும் தயக்க மடைந்தவள் போல, அங்கேயே நிற்கிருள்.]

சாது:- என்? பயமாகவே இருக்கிறதா...

அ:- ஆமாங்க...

[கேட்கத் தயக்க முற்றுக் கேட்பவள் போல.]

என்னங்க...உள்ளே வந்து படுத்துக்கொள்றிங்களா.........பேச்சுத் துணையா...பயம் போய்விடும்...

[சாது, சரி என்று சம்மதித்து உள்ளே செல்கிருர்.

அன்னம் வீடு உட்புறம்.

ஒரு கயிற்றுக் கட்டிலின் மீது படுக்கை போடப்பட்டிருக்கிறது.

அதிலே அன்னம் ஜாடை காட்ட, சாது அதிலே படுக்கிருன்.

சற்றுத் தொலைவில், ஒரு பென்ஞ்சியின் பேரில் அன்னம் படுக்கிருள், சற்றுநேரத்தில்]

அ:- (மெல்லிய குரலில் சாமியாரே தெரியிதா—அதோ...அதோ...... (ஒரு பக்கம் காட்டி) உருவம் உலாவுது பாருங்க...

சாது (பயந்து சுற்றி முற்றும் மிரள மிரளப் பார்த்தபடி) ஐயோ உருவமா? தெரியலையே...

அ:- காணும்.........மறைந்துவிட்டது...படுத்துக்கொள்ளுங்க சாமி...

[கூறிவிட்டு அன்னம் படுக்கையில் உட்கார்ந்து கொள்கிருள்.]

சாது:- உருவம், எப்படி இருக்குது?

அ:- சரியாகத் தெரியலிங்க...யாரோ ஒரு ஆள் நடமாடற மாதிரியா இருக்கு. தலையிலே ஒரு கிரீடம் தெரியுது ......கையிலே, வில்லு தெரியுது.

சா:- (கவனமாகக் கேட்டபடி) முருகனே!

அ:- இல்லிங்க. ஆறுமுகம் இல்லை. மயிலையும் காணும்.

சா:- அப்ப, முருகனில்லா...

அ:- வில்லிலே இருந்து அம்பு சரமாரியாக் கிளம்பி வருதுங்க...

சா:- பயந்து (அம்புவருதா? எந்தப் பக்கம், எந்தப்பக்கம்...

அ:- எந்தப் பக்கத்திலே இருந்து புறப்பட்டாலும் எல்லா அம்பும்...

[வெட்கப்படுவது போலப் பேச்சை நிறுத்திக் கொள்ள சாது மேலும் மிரண்டு]

சா:- எல்லா அம்பும்...?

அ:- (கொஞ்சம் பாவனையில் போங்க, சாமியாரே கிளரிக் கிளறிக் கேட்கறிங்க. எல்லா அம்பும்...... (தன் இதயத்தைக் காட்டி) இங்கேதான் வந்து பாயுது...

சா:- அம்பு பாயுதா? அடச்சிவமே!

அ:- (தடித்த குரலில்) ஆமா அம்பு வந்து பாய்கிறபோது...... (கண்களை மூடி ஆனந்தப்படுவது போலாகிருள்.)

சாது:- நீ சொல்வது விளங்கவில்லையே......ஒரு வேளை எமதர்மனே......உயிரைக் கொண்டு போக அம்பு போடருனே.

அ:- நீங்க ஒரு பைத்யம். யமன் பாசக்கயிறு அல்ல வீசுவான். அம்பல்லவா வருது....ஒண்ணும் தெரியாத மாதிரிப் பேசறிங்களே. அம்பு யார் போடுவாங்க...

சா:- யாரு?

சா:-(மோக மூட்டும் பார்வையுடன்) மம்முதன்...

சா:- (திடுக்கிட்டு) அடப்பாதகீ! பாவீ!

அ:- ஏன், ஏன் சாமியாரே, ஏசறிங்க. மன்மத பாணமடா! மார்பைத் துளைக்குதடா!ன்னு என் புருஷன் ஒரு பாட்டுக் கூட பாடும்.

சா:- (கோபமாக) எதுக்குப் பாடினுன்? இப்படி நீ பாதி ராத்திரியிலே ஒரு அன்னிய புருஷன் எதிரே பாடிக் காட்டவா? அடி துரோகி! துராத்மா! காமாந்தகாரம் பிடித்தவளே!

[அன்னம் சாது அருகே சென்று]

அ:- நான் என்ன செய்யட்டுங்க. அந்தப்பாவி...... (இருதயத்தைப் பிடித்தபடி) பாணத்தைப்போட்டபடி இருக்கிருனே.

சா:- போடுவாண்டி போடுவான் விபசாரி! உன் புருஷன் மகா உத்தமன். அவன் தேசத்துக்காகச் சண்டை போடப் போயிருக்கும் நேரத்தில்......(பதறி) ஆஹா ஹா! இப்படித் துரோகம் செய்வதா? நரகத்திலே, கொதிக்கிற எண்ணெக் கொப்பறையிலே போட்டு வாட்டுவார்கள் உன்னை,

அ:- (அலட்சியமாக, எப்பவோ வாட்டப்போறகதையைச் சொல்றயே சாமியாரே! இப்பவே அப்படித்தான் இருக்கு எனக்கு.

[பக்கத்தில் உட்கார சாது பதறி எழுந்திருக்கிருன்]

சா:- அடி படுபாவி மனம் பதறுகிறதே.

அ:- (கேலியாக) என்னய்யா இது, நீ என்ன எம் புருஷனு இப்படி, இதுக்கு, பதை பதைக்கிறயே. நான் உன்னை வீட்டுக்கு வான்னு கூப்பிட்டப்பவே, உனக்குவிவரம் புரியலையா...

சா:- எப்படிப்பட்ட காரியம் செய்யத் துணிந்தாய். உன் புருஷன் காதிலே இது விழுந்தால்.

அ:- (மேலும் அலட்சியமாக) அதுக்குப் பயப்படறியா? இதோ பாரு, என் புருஷன், சுத்த இரண்டாங் கெட்டான்-நான் என்ன சொன்னுலும் நம்பிவிடும்- இவரு பெரிய தவசி. நீங்க சண்டைக்குப் போயிருந்தபோது இவருதான் எனக்குத் துணையாக இருந்தாருன்னு, சொன்னு, உன் காலிலே கூட விழுந்து கும்பிடும். அது சுத்த ஏமாளி.

சா:- சீ! நீ இப்படிப்பட்ட கெட்ட நடத்தைக்காரின்னு தெரிஞ்சிருந்தா, நான் இங்கு வந்திருக்கவே மாட்டேன்.

அ:- அடச்சே! நீ இப்படிப்பட்ட பைத்யம்னு தெரிஞ்சிருந்தா உன்னை நான் இங்கே சேத்தே இருக்க மாட்டேன்.

சாது:- சண்டாளி! பிடி சாபம்...

அ:- ஆமாம்—வாயை மூடிக்கிட்டு கிட......சாமி யாரு....காவியைக் கட்டிக்கிட்டு, வேஷத்தைப் போட்டுகிட்டா சாமியாருஆயிட்டாரு...மண்டி பூசை-மகேஸ்வர பூசை...(அருகே சென்று கன்னத்தில் இடித்து) ரேகை சாஸ்திரமல்லவா பார்க்கிருரு, ரேகை சாஸ்திரம்.

[தலையில் குட்டியபடி உள்ளதை உள்ளபடி சொல்கிறவரு—]

[சாது திகைத்து]

சா:- அடி பிசாசே! பேயே!

அ:- (மிரட்டி) பேசாதே-கூவாதே, உன் இலட்சணத்துக்கு பேச்சு வேறேயா பேச்சு...

சா:- உத்தமிகள் பிறந்த நாட்டிலே, கணவனைக் கண் கண்ட தெய்வமென்று கொண்டாடும் நாட்டிலே, கள்ளி! நீ வந்து பிறந்தாயே......

[சாதுவைப் பிடித்துத்தள்ளிய படி]

அ:- வீரனும் சூரனும் பிறந்து உயிரையும் கொடுத்து உரிமையைக் காக்கப் போராடும் நாட்டிலே நீயும் பிறந்தாயே.

(தலைப்பாகையைத் தட்டிவிட்டு)

காவி மூண்டாசு!

(கழுத்து மாலைகளை அறுத்தெறிந்து)

ருத்திராட்ச மாலைகள்

(தாடியைப் பிய்த்தெறிந்து)

வேஷம்—ஊரை ஏய்க்க.

(உடையைக் கிழித்து)

சாமியாரு உடை.

(சாது வேஷம் கலைந்து பலராமன் சுய உருவில் நிற்க)

பண்டார வேஷம் போட்டுகிட்டு, போறவங்க வாரவங்களை ஏச்சிக்கிட்டு......

[பலராமன் கெஞ்சுகிருன்]

ப:- வேண்டாம்......அன்னம் வெளியே சொல்லாதே...மானம் போய்விடும்.......பட்டாளத்திலே இருந்து ஓடிவந்தது தெரிஞ்சா நீ சேர்க்கமாட்டயேன்னு பயந்துகொண்டுதான் இப்படி, பண்டார வேஷம் போட்டேன்...

அ:- உன்னேட தந்திரத்தை யாரும் கண்டுபிடிக்கமாட்டாங்க என்கிற தைரியம்.

(மடியிலிருந்து கங்கணத்தை எடுத்துக்காட்டி)

உன் குட்டு இதனலே அல்லவா வெளிப்பட்டுது.

(பலராமன் பதைக்க)

இது, நாம்ப அவருக்குக்கொடுத்த கங்கணமாச்சே, இது எப்படி பண்டாரத்திடம் கிடைச்சுதுன்னு யோசிச்சு, உள்ளே எட்டிப் பார்த்தா, நீஅப்பத்தான் தாடியை ஒட்டிக்கிட்டு இருக்கறே. கோவம் பொங்கிவந்தது. அல்ப சொல்பமா இருக்கப்படாது நம்மோட வேலை. என்றுதான், இங்கே கூட்டிகிட்டு வந்தேன்.

ப:- படாதபாடு படுத்திவிட்டயே...

அ:- இதோ பாரு, ஆம்பிள்ளை தந்திரம் எப்பவும் பிரமாதமில்லை. பொம்பளைங்களும் தந்திரம் செய்யறதுன்னு ஆரம்பிச்சா அவ்வளவுதான். ஆம்பிள்ளைங்கபாடு அபத்தா முடியும், நீதான் பாத்தயே, இப்ப. எப்படி இருந்தது நம்ம மம்முத பாணம்.



ப:- (வெட்கத்துடன்) போகுதுபோ! அன்னம். சும்மா அதையே சொல்லிக்கேலி செய்யிறே...

அ:- புத்தியும் யுக்தியும் ஆம்பிள் ளைங்களுக்குத்தான் என்று எண் ணிக்கொள்ளாதே.

ப:- அன்னம், என் மனசு என்னு பதறிச்சி தெரியுமா? நம்ம அன் னமா இப்படிப்பட்ட நடத்தைக் காரின்னு நினைச்சி, துடிச்சிப் போனேன் போ, துடிச்சி.

அ:- நானு, படுபடுன்னு மனசுக் குள்ளே சொல்லிகிட்டேதான் இருந்தேன்.

ப:- பட்டாளத்திலே என்னுலே இருக்க முடியல்லே அன்னம்...

அ:- இனிபட்டாளத்துக்குப் போறதா நீயே சொன்னுலும் நான் சம்மதிக்கப்போறதில்லேயே .........

ப:- (ஆவலாக) அப்படியா அன் னம்......

அ:- உன்னுட்டாம், பயந்தாங் கொள்ளிகள் இருந்தா, மத்தது மல்ல கெட்டுப்போயிடும், வீராதி வீரரு!

(பாசத்தோடு பார்க்க)

அ:- பார்வையைப்பாரு. பார்வையை போ! போ! படுத்துத் தூங்கு,

[படுத்துக்கொள்கிருன்)

அ:- என்னு, ஒண்ணு கேட்க மறந்துவிட்டனே...... உனக்கு எங்கே கிடைச்சுது இந்த வேஷ சாமானெல்லாம்.

ப:- ஊர்க் கோடியிலே, மரத்து இடுக்கிலே...

அ:- அங்கே எப்படி இருக்கும்?

ப:- பண்டாரங்க பலபேர் உண்டே யாரோ ஒருத்தனுடையது.

அ:- பொய்த்தாடி?

பா:- ஆமாம்—நிஜப் பண்டாரத்துக் குப் பொய்த்தாடி ஏன்?

அ:- இதிலே என்னமோ சூது இருக்கு...வா, அந்த இடத்துக் குப் போய்ப் பார்ப்போம்.

ப:- இந்த நேரத்திலேயா...?

அ:- நான்தான் கூட வர்ரனே பயம் என்ன வா வா.

இருவரும் செல்கின்றனர். மரத்தடி சேருகின்றனர். யாரோ வருகிற காலடிச் சத்தம் கேட்டு மறைந்து கொள்கின்றனர்.



ஒருவ:- பண்டார வேஷத்துக்கான சாமானை மூட்டை கட்டி இங்கே வைத்திருந்தேன், காணமல் போய்விட்டது.

இன்னெரு:- நம்ம ஆசாமிதான் எடுத்திருப்பான்.

மற்:- அண்ணேன்! இந்த வேஷத் திலேதான் வேவு பார்க்க தோதா இருக்கு.

இன்:- ஏமாந்ததுங்க, காலிலே விழுதுங்க, காரியம் கனகச்சிதமா முடியுது.

மற்:- நம்ம கூட்டம் பூரா, வந்து சேரவேணும்......

இன்:- பூமடத்துக்குத்தானே.

மற்:- வேறே எங்கே......? அங்கே தான்,

இன்:- சரி...வாங்க, போகலாம்.

[அவர்கள் சென்ற பிறகு]

அ:. பாவிப்பயலுங்க, பண்டார வேஷம் போட்டுகிட்டு, உளவு பார்க்கருங்க...

பா:- ஆமா...

அ:- சரி, சரி புறப்புடு...

ப:- வீட்டுக்குத்தானே...

அ:- ஆமாம்...விருந்துக்கு...

கொத்தவால் வீடு.

கொத்தவால் தூக்கம் வராமல், உலவிக்கொண்டி ருக்கிருர்.

அன்னமும் பலராமனும் செல்கிருர்கள்,]

அ:- எஜமான் எதிரி நாட்டு ஆளுங்க வந்திருக்காங்க...

கொ:- உளவாளிகளா? எங்கே?

அ:- பண்டரா வேஷத்திலே இருக் கிருங்க, பூமடத்திலே எல் லோரும் கூடப் போருங்களாம்.

ப:- அவங்க இரகசியமாப் பேசிக் கிட்டு இருந்ததை நாங்க ஒட்டுக் கேட்டுக்கிட்டு இருந்தோம்......

அ:- இவரு, என் புருஷருங்க. பட் டாளத்திலே இருந்தாரு...

[பலராமன் பதற]

உடம்புக்கு குணமில் லேன்னு வீடு வந்திருக்கா ருங்க. இவர்தான் உளவா ளிங்க விஷயம் கண்டுபிடிக்க

பண்டார வேஷம் போட்டுக் கிட்டு திரிஞ்சி...

கொ:- கெட்டிக்கார ஆசாமி! போர் வீரர் மட்டும் போதாது, யுத்தத்தில் ஜெயிக்க யுக்தியும்வேண்டும். உன் புருஷனுக்குப் பரிசு தரப்படும்...பூமடமா...

[கைதட்ட வேலையாள் வருகிருன். பத்து இருபது வீரர்களைக் கூப்பிடு.]

[போர் வீரர்கள் வர]

கொ:- என்னோடு வாருங்கள்...

[பூமடம் இருளடைந்து இருக்கிறது,

போர்வீரர்கள், ஒவ்வொருவராக வருகிருர்கள். மறைந்துகொள்கிருர்கள்.

பண்டாரங்கள் பஜனை பாடியபடி உள்ளே செல்கின்றனர்.

பாய்ந்து அவர்களைப் போர்வீரர்கள் பிடித்துக் கொள்கின்றனர். வேஷம் கலைகிறது. விலங்கிடப்படுகிறது.]

## இரக்கமும் தகுதியும்

ஒருமுறை நெப்போலியன் தனது படைவீரன் ஒருவனுக்கு அவன் செய்த தவற்றுக்காக கடும் தண்டனையை விதித்தார். இதையறிந்த படைவீரனின் தாயார் நெப்போலியனிடம் வந்து தம் மகனுக்குக் கருணை காட்டும்படி வேண்டினுள்.

"உனது மகன் இக்குற்றத்தை இரண்டாம் முறையாகச் செய்கிருன்! பார்க்கப்போனுல் நியாயப்படி இதைவிடச் சற்று கடுமையான தண்டனையை அவனுக்கு விதித்திருக்க வேண்டும்" என்ருன் நெப்போலியன்.

"உங்களிடம் நியாயத்தை யார் கேட்டார்கள்? இரக்கம்தானே காட்டச் சொல்கிறேன்!" என்று இறைஞ்சுகிருள் வீரனின் தாய்.

"இரக்கம் காட்டக் கூடத் தகுதியில்லாதவன் உன் மகன்!"— கனத்த இதயத்திலிருந்து கடுஞ்சொல் வெளிப்பட்டது.

'மன்னவா! கருணை என்பது தகுதியைப் பார்த்துச் செய்யப்படுவதல்ல!'' என்ருள் தாய், கண்களில் நீர் வழிய.

நெப்போலியனின் கல் மனமும் அக்கணமே இரங்கிவிட்டது.

—''படித்தவன்.''

கொத்தவால் பலராமனை தட்டிக்கொடுத்து, ஒருசிறு பணமுடிப்பு தருகிருர். பலராமன் அதை அன்னத்திடம் தரும்படி ஜாடை காட்டுகிருன், அன்னம் பலராமனிடம் தரச் சொல்லுகிருள், கொத்தவால் மகிழ்ச்சியுடன்.


கொ:- உன் கணவன், செய்த இந்தத் தொண்டு சிலாக்கியமானது ...இப்படிப்பட்டவனைப் புருஷனுகப் பெற்ற நீ, பாக்யசாலி.

[பணமுடிப்பைத் தர, இருவரும் வீடு செல்கின்றனர்.]


நோயற்ற நீண்ட நல்வாழ்வுக்கு!

சித்தர் நவலோக கல்பம்

தங்கம் வெள்ளி, தாம்பரம், மற்றும் பல உலோகங்கள், அனேக அபூர்வ மூலிகைகள், மருந்துப் பொருள்களுடன் பல வருட ஆராய்ச்சிக்குப்பின் உருவானது.



டாக்டர் சாது வி. நாராயணசாமி பிள்ளையின்
ஸ்ரீ ராஜராஜேஸ்வரி சித்த வைத்தியசாலை
—[REGD]—
307 / 308, திருவல்லிக்கேணி ஹைரோடு,
திருவல்லிக்கேணி, சென்னை-5
தொலைபேசி எண்: 84786

கிளை வைத்தியசாலை:
மாமண்டூர் வடபாதி, பாலாற்றங்கரை சமீபம், செங்கற்பட்டு ஜில்லா.

ஆஸ்துமா, மதுமேகம், (டையாபடீஸ்) T. B. குஷ்டம், வெண் குஷ்டம், யானைக்கால் மற்றும் நாள்பட்ட கொடிய வியாதிகளுக்கும்,
டாக்டர் சாது வி. நாராயணசாமி பிள்ளை அவர்களே
பிரதி ஞாயிறு, செவ்வாய், வியாழக்கிழமைகளில் சென்னையிலும்
பிரதி திங்கள், புதன், வெள்ளி, சனிக்கிழமைகளில் கிளை வைத்தியசாலையிலும்
நோயாளிகளை நேரில் கவனித்து மருந்து கொடுக்கிருர்.



# காரணகர்த்தா

— சபரி —

பிரேமா வானத்தைப் பார்த்தாள். நட்சத்திரங்கள் இலேசாக மறைந்து கொண்டிருந்தது. மணி குறைந்தது நான்காவது இருக்கும். அவள் வீட்டைவிட்டுக் கிளம்பி ஒரு மணி நேரத்திற்கு மேல் இருக்கலாம். கிளம்பும்போது மணி மூன்று. ஆறுமைல்கள் 'நடந்தே' வந்திருக்கிருள். ஆனுல் நாளை உலகம் அவளைப்பற்றிச் சொல்லப் போவதோ 'ஓடிப்போனவள்' என்று!

நீண்ட நெடியபாதையைப்பார்த்து ஒரு பெருமூச்சு விட்டாள். இன்னும் அரை மணி நேரம். பிறகு அவள் ஒரு புதுப்பறவை. அவளுக்கோ அது ஒரு புதுப்பாதை. நரகத்தில் இருந்து விடுதலை கிடைத்தது விடுதலை தானுக கிடைக்கவில்லை, தானுக விடுவித்துக் கொண்டாள்.

அவள் வாழ்ந்த அந்த ஏழு வருட வாழ்க்கை! அவள் வாழ்ந்தாள் என்பதைவிட உயிரோடிருந்தாள் என்பதுதான் பொருந்தும்.

இனி வாழப்போவது புதிய வாழ்க்கை.

பஸ் வந்து விட்டது பிரேமா பஸ்ஸில் அமர்ந்து விட்டாள். அவள் கண்கள் அவனைத் தேடின. அவனைக்காணவில்லை, சொன்னவன் வரவில்லை.

ஏமாற்றி விட்டான்.

ஏமாற்றப்பட்டாள்!

இனி எங்கே போவது? வீட்டிற்குச் செல்ல முடியாது. கண்டக்டர் குரல் கொடுத்தார்.

''எங்கே போறீங்க''

'சென்னைக்கு ஒரு டிக்கட்.'' ஆம் சென்னை சென்று புதிய வாழ்க்கை வாழலாம் என்று அவன்தான் சொன்னுன். அவன் இப்போது வரவில்லை. அவளுக்கு எங்கே போவது என்று புரியவில்லை அதனுல் 'அவன்' சொன்ன சென்னைக்கே ஒரு டிக்கட் வாங்கி விட்டாள். 'கெட்டும் பட்டணம் சேர்' என்ருர்கள். அவள் பட்டணம் தான் போகிருள். ஆனுல் அவள் கெட்டவளல்லவே! ஆனுல் கெட்டப் பெயருடன் செல்கிருள். 'ஓடிப்போனவள்' எனும் கெட்டப் பெயருடன்.

கிராமத்தில் சித்தியின் கொடுமையில் இருந்து மீள அவளுக்கு உண்மையான துணையேதும் இல்லை என்பதால்தான் புதிய துணையுடன் வாழலாம் என்ற ஆவலில்தான், ஊரை விட்டே கிளம்பி விட்டாள். அவன் இன்று வரவில்லை, ஏமாற்றி விட்டான். நம்பிய புதிய துணையும் வரவில்லை. வழித்துணை இல்லாத வாழ்க்கை ஆகிவிடுமோ அவள் வாழ்க்கை!

சென்னை புதிய இடம். அவளுக்கு எங்கே போவதென்றே புரியவில்லை. பலதரப்பட்ட மக்கள், ஏதோ ஒரு புதியஉலகத்தைப்பார்ப்பதுபோன்று ஒரு திகைப்பு!

இவ்வளவு பெரிய ஊரில் தனக்கு வாழ ஒரு வழி கிடைக்காமல் போய் விடுமாஎன்று அவளுக்கு நம்பிக்கை. ஏதோ ஒரு பஸ் வந்து நின்றது.

அவள் ஏறி ஓர் இடத்தில் அமர்ந்தாள். அவளுக்குப் பக்கத்தில் ஒரு நடுத்தர மாது அமர்ந்திருந்தாள்.

பிரேமா மெல்ல பேச்சை தொடங்கினுள்.

''அம்மா இந்த பஸ் எங்கே போகும்?''

''நீ எங்கம்மா போகவேண்டும்''

'' எனக்குப் போவதற்கென்று ஓர் இடமில்லையம்மா. நான் வெளியூர். இங்கு எவரையும் எனக்குத் தெரியாது. நீங்கள்தான் உதவ வேண்டும்''.

''அம்மா கவலைப்படாதே. என் பெயர் ஜானகி. நீ என்னுடன் என் வீட்டிற்கு வா. மற்றவை பிறகு பார்க்கலாம்'' என்று சொல்லிவிட்டு எங்கோ ஓர் இடத்திற்கு இரண்டு டிக்கட்டுகள் வாங்கினுள்.

பஸ் ஓர் இடத்தில் நின்றது. ஜானகியுடன் இறங்கினுள் பிரேமா.

ஜானகியின் வீடு மிகச்சிறியது. ஆனுல் வீடு சுத்தமாகவும், அழகாகவும் இருந்தது. வீட்டிற்கு முன் பக்கத்தில் ஒரு பெரிய கொட்டகை போட்டிருந்தது. கீழேவழவழப்பான தரையும் இருந்தது. வீட்டினுள் நுழையும் போதுதான் பிரேமா அந்தப் பெயர்ப் பலகையை கவனித்தாள். ''ராமச்சந்திரன்'' — 'டான்ஸ் மாஸ்டர்'.

* * *

''என்னுடைய பனிரெண்டாவது வயதில் நான் என் அன்னையை இழந்தேன். அது எவ்வளவு பெரிய இழப்பு என்று அப்போது எனக்குத் தெரியவில்லை. அப்படிப்பட்ட வயது என்னுடையது. எல்லோரும் அன்று அழுதார்கள். எல்லோரும் என்பதற்காக நானும் சேர்ந்து அழுதேன், அப்போது. சில வருடங்களுக்குப் பிறகுதான் அது எவ்வளவு பெரிய இழப்பு என்று எனக்குப் புரிந்தது.

அதுவும் அந்த இடத்திற்கு ஒரு புதியவள் வந்த பிறகுதான்—என் சிற்றன்னை வந்த பிறகுதான், அது எனக்குப் புரிந்தது.

என் அன்னையை இழப்பதற்கு முன் என் இதயம் எவ்வளவு மென்மையாய் இருந்ததோ அதற்கு நேர்

மாருகப் போய்விட்டது. என் அன்னையின் மறைவுக்குபின் என் சிற்றன்னை எனக்கிழைத்த கொடுமைகளுக்குப் பிறகு என் இதயம் கல்லாகவே மாறிவிட்டது. என் தந்தையும் இறந்தார் இரண்டு வருடங்களுக்குமுன். என் சிற்றன்னையின் கொடுமை தாங்க முடியாத அளவிற்கு நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே போயிற்று. இந்த சலித்துப் போன வாழ்க்கையில் நான் உழன்றுகொண்டிருந்தபோதுதான் அவனை சந்தித்தேன். என்னை ஏமாற்றியதற்கு நான் 'அவன்' என்று அழைப்பதில் ஒன்றும் தவறில்லை என்று நினைக்கிறேன். ஒரு வாரத்திற்கு முன் என் கிராமத்திற்கு வந்தான். எப்படியோ சந்தித்தோம். என்னை நம்ப வைத்தான். என்னை நம்ப வைத்தான் என்பதைவிட, நான் எவரையும் நம்பும் நிலையில் இருந்தேன் என்று சொல்வதுதான் பொருந்தும். அவனை நம்பி ஓடி வந்தேன். என்னை ஏமாற்றி விட்டான். ஒரு பெண்ணுக்குள்ள தைரியம் அவனுக்கில்லை. ஒரு கோழையை நம்பி வந்த எனக்கு இது ஒரு சரியான பாடம். வாழ்க்கைச் சுழலில் அகப்பட்டுத் தத்தளித்துக் கொண்டிருந்தவள் நான். சுழலில் இருந்து தப்புவதற்கு முயன்றுகொண்டிருந்த என் கைக்குக் கிடைத்தது மரத் துண்டு ஒன்று.

அது என்னை கரை சேர்த்தால் போதும் – உயிர் பிழைத்தால் போதும் என்றுதான் நான் நினைத்தேன் — எவரும் நினைப்பர். கரை என்று ஒன்று இருந்தால் அதில் நல்ல நிலமும் இருக்கும், சேறும் சகதியும் நிறைந்தநிலமும் இருக்கும். என் கையில் கிடைத்த துண்டு என்னை சேறும் சகதியும் நிறைந்த இடத்தில் கரை சேர்த்தால் அதற்கு நானு பொறுப்பு?

அம்மா, எனக்கு ஏற்பட்ட ஏமாற்றங்கள் எத்தனையோ, அதனால் இந்த ஏமாற்றம் எனக்கொன்றும் பெரிதாகத்தெரியவில்லை, என்னைப் பொறுத்த வரையில் வாழ்க்கை என்பதற்கு பொருளே ஏமாற்றம்தான்.

''அம்மா உங்களுக்கு நன்றி சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். உங்களைச் சந்திக்கவில்லையென்ருல், நான் என்ன ஆகியிருப்பேன் என்று எனக்கே புரியவில்லை''

'அம்மா பிரேமா! எல்லோருமே வாழ்க்கையின் ஓர் கட்டத்தில் ஏமாற்றத்திற்குள்ளானவர்கள்தான். என்ருவது ஒருநாள் அவர்கள் வாழ்க்கையில் ஒரு மாற்றம் வந்துதான் தீரும். நீ இங்கே மகிழ்ச்சியுடன் இரு. உனக்கொரு வழி கிடைக்காமலா போகும்?'' 'வா சாப்பிடலாம்' என்று அழைத்துக் கொண்டு சென்ருள் ஜானகி.

பிரேமா சென்னை வந்து சேர்ந்து ஏழு வருடங்கள் ஓடிவிட்டன. இன்று அவள் வாழும் வாழ்க்கை! அவளுக்கே வேடிக்கையாக இருக்கும். இன்று அவள் பெயர் பிரேமா அல்ல. 'பிரேமலதா'. அவள் இன்றெரு நடன நடிகை. பல படங்களில் சிறு சிறு வேடங்கள் செய்துகொண்டிருந்தாள். பளபளப்பான வாழ்க்கை. அவளுக்கென்று சொந்தமாக ஒரு வீடு. அவளைத் தேடி வருவோரும் போவோரும் மிக அதிகம். அவளுக்குத் துணையாக ஓர் கிழவி வீட்டிலேயே இருந்தாள். இப்படியொரு வாழ்க்கை தேவையா என்று தனக்குத்தானே பலமுறை கேட்டிருப்பாள், அவள். பதில் இந்த வாழ்க்கை நானுக தேடி பெற்றுக்கொண்டதல்ல. இந்த வாழ்க்கை முறைக்கு அவள் துரத்தப்பட்டாள் பலரால். ஆனுல் எவரையும் குறைசொல்ல அவள் நினைக்கவில்லை. ஏனென்ருல் எவரையும் குறை சொல்வதில் இந்த வாழ்க்கையில் இருந்து தன்னை மாற்றிக்கொள்ள முடியாது என்பது அவளுக்குத் தெரியும். திரும்ப முடியாத பாதை அவள் சென்றுகொண்டிருப்பது!

அவள் ஒன்றும் பெரிய நடிகை அல்ல. அதனுல் அவளுக்குப் படப்பிடிப்புக்குச் செல்லும்நேரம் குறைவுதான். ஓய்வு நேரங்களில் அந்த மாடி அறை ஜன்னல் அருகில் அமர்ந்து அடுத்த வீட்டைப் பார்த்துக் கொண்டிருப்பாள் என்பதைவிட அடுத்தவீட்டு பாலுவுக்கு தரிசனம் கொடுப்பாள் என்பதே பொருந்தும். பாலு ஓர் கல்லூரி மாணவன். கல்லூரி செல்லும் நேரத்தைத்தவிர, மற்றநேரங்களில் அவனும் அந்த மாடியறையில்தான் இருப்பான். இரண்டு வீட்டு மாடிக்கும் உள்ள இடைவெளி மிகக் குறைவு. பல நேரங்களில் அங்கிருந்தபடியே இருவரும் பேசிக் கொள்வர். உடல் வளத்தில் பாலு ஒரு பெரிய மனிதன். ஆனுல் உள்ள வளர்ச்சியிலோ, அவன் ஓர் குழந்தை. அவளுக்குப் பிடித்தது அவன் குழந்தை மனம்தான்!

ஆங்கில இசைத்தட்டின் ஓசை அடுத்த வீட்டில் இருந்து மிதந்து வந்தது. பிரேமாவுக்குத் தெரியும், பாலு கல்லூரியில் இருந்து வந்துவிட்டான் என்று.

பாலு கைப்பிடிச்சுவரின் அருகில் நின்றுகொண்டிருந்தான். பிரேமா, அறைக் கதவைத் திறந்துகொண்டு அவளும் கைப்பிடிச் சுவர் அருகினில் வந்து நின்ருள்.

''என்ன, பாலு இவ்வளவு நேரம் மணி ஆறு ஆகப்போகிறதே!''

''இன்றைக்கு ஸ்பெஷல் கிளாஸ்' அதனுல்தான் நேரமாகிவிட்டது. ஒரு மகிழ்ச்சியான சேதி. இந்த வருடம் நான் தேறியதும் மேற்படிப்புக்கு என்னை வெளிநாடு அனுப்பப்போவதாக எங்கள் கல்லூரி முதல்வர் சொல்லியிருக்கிருர். பாட்டிக்கும் நான் வெளிநாடு செல்ல வேண்டும் என்று கொள்ளை ஆசை''

''அப்படியா சேதி! என் மனமார்ந்த வாழ்த்துக்கள் பாலு, உனக்கு!''

''ஆனுல் நான் அதைப்பற்றி இன்னமும் முடிவு சொல்லவில்லை.''

''ஏன், என்ன காரணம்.''

''உங்களைப் பிரிந்து என்னுல் இருக்க முடியாது.''

''பாலு, என்ன இது. நீ வளர வேண்டியவன்,வாழவேண்டியவன்; முன்னுக்கு வரவேண்டியவன். நீ மேனுடு சென்று படித்து நல்ல பெயரெடுத்து உன் பாட்டியின் ஆசையைப் பூர்த்திசெய். என் ஆசையும் அதுதான்,''

பாலு என்று வீட்டிலிருந்து பாட்டி அழைக்கும் குரல் கேட்கிறது.

'பாட்டி அழைக்கிருர்கள் நான் பிறகு உங்களை சந்திக்கிறேன்'' பாலு ஓடிவிட்டான்.

பிரேமாவுக்கு பாலுவை நினைத்தால் அனுதாபம்தான் பிறந்தது. ஒன்றும் அறியாத பிள்ளையாக இருக்கிருனே. இவனைப்போல் ஓர் வெகுளி, எவரும் இருக்கமாட்டார்கள். என்னை எப்படிப் பிரிந்து போவேன் என்றுனே. நான் யார், என் வாழ்க்கை எப்படிப்பட்டது என்பதைக்கூடப் புரிந்துகொள்ள முடியாத பிள்ளையாக இருக்கிருனே,

அடுத்த வீட்டு பாட்டி தன்னைப் பார்க்க வந்திருக்கிருர்கள் என்பதை நினைக்கும்போது பிரேமாவால் நம்ப

முடியவில்லை. தன்னைப் பார்த்தால் கூடமுகத்தைத் திருப்பிக்கொள்பவர்கள், தன்னை ஏன் பார்க்க வந்திருக்கிறார்கள். சாக்கடையைத் தேடி இன்று ஏன் வந்திருக்கிறார்கள். ஆம் இந்தப் பாட்டியின் வாயில் இருந்து வந்த வார்த்தைகள்தான் அது. தன் பேரனை நான் கெடுத்துவிடுவதாக இந்தப் பாட்டிக்கு எண்ணம். என்னைக் கெடுத்தவர்களையே பழி வாங்க நினைக்காத நான், இந்த அறியாத பிள்ளையையா கெடுத்து விடுவேன். பாலுவிடம் பேசிக் கொண்டிருக்கும்போதுதான் நான் சற்று நிம்மதியுடன் இருக்கிறேன். மனமாற பேசுகிறேன், ஒரு வெள்ளை உள்ளத்துடன் பேசுகிறோம் என்ற நினைப்பு. சலித்துப் போன என் வாழ்க்கை தினம் தினம் நடக்கும் போலி நாடகம், போலி நடிப்பு இவைகளில் இருந்து எனக்கொருமாற்றம் வேண்டாமா? என்னிடம் வரும் இரவுக் கோமான்கள் பேசும் போலி வார்த்தைகள், பொய் அன்பு — ஏன் நானும் அவர்களிடம்அப்படித்தானே நடந்து கொள்கிறேன். இல்லையென்றால் எனக்குப் பிழைப்பேது! போலி அன்பு ஒன்றைப் பார்த்து, சலித்துப்போன எனக்கு. உண்மையான அன்பு உள்ள இடத்தில் சற்று நேரமாவது மனமாற பேசவேண்டும் என்று நினைப்பதில் என்ன தவறிருக்கிறது. ஆனால் நம் மன நிம்மதிக்காக ஒரு பச்சைப் பிள்ளையின் மனதைக் கெடுத்துக் கொண்டிருக்கிறோமோ என்று நான் பல நேரங்களில் நினைத்ததுண்டு. அது உண்மைதான் என்று நினைக்குமளவுக்கல்லவா இருந்தது இன்று பாலுவின் பேச்சு. அதைப்பற்றிப் பேசத்தான் இந்த பாட்டி வந்திருப்பார்களோ. அவர்களுக்கு என்ன பதில் சொல்லுவது என்று குழம்பிக் கொண்டே பிரேமா வெளியே வந்தாள்,

பிரேமாவுக்கு தன்வாழ்க்கையைப் பற்றி இப்படி ஒரு நினைப்பு. தான் வாழும் இந்த நித்திய வாழ்க்கைக்கு நாங்கள் காரணமல்ல. இதற்கு இன்றைய ஆண்கள் உலகம்தான் காரணம். இப்படி சிலநேரங்களில் பிரேமா நினைத்து தன்னைத்தானே தேற்றிக் கொள்வாள், மனித மனமே அதுதானே, தான் செய்ததவறுக்கு ஏதாவதொரு புதுக் காரணத்தைச் சொல்லி, தான் செய்தது தவறில்லை என்று வாதாடுவது.

ஆனால் உலகம் இருக்கிறதே அது விசித்திரமானது. நல்ல நீர் எப்படி சாக்கடையுடன் கலந்துவிட்டது என்பதற்குக் காரணத்தையோ, அல்லது அதற்காக அனுதாபமோ படாது. நல்ல நீராக இருந்திருக்கலாம். இன்று சாக்கடை நீருடன் கலந்துவிட்டது அல்லவா, இது தான் உலகத்தின் குற்றச்சாட்டு.

பிரேமா பேச்சை ஆரம்பித்தாள்.

''வாருங்கள் அம்மா, நீங்கள் என்னைத் தேடி வர வேண்டுமா? சொல்லி அனுப்பி இருந்தால் நான்



வந்திருக்கமாட்டேனு. நீங்களெல் லாம், இங்கெல்லாம் வரலாமா?''

''அம்மா உன்னை நான் இவ்வளவு நல்லவளாய் இருப்பாய் என்று எதிர் பார்க்கவில்லை. உன்னை நான் தேடி வந்தது ஒரு முக்கியமான விஷயத் தைப்பற்றிப் பேச. நீ உதவுகிறேன் என்று சொல்.''

''என்னம்மா இப்படிக் கேட்கிறீர் கள். நீங்கள் எனக்கு அன்னையைப் போன்றவர்கள். உங்களுக்கு உதவ நான் கொடுத்துவைத்திருக்கவேண் டும். சொல்லுங்கள் என்னுல் முடிந் ததைச் செய்கிறேன்.

''பாலுவைப் பற்றித்தான் உன்னி டம் பேசப்போகிறேன். அவன் வாழ்வு உன் கையில் இருக்கிறது. அவன் மனம் மிகவும் கெட்டிருக் கிறது. அவ்வளவுதான் என்னுல் இப்போது சொல்ல முடியும்...நான் எவ்வளவோ முயன்று பார்த்துவிட் டேன். முடியவில்லை. நீதான் அவனை நல்வழிப்படுத்த வேண்டும்,''

''அம்மா நீங்கள் சொல்வதைக் கேட்கவே எனக்குக் கூசுகிறது. அது ஒரு அப்பாவிப்பிள்ளை. அதைக் கெடுத்தபாவம் எனக்கு வேண்டாம். அதன் முன்னேற்றத்தில் எனக்கும் ஆசையுண்டு, எப்படியும் அதன் மனதை நான் மாற்றுகிறேன். அதற்கு நான் பொறுப்பு. இல்லையேல் இந்த இடத்தில் இருந்து வீட்டை மாற்றிக் கொண்டு நான் போய்விடு கிறேன். நீங்கள் மன நிம்மதியுடன் சென்றுவாருங்கள்.''

* * *

''வணக்கம், என் பெயர் பிரேம் குமார். உங்களைப் பார்க்கத்தான் வந்தேன். உங்களை முன்னமே எங்கோ பார்த்த மாதிரி இருக்கிறது.

''உங்களால் ஏமாற்றப்பட்ட அதே பிரேமாதான் நான், எனக்கு நன்ருக நினைவிருக்கிறது. உங்களை நான் எப்படி மறக்க முடியும்? இன்று நான் வாழும் இந்த விநோதமான வாழ்க்கைக்கு நீங்கள்தானே வழி காட்டி.''

''பிரேமா, என்னை மன்னித்துவிடு நடந்தவைகள் வேறு...''

''நிறுத்துங்கள். உங்கள் செய் கைக்கு காரணத்தை இப்போது நான் கேட்கவில்லை. நீங்கள் சொல் லப் போகும் காரணங்களை நான் நம்பப்போவதுமில்லை. அதனுல் எனக்கு மறுவாழ்வு கிடைக்கப் போவதுமில்லை. இப்போது எதற்காக என்னைத் தேடிவந்தீர்கள்?''

''உன்னிடம் ஒரு உதவி வேண்டி வந்துள்ளேன்.''

'நீங்களா? என்னிடமா? என்ன இது விந்தையாக இருக்கிறது! என்ன உதவி வேண்டும் சொல்லுங் கள். முடிந்தால் செய்கிறேன். உங் களால்தான் எனக்கு உதவி செய்ய முடியவில்லை. நானுவது உங்களுக்கு உதவி செய்ய முயற்சிக்கிறேன்.''

''பிரேமா நடந்ததை மறந்து விட்டு, நான் சொல்வதைக் கேள். அடுத்த வீட்டிலிருக்கும் அந்தப் பாட்டி எனக்கு தூரச்சொந்தம். இப்போது நீ புரிந்துகொண்டிருப் பாய் என்று நினைக்கிறேன், நான் வந்ததின் காரணத்தப் பற்றி. நீ எப் படியும் உதவித்தான் ஆகவேண் டும்.''

''இதற்காக நீங்கள் வந்திருக்கவே வேண்டாம். பாலுவை என் உடன் பிறவா தம்பியைப்போல் நினைப்பவள் நான். அவனை எப்படியும் நல்வழிப் படுத்துவது என்று நான் முடிவெடுத் திருக்கிறேன். ஆனுல் நான் எவ்வ ளவோ எடுத்துச் சொல்லியும் அந் தப் பிள்ளை நம்ம மறுக்கிறது. என் னுடைய அவல வாழ்க்கையை— என் வாழ்க்கை முறையை நான் எவ் வளவோ சூசகமாகசொல்லியும் அந் தப் பிள்ளை நம்ப மறுக்கிறது. நான் எதைச் சொன்னபோதும், அது அவன் பாட்டி சொல்லி நான் சொல் வதாக நினைக்கிருன். அதனுல் நம்ப மறுக்கிருன், என்னுல் முடிந்தவரை எவ்வளவோ முயன்று பார்த்துவிட் டேன். நானே ஒரு மாதமாக குழம் பிப்போயிருக்கிறேன். உங்களுக்கு ஏதாவது தெரிந்தால் சொல்லுங் களேன். நான் முயற்சிக்கிறேன்,''

'பிரேமா உன் நல்லெண்ணத்தை என்னவென்று சொல்வதென்றே எனக்குப் புரியவில்லை. உன்னைத் தவிர வேருெரு பெண் இவ்வளவு வெளிப்படையாகத் தன்னைப்பற்றிச் சொல்லி, ஒருவனை திருத்தமுயற்சித் திருப்பாளே, என்று நினைத்துப்பார்க் கவே இடமில்லை! ஆனுல் நீ இவ்வ ளவு சொல்லியும் அவன் திருந்த வில்லை, என்ருல் அதற்கு ஒரே வழி தான் இருக்கிறது. ஆனுல் அதை உன்னிடம் சொல்ல தயக்கமாக இருக்கிறது.''

''தயங்காதீர்கள். தாராளமாகச் சொல்லுங்கள். எனக்கு வேண்டியது அந்தப் பிள்ளை எப்படியாவது திருத்தவேண்டும்,''

''உன்னைப்பற்றி, நீயே சொல்லி யும் அவன் நம்ப மறுக்கிருன், உன் மேல் உள்ள ஆசையின் காரண மாக அவன் ஒருவகை வெறியில் இருக்கிருன். உன்னைப்பற்றி அவன் கேள்விப்பட்டதை அவன் கண் களால் ஒரு முறை பார்த்துவிட்டால் அவன் நிச்சயம் திருந்திவிடுவான். தூரத்தில் இருந்தே எவரும் கானல் நீரைப் புரிந்து கொள்வதில்லை. அரு கில் சென்று நன்ருகப்பார்த்த பிறகு தான், புரிந்துகொள்கிருர்கள். அவன் கண்களால் ஒருமுறை பார்த்துவிட் டால் திருந்திவிடுவான். நான் சொல் கிறேனே என்று தவருக நினைக் காதே. நீயும் நானும் சேர்ந்து ஒரு நாடகம் ஆடவேண்டும். அது அவன் கண்களில் படவேண்டும்— அதாவது நாம் ஆடவேண்டும் பிறகு பார்; அவன் நிச்சயம் திருந்தி விடுவான்.''

''எதைச் செய்வதற்கும் நான் தயாராக இருக்கிறேன் முன்பொரு முறைஉங்கள் பேச்சைக்கேட்டேன். இப்போது ஒருமுறை உங்கள் பேச்சைக் கேட்கப்போகிறேன். இதா வது நல்லதற்குப் பயன்படட்டும், நீங்கள் போய்வாருங்கள்,''

* * *

பாலு அடுத்த வீட்டையே பார்த் துக் கொண்டிருந்தான். நன்ருக இருட்டிவிட்டது. பிரேமாவை அவன் பார்த்து பத்து நாட்களுக்கு மேல் ஆகிவிட்டது. அவன் கண் களிலே அவள் இப்போதெல்லாம் தென்படுவதே இல்லை, இன்று எப் படியாவது அவளிடம் பேசிவிட வேண்டும். ஏன் இப்படி ஒதுங்கு கிருள் என்பதைக் கேட்டுவிட வேண்டும் என்ற முடிவில் இருந் தான்.

திடீரென்று அவள் அறையின் விளக்கு எரிந்தது. வந்தது அவன் தான். அவள் அலங்காரம் அவனை திகைக்கவைத்தது. புது மாதிரியான அலங்காரம் அவள் மேனியில் முக் கால் பாகத்திற்கு மேல் ஆடை யில்லை, அவளை எப்போதும் இப்படி அவன் பார்த்ததே இல்லை, பாலு இருக்கும் திசையில் அவள் பார்க் கவே இல்லை. அவன் வாழ்க்கை யின் திசையையே மாற்றிவிட்டான்.

### ஜோலாவின் கற்பனை

எத்தனையோ பேருடைய ஏச்சையும், புகழ்ச்சியையும் பெற்ற பல புத்தகங் களை எழுதியுள்ள எமிலிஜோலா தன் னந்தனியே அதிக வெளிச்சமில்லாத அறையில் உட்கார்ந்துதான் எழுது வாராம் கற்பனை அப்போதுதான் வருமாம்!

இன்று அவன் இருக்கும் திசையையே பார்க்க மறுக்கிருள். அதற்குள். அவள் அறைக்கதவை யாரோ தட்டுகிருர்கள், அவள் திறக்கிருள். யாரோ உள்ளே வருகிருர்கள். உள்ளே வருவது யார்? பிரேம்குமாரா அவரேதான். அவருக்கென்ன வேலை இந்த நேரத்தில்? பிரேமாவும், பிரேம்குமாரும் கட்டிலில் அமருகிருர்கள். திறந்த சாளரத்தின் வழியாக அவர்கள் பேசுவது தெளிவாக பாலுவின் காதில் விழுகிறது.

'என்னங்க இவ்வளவு நேரம்''

''வழியில் கொஞ்சம் கார்ரிப்பேர். நீ எங்கு வெளியே சென்றுவிடுகிருயோ என்று நினைத்துக்கொண்டே வருகிறேன்''

''உங்களுக்காகத்தான் காத்துக்கொண்டிருக்கிறேன். சரி எங்கே பணம்?''

பிரேம்குமார் சட்டைப் பையில் இருந்து இருநூறு ரூபாய் நோட்டுகளை எடுத்துத் தருகிருன். பாலுவுக்கு இந்த உலகமே சுற்றுவது போல் இருக்கிறது. ஐயோ. சாக்கடை என்று என் பாட்டி சொன்னது எவ்வளவு உண்மையாகிவிட்டது. இந்தச் சாக்கடையையா சந்தனம் என்று எண்ணிக் கொண்டிருந்தேன்.பாவிஎன்வாழ்க்கையையும் அல்லவா பாழாக்க இருந்தாள்

அடுத்த வீட்டில் விளக்கு அணைந்துவிட்டது!

அவன் நெஞ்சில் தீ மூண்டுவிட்டது! அவன் வெறியனுனன்!

சாது மிரண்டுவிட்டது!!

பழமறுக்கும் கத்தியுடன் அவன் அடுத்த வீட்டினுள் தாவிக் குதித்தான். திறந்த சாளரத்தினுள் புகுந்தான். ஒரே இருட்டு.

படுக்கைக்குத் தாவினன். அவளைப் பிடித்து ஆத்திரம் தீர குத்தினன்.

திடீரென்று விளக்குகள் எரிந்தன.

பிரேமலதா 'சுவிட்ச் போர்டு' அருகில் நின்றுகொண்டிருந்தாள்.

பிரேம்குமார் பிணமாகக் கிடந்தான் இரத்த வெள்ளத்தில்.

பாலுவுக்கு ஒன்றுமே புரியவில்லை.

''பாலு என்ன காரியம் செய்துவிட்டாய். எவ்வளவு மென்மையாக இருந்த உன் இதயம் எப்படி கல்லாக ஆகிவிட்டது. பார்த்தாயா? என்னைப்பற்றி அன்று உன்னிடம் நான் சொன்னபோது நம்ப மறுத்த நீ, இன்று உன் கண்ணெதிரில் என் கற்பு விற்கப்படுவதைப் பார்த்ததும், வெறியனுகிவிட்டாய், என்னைக் கொல்வதாக நினைத்துக்கொண்டு இந்த அப்பாவியைக் கொன்றுவிட்டாய். இதுவும் நன்மைக்குத்தான். நீ என்னைக் கொன்றிருந்தால் உன் ஆத்திரம் வேண்டுமானல் தீர்ந்திருக்கலாம். ஆனல் உன் வாழ்வு பாழ்பட்டுப் போயிருக்கும். உன் வாழ்வை சீர்படுத்த நான் எடுத்த முயற்சி பலனளிக்காமல் போயிருக்கும். இருந்து உன் வாழ்க்கையைக் கெடுத்துக்கொண்டிருந்த நான் இறந்தும்உன்வாழ்க்கையைக்கெடுத்தப் பாவியாக ஆகியிருப்பேன். நல்ல வேளை. நடந்ததா, நல்லதற்காகவே நடந்திருக்கிறது, கத்தியை என்னிடம் கொடுத்துவிட்டு நீ வீட்டிற்குப் போ''

பாலு சிலைபோல் நின்றுகொண்டிருந்தான்.

பிரேமா கத்தியை அவன் கையில் இருந்து பறித்து அவனைப் பிடித்து வெளியே தள்ளினுள்.

''இனிமேலாவது திருந்தி நல்லவனுக வாழு—என்னை மறந்துவிடு''

பிரேமா கதவைத் தாளிட்டாள். பிரேம் குமாரின் பிணத்தருகே குனிந்து அமர்ந்தாள். அவளை நடைப்பிணமாக ஆக்கினவன் இன்று பிணமாக இருக்கிருன்.

எப்போதோ அவன் செய்த தவறுக்கு இன்று தண்டனைப்பெற்றிருக்கிருன், எவ்வளவு காலங்கடந்து அவனுக்குத் தண்டனை கிடைத்திருக்கிறது.

இந்தக் கொலையை அவள் செய்ததாக ஏற்றுக்கொள்ளப்போகிருள். முழுமனதுடன் ஏற்றுக்கொள்ளப் போகிருள்.

அவன் ஏமாற்றிவிட்டுப் போனனே அன்றே அவன் கிடைத்திருந்தால் அவளே இதைச் செய்திருப்பாள். அதனுல் இந்த கொலையின் முழுபொறுப்பையும் ஏற்றுக்கொள்வதில் எந்தத் தவறுமில்லை? பழிவாங்க வேண்டியவள் அவள் தான்.

ஆனல் இதைச் செய்த கைகள் வேறு.

ஆனல் அந்தக் கைளுக்கும் இந்தக் கொலைக்கும் சம்மந்தமில்லை, அதனுல் இதன் முழு பொறுப்பையும் அவள் ஏற்றுக்கொள்வதில் தவறில்லைதான்!

பகை உள்ளவர்கள், சிலரை ஏவி கொலை செய்வதில்லையா? அதைப் போலத்தான் இதுவும், கொலைக்குக் காரணம் இவள்!

கருவி அவன்!!

கருவியை நொந்து என்னபயன்.

காரண கர்த்தாவாகஅவள்இந்தக் கொலையின் முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்வதில் தவறில்லைதான், அவள் வாழ்க்கையைக் கெடுத்தான் அவன். அவனுக்கு இந்ததண்டனை. கேவல வாழ்க்கை வாழ்ந்தாள் அவள். அதனுல் அவளுக்கு இந்த தண்டனை.

இப்படித்தான் அவள் மனம் எண்ணிற்று. ஆனுல் இருவரும் எப்போதோ செய்த தவறுக்காக இப்போது தண்டனை?

இவ்வளவு காலங்கடந்தும் இவர்களுக்குத் தண்டனை!

ஆம் தெய்வம் நின்றுதான் கொன்றிருக்கிறது!!

அவள் போலீசுக்குப் போன் செய்தாள்.

## பே(ா)ச்சு!

'இங்கே நல்ல மீன் விலைக்குக் கிடைக்கும்!'—இப்படி எழுதப்பட்டிருந்ததைப் பார்த்த நான்கு மனிதர்களின் அபிப்பிராயங்கள் இவை:

ஒருவர்: ''இங்கே மீன் கொடுக்காமல் வேறு கடையிலா கொடுப்பாய்' ஆகவே 'இங்கே' என்ற சொல் வேண்டாம்!''

இன்னெருவர்: ''நல்ல மீன் கொடுக்காமல் கெட்ட மீன் கொடுத்தால் யார் வாங்குவார்கள்? எனவே! நல்ல என்பது வேண்டாம்.''

மற்ெருருவர்: ''விலைக்குக் கிடைக்காமல் சும்மாவா கிடைக்கும்? ஆகவே 'விலைக்குக் கிடைக்கும்' என்பது வேண்டாம்.''

வேருெருவர்: ''மீன் கடையில் மீன் என்று ஏன் எழுத வேண்டும்?''

நாலு பேர் வார்த்தையும் கேட்டான் கடைக்காரன். கடைசியில் விளம்பரப் பலகையில் எழுத்தே இல்லை!

# இராமநாதபுரம் ஜில்லா

# கூட்டுறவு சப்ளை & மார்க்கெட்டிங் சொசைடி லிட்.,

கியூ. 816

## 39-40, தளவாய் அக்கிரகாரம், மதுரை-1.

**தலைவர்: திரு. வி. வி. இராமசாமி, M.P.**

**தலைமை ஆபீஸ்: 39-40, தளவாய் அக்கிரகாரம், மதுரை-1**

**தந்தி: RAMCOSTORE.**

**தொலைபேசி எண்கள்:**

| | | | |
|---|---|---|---|
| தலைமையலுவலகம் | 2675 | காரியதரிசியின் இல்லம் | 2889 |
| ஸ்ரீவில்லிபுத்தூர் கிளை | 19 | காரைக்குடி கிளை | 185 |
| சிவகங்கை கிளை | 63 | பரமக்குடி கிளை | 271 |

**கிளைகள்:**

**ஸ்ரீவில்லிபுத்தூர், விருதுநகர், சிவகெங்கை: பரமக்குடி, காரைக்குடி, இராமநாதபுரம் அருப்புக்கோட்டை, திருப்பத்தூர், திருவாடானை, தொண்டி, மண்டபம், பாம்பன், தங்கச்சிமடம், இராமேஸ்வரம், கீழச்சீவல்பட்டி மற்றும்**

**53 நியாயவிலைக் கடைகள்**

இராமநாதபுரம் மாவட்டத்தில் கூட்டுறவு ஸ்டோர்களுக்கும் பிரதம நாணய சங்கங்களுக்கும் தங்களது அங்கத்தினர்களின் தேவைப் பொருள்களை விநியோகம் செய்யும் ஒரே ஸ்தாபனம்.

விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்தவென ஏற்பட்ட மத்திய அரசாங்கத்தின் வாங்குவோர் கூட்டுறவுத் திட்டத்தை அமுலாக்கும் ஸ்தாபனம்.

உணவுப் பொருள்கள், சர்க்கரை, காப்பி விதை, பலசரக்கு, சிமெண்டு, இரும்புப் பொருள்கள், குழந்தைகள் பால் உணவு மற்றும் எல்லா விதமான தேவைப் பொருள்களுக்கும் மொத்த விநியோகஸ்தர்கள்.


இரசாயன உர விநியோகத்திற்கு அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஸ்டாக்கிஸ்ட்.

ஸ்டேன்ஸ் கலப்பு உரத்திற்கும் பாரி கலப்பு உரத்திற்கும் அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்கள்.

## "ராம்கோ" கலப்பு உரத் தயாரிப்பாளர்கள்

ஆர். எஸ். எட்வர்டு,
காரியதரிசி.

# முன்னேற்றப்பாதை!



## சுகாதார அமைச்சர் S.J.சாதிக்பாட்சா

ஏழை மக்கள் முன்னேறுவதற்கான வாய்ப்புகளைப் பெருக்கி, சமத்துவமும் சமநீதியும் துலங்கும் சமுதாயஅமைப்பை ஏற்படுத்தவேண்டும். இந்த தூய குறிக்கோளை முன் வைத்தே இன்று நாம் பணியாற்றி வருகின்றோம். தமிழகத்தில் மக்கள் பேராதரவோடு தி. மு. க. அமைச்சரவை பொறுப்பேற்றிருப்பதால், இந்த இலட்சியத்தை நோக்கி விரைந்து செயல்படுவதற்கு வழி ஏற்பட்டுள்ளது. மக்களின் நன்மைக்காக உள்ள அமைப்புகளைப் பயன்படுத்தி சமுதாயம் பெருமளவு பயன்காண வகை செய்வதே இன்று நமது முக்கிய கடமையாகும்.


எல்லா வகையான முன்னேற்றங்களுக்கும் அடித்தளமாக இருப்பது மக்களின் உடல் நலம். சுவர் இருந்தால்தான் சித்திரம் எழுத முடியும் என்று கூறுவது இந்தக் கருத்தில்தான். நோய்நொடி அணுகாவண்ணம் மக்களின் உடல் நலனைப் பேணவும், நோயுற்றவர்களுக்கு விரைவில் எளிதாக மருத்துவவசதி கிடைக்கச் செய்யவும் அரசு ஊக்கத்துடன் இடைவிடா முயற்சி எடுத்து வருகிறது. மருத்துவப் பணிகளை விரிவுபடுத்துவதும், ஏழை மக்களுக்கும் தொழிலாளர்களுக்கும் சிறந்த மருத்துவ வசதி எளிதில் கிடைக்கச் செய்வதும், மருத்துவத்துறையில் பயிற்சி பெறுவோரின் எண்ணிக்கையைப் பெருக்குவதும் அரசின் நோக்கங்களாக இருந்து வருகின்றன. நாட்டின் பொது நலனையும் ஒவ்வொரு குடும்பமும் நலமாக வாழ வேண்டும் என்பதனையும் கருத்தில் கொண்டு குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தில் தனிக் கவனம் செலுத்தப்படுகிறது.

மருத்துவ வசதிக்காக மாநில அரசு செலவிடும் தொகை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது. 1966—67 ல் ஒரு நபருக்கு ஆன செலவு ரூ. 3·25 என்றிருக்க இந்த 1967—68 ஆம் ஆண்டில் இத்தொகை ரூ. 3·57ஆக உயரும். மருத்துவ கட்டடச் செலவுகளையும் கணக்கில் எடுத்துக் கொண்டால் ஒருவருக்கு ஆகும்செலவு ரூ. 3·88 ஆகும். மாநிலத்தில் அரசாங்க மருத்துவ மனைகளிலுள்ள படுக்கைகளின் எண்ணிக்கை படிப்படியாகப் பெருகி வருகின்றது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தொடக்கத்தில்மாநிலத்தில் அரசாங்க மருத்துவ மனைகள் அனைத்திலுமாக 7,993 படுக்கைகள் இருந்தன. தற்சமயம் படுக்கையின் மொத்த எண்ணிக்கை 20,076 ஆக உயர்ந்துள்ளது.

தமிழகத்தில் முதல் திட்டக்கால அளவில் இரண்டு மருத்துவக் கல்லூரிகளே இருந்தன. இவ்வசதி படிப்படியாக வளர்ந்து, தற்போது 8 மருத்துவக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இவற்றில் எம்.பி.எஸ். பட்டப்படிப்புக்குச் சேர்த்துக்கொள்ளப்படும் மாணவர்கள் எண்ணிக்கை 1,075 ஆக உயர்ந்துள்ளது. கிராமப் பகுதிகளிலும் மருத்துவ வசதிகள் நல்ல முறையில் பெருகியுள்ளன. நோய்த் தடுப்பு, நோய்ச் சிகிச்சை வசதிகளின் விளைவாக, நோய்க்கு இரையாகி மக்கள் மடிவது என்பது வெகுவாகக் குறைந்துவிட்டது. மக்களின் சராசரி ஆயுள் 1950ல் 32 ஆக இருந்தது; 1966ல் அது 50 வயதாக உயர்ந்தது. மரண விகிதம் மேலும் குறையக்கூடும் என்பதும் வரவேற்கத்தக்க அம்சமாகும்.

இறப்பு விகிதம் குறைந்து, பிறப்பு விகிதம் பழைய நிலையிலேயே இருக்கும்போது, மக்கள் தொகை மிதமீறிப் பெருகி பல சிக்கல்கள் தோன்றுகின்றன. வளர்ச்சித் திட்டங்களில் நற்பயன்கள் மக்களுக்குக் கிடைக்காத நிலை ஏற்பட்டுவிடுகிறது. இந்தச் சங்கடத்தைத் தவிர்த்து, மக்கள் வாழ்க்கையில் மேம்பாடு காண்பதற்காகவே குடும்பக் கட்டுப்பாடு திட்டங்களில் முனைப்பான கவனம் செலுத்துகிறோம். பிறப்பு விகிதம் ஆயிரத்துக்கு 40 என்றிருப்பதை கூடுமானவரை விரைவில் 25 என்ற அளவுக்குக் குறைக்கவேண்டும்.

பன்னெடுங் காலமாகத் தாழ்ந்து தணிந்த நிலையில் இருந்த தமிழகம் இப்போதுதான் எழுச்சிகொண்டு புத்துணர்ச்சியோடு முன்னேறத் தொடங்கியிருக்கிறது. நாட்டின் வளங்களையும் மக்களுக்கு வசதிகளையும் பெருக்குவதற்கான முயற்சிகள் மூலம் முழுப் பலனும் கிடைக்க வேண்டுமானால் குடும்பக் கட்டுப்பாட்டைச் செயல்படுத்துவதில் மக்களின் ஆர்வம் இன்னும் வளர வேண்டும். முயற்சியும் உழைப்பும், அறிவுடன் வாழும் பண்பும் வளர்வதாக! ✻



15—3—67-ம் நாளன்று அறிஞர் அண்ணா அவர்கள் பதவிப் பொறுப்பேற்றுக் கொண்ட காட்சி.

தொலைபேசி எண்: 330 தந்தி: ''கான்கோமில்ஸ்''

# காஞ்சீபுரம் காமாட்சியம்மன்
# கூட்டுறவு நூற்பு ஆலை

லிமிடெட், நெ. ஜி. 1897.

## வையாவூர், காஞ்சீபுரம்.

(தபால் பெட்டி எண்: 2)

| | | | |
|---|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் | ரூ. | 60 | லட்சம் |
| செலுத்தப்பட்ட மூலதனம் | ரூ. | 22·98 | ,, |
| தமிழக அரசின் பங்கு முதலீடு | ரூ. | 11·49 | ,, |
| கதிர்களின் எண்ணிக்கை | | 12312 | |

எங்களது நூற்பாலையில் உற்பத்திசெய்யும் தரமான 20' 40' 60' 80' நூலை தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் மூலம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கும், நெசவாளர்களுக்கும் நியாய விலையில் விற்பனை செய்து வருகிறோம்.

ஆலையில் பங்கு செலுத்த விரும்புவோர் ஒருபங்கின் மதிப்பு ரூ. 100ம் நுழைவுக் கட்டணம் பங்கு ஒன்றுக்கு ரூ. 2 வீதம் செலுத்தி பங்குதாரராகச் சேரலாம். பங்குகளுக்கு 9 சதம்வரை டிவிடெண்ட் தர தமிழக அரசு சிறப்பு அனுமதி தந்துள்ளது என்பதை மகிழ்வுடன் அறிவிக்கிறோம்.

பொதுமக்களும். கூட்டுறவு நிறுவனங்களும் அதிக அளவில் பங்குகள் எடுத்து உற்பத்தியாகும் நூலை வாங்கி உபயோகித்து பயனுற வேண்டு கிறோம்.

விபரங்களுக்கு பொது மேலாளருக்கு விண்ணப்பிக்கவும்

ஜி. ராபர்ட் ஜேம்ஸ், பி.ஏ.,
பொது மேலாளர்.

எஸ். கே. சம்பந்தன், பி.ஏ., எம்.பி.,
தலைவர்.

தொலைபேசி எண்: | 3244
| 3245


# கூட்டுறவு சிறப்பு அங்காடி

## மதுரை.

ஸ்ரீ

தரமான கலப்படமற்ற பொருள்களை
நியாயமான விலையில்
ஒரே இடத்தில் வழங்கும்
ஒரு கூட்டுறவு நிறுவனம்.

எஸ். வைத்தியலிங்கம்,
பொது நிருவாகி.


இன்று உலக உத்தமர் காந்தி அடிகளின் பிறந்த நாள், நாடெங்கும் இந்நாள், நன்னாளாகக் கொண்டாடப்படுகிறது; அவரவர் தத்தமக்கு விருப்பமான முறையில் காந்தி அடிகளுக்குத் தமது அன்பினைக் காணிக்கையாக்கி அளிக்கின்றனர். அவருடைய திருவுருவப் படத்திற்கு மாலைகளிட்டும், அவர் புகழ்பற்றிய பாடல்களை இசைத்தும். பஜனை நடாத்தியும், நூற்புத் தொண்டாற்றியும் சேரிகளைத் திருத்தும் பணிபுரிந்தும், இந்நாளைக் கொண்டாடுகின்றனர்.
காந்தி வழி நடப்போம்

அவர் ஓர் தூயவர், நமது மார்க்கத்தின் மாசு துடைத்திட வந்த மகான்—என்பாரும்;

அவர் ஓர் விடுதலை வீரர் நமது நாட்டு அடிமைத் தளைகளை உடைத்தெறிந்த அஞ்சா நெஞ்சினர் என்பாரும்;

அவர் ஓர் வேதாந்தி, பழய தத்துவம் பலவற்றுக்குப் புதிய விளக்கமளித்தவர், என்பாரும்;

அவர் ஓர் சமதர்மவாதி, ஏழை பங்காளர், ஏழைகள் புதுவாழ்வு பெற வழி வகுத்தவர், என்பாரும்;

அவர் கிராம ராஜ்யம் அமைத்திட முனைந்தவர் என்பாரும் இதுபோல, அவரிடம் அவரவர் கண்டவற்றினைக்கொண்டு அளவிட்டு வியந்து பாராட்டுவார், பல்வேறு வகையினர் உளர். இவர்களில், எவருடைய பார்வையில் முழு காந்தி அடிகள் தெரிகிறார் என்பது, காலமெல்லாம் ஆராய்ந்தறிந்துகொள்ளவேண்டிய ஒரு பிரச்சினையாகும். காரணம், ஒரு தனிமனிதர் என்ற முறையிலே மட்டும் கவனிக்க வேண்டியவர் அல்லர்; அவர் காலத்தின் சின்னம், ஓர் எழுச்சியின் அடையாளம். ஒரு மறுமலர்ச்சியின் உருவகம்.

அரசியல் கண்ணோட்டத்துடன் மட்டும் திருப்தியடைய விரும்பினால், அவருடைய அறப்போர் மாண்பினை மட்டும் வியந்து பாராட்டுவதுடன் இருந்துவிடத் தோன்றும்.

ஆனால், அரசியல் துறையிலே மட்டும் அரும்பெரும் வெற்றி பெற்று, மற்ற துறைகளிலே ஈடுபடாதிருந்தவர் அல்ல. அவர், எல்லாத் துறைகளிலும் தமது முத்திரையைப் பொறித்துச் சென்றவர் எல்லாத் துறையினரும், எமக்காகவே காந்தியடிகள் வாழ்ந்தார்; எமக்காகவே பணிபுரிந்தார் என்று சொந்தம் கொள்ளத்தக்க முறையிலே அவருடைய வாழ்க்கையும் தொண்டும் அமைந்திருந்தன.

இன்று, அவருடைய பிறந்த நாள், எல்லாத் துறைகளிலே உள்ளவர்களாலும் கொண்டாடப்படுவதற்கான காரணம் இதுவே, அவர் ஒரு நாட்டின் காலம்; ஒரே ஒரு துறைக்கு அல்ல; எல்லாத் துறைகளுக்கும் ஒரு திருப்பத்தை, ஒரு புதிய பொலிவை, வலிவைக் கொடுத்தவர்.

ஒரு நாட்டின் முன்னேற்றம் ஏதோ ஒரு துறையிலே மட்டும் பெறப்படுகிற வெற்றியைப் பொறுத்தது அன்று, எல்லாத் துறைகளிலும் வெற்றி காணவேண்டும். அவைகளின் ஒட்டு மொத்தத்தைக் கொண்டே, அந்நாடு முன்னேற்றம் அடைந்திருக்கிறதா என்ற கணக்குப் பார்க்க வேண்டும். ஒரு நாட்டின் வரலாற்றிலே அவ்விதமான ஒரு கணக்கு அடிக்கடி கிடைக்காது. ஒரு நூற்றாண்டுக்கு ஒருமுறை கிடைக்கும் என்றும் கூறிவிட முடியாது. அந்தக் கணக்கு இந்நாட்டுக்கு காந்தி அடிகளின் வடிவத்திலே கிடைத்தது. எனவேதான், இந்நாள், ஒரு மாபெரும் தலைவரின் பிறந்த நாளாக மட்டுமின்றி, ஒரு நாட்டுக்குக் கிடைத்த 'நற்காலம்' என்ற முறையிலே சிறப்பும் பெறுகிறது.

மகான்கள், மாவீரர்கள் ஆகியோரின் பிறந்த நாட்களைக் கொண்டாடும் கவர்ச்சி மிகுந்த நாடு நம் நாடு. புகழ் பாடுவதில், பூஜைகள் நடாத்துவதில், வல்லவர்கள் நாம். ஆனால் யாருக்காகத் திருநாள் நடத்துகிறோமோ எவருடைய திருநாமத்தை பஜிக்கிறோமோ, எவருடைய ஆற்றல் பற்றிப் புகழ்ந்து பேசுகிறோமோ, அவர்கள் காட்டிய நெறியிலே நடக்கின்றோமா என்றால், இல்லை என்ற பதிலையே ஏக்கத்துடன் பெற முடிகிறது.

இன்று ராட்டை சுழலுகிறது — நாளை? எத்தனை பேர்? இன்று சேரிகளிலே சென்று சேவை செய்கிறோம்— நாளை? இன்று வகுப்பு ஒற்றுமை பற்றிப் பேசுகிறோம். எழுச்சியுடன் — நாளை? இன்று கிராமங்களிலேதான் நாட்டின் இதயம் இருக்கிறது என்று உணர்ந்து பேசுகிறோம்; ஆனால் மறுநாள்?

இன்று நடத்திடும் திருநாளின் மாண்பு, நாளையும், மறுநாளும், பிறநாட்களிலும் நமது எண்ணத்திலும் செயலிலும் ஒளிவிட வேண்டும். அதற்கே இந்நாள்—அவர் புகழ் பாடி மகிழ்ந்திட மட்டுமல்ல—அவர் வழி நடந்திட, அவர் காண விரும்பியதைக் கண்டிட, அவர் தந்து சென்றதை உருக்குலைக்கா திருந்திட, அவர் ஊட்டிய உணர்ச்சிகளை உயிருள்ளவையாக்கிட, மாலையின் மாண்பு மனத்தில்; விளக்கின் பயன் ஒளியில்; விழாக்களின் பலன், நமது செயலிலே இழைந்திடும் மாண்பிலே இருக்கிறது.

அவருடைய பிறந்த நாள் நாமெல்லாம் நற்கருத்தும், சீரிய செயலும் பெற்றிடுவதற்கான வாய்ப்பாக அமைதல் வேண்டும்.

அதற்கான முறையில் நாம் நடந்துகொள்கின்றோமா என்ற கேள்வியை எழுப்புகிறேன்— நம்முள் உள்ள மிகப் பெரிய கேள்வி அது.

மகான்களையும் மாவீரர்களையும் கொண்டாடுவதிலே வல்லவர்கள் நாம் என்றேன்; அவர்கள் குறித்த அற்புதங்களை, மகிமைகளை, காதைகளாய் கவிதைகளாய் ஆக்கி மகிழ்வதிலும் நாம் மிக வல்லவர்கள்.

அவர், கடலை அடக்கினார் காற்றை விரட்டினார். கருநாகத்தை மாலையாக அணிந்தார், கந்த மூலமே அவருக்கு உணவு, தொட்டார், பட்டமரம் துளிர்த்தது, பார்த்தார் மலடி தாயானாள், குருடன் பார்வை பெற்றான் — இப்படிப்பட்ட கதைகளைக் கேட்டுக் கேட்டுச் சொக்கிப் போகிறவர்கள் நிரம்பிய நாடு நம் நாடு.

இந்த மகிமைகளையும் அற்புதங்களையும் வியந்து பேசுவது, பிறகு எதற்குப் பயன்படுகிறது? அவர் மகான், ஆகவே அப்படிச் செய்தார், நாம் சாமான்யர்கள், நம்மால் முடியுமா அவர் செய்ததைச் செய்ய? என்று பேசி, நமது செயலற்ற போக்குக்கு ஒரு சமாதானம் தேடிக் கொள்ளவே அது மெத்தவும் பயன்படுகிறது.

அந்த முறையிலே காந்தி அடிகளின் பிறந்த நாளை நடத்துபவர்களாக நாம் இருந்துவிடக் கூடாது என்பதற்காகவே இதனைக் கூறுகிறேன். அவரை அவதார புருஷர்களிலே ஒருவர், பூஜைக்குஉரியவர், அவர் பிறந்த நாளன்று அவர் பற்றிய மகிமையை, அற்புதத்தைப் பேசுவது போதும் என்று இருந்துவிடாமல், அவர் காண விரும்பிய சமுதாயம், அவர் எடுத்துக் காட்டிய இலட்சியம், அவர் விளச்கிச் சென்ற தூய்மை ஆகியவற்றினை நினைவிலேகொண்டு, அதற்கான முறையிலே பணியாற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.


ஆகாயத் தாமரையைப் பறித்துக் கொடுத்திடும் அற்புதம் அவர் காட்டினாரில்லை; ஆனால் ஊமைகளாய் இருந்துவந்த மக்களைப் பேசவைத்தார்—உரிமை முழக்கமிடச் செய்தார்; படைபல வந்திடினும் தடைபல நேரிடினும் அஞ்சாதீர்

என்றுரைத்தார், 'அஞ்சி அஞ்சிச் சாவார்; அவர் அஞ்சாத பொருள் இல்லை அவனியிலே, என்று துக்கம் தோய்ந்த குரலிலே பாடினரே பாரதியார், அந்த அச்சத்தைத் துடைத்தார்: ஆயுதம் தாங்கியவர் எதிரில் சாகப் பயப்படாதாரின் ஓர் அணி வகுப்பை நிறுத்திக் காட்டினர், சிட்டுக் குருவிகளுக்கு வல்லூறை எதிர்த்திடும் ஆற்றல் ஏற்படச் செய்தார், நம்மால் என்ன ஆகும் என்ற ஏக்கத்தை விரட்டினர். நாமிருக்கும் நாடு நமது என்பதறிந்தோம் என்ற உறுதி எழச்செய்தார், போர் முகாம் அமைத்து அல்ல; எளியகுடில் அமைத்து; வெட்டச்சொல்லி அல்ல வெட்டுண்டவர் போக ஏனையோர் அறப்போர்ப் பாதை நடந்திடுக என்றுரைத்து; ஆத்திரம் ஊட்டி அல்ல. அன்பினை ஊட்டி; மகான்களிடம் அமைந்திருப்பதாகக்கூறப்படும் அற்புதங்களைக் கண்டவர் அல்ல, இன்று கதை கூறுவோர். காந்தி அடிகள் நடாத்திய அற்புதத்தை நாம் நமது கண்களால் கண்டோம். அந்த அரை ஆடை' மனிதர் கோடானு கோடி மக்களுக்கு மானமுள்ள வாழ்வு பெற்றுத் தந்ததை விட, 'அற்புதம்' வேறு என்ன இருக்க முடியும்.

இவரா இந்தியாவின் தலைவர், என்று எள்ளி நகைபாடியவர்கள், அந்த அற்புதம் நடைபெற்ற பிறகு இவரன்றோ தலைவர் என்று புகழ்ந்தனர். இந்நாட்டுக்கு மட்டுமல்ல, அடிமைத்தளை உடைத்திட விரும்பும் எந்நாட்டுக்கும் அவர் காட்டிய அறப்போர் முறை பொருத்தமானது என்று இன்று ஆய்வாளர் பலர் கூறுகின்றனர்.

இந்தியா என்றோர் நாடுண்டு, அங்கு ஏலம், கிராம்பு பெறுவதுண்டு. பொன்னும் பொருளும் மிக உண்டு போக்கறியாதார் நிரம்ப உண்டு என்ற அளவில், பதினைரும் நூற்றுண்டிலே உலகம் அறிந்திருந்தது. பிறகு படிப்படியாக இந்தியா பிரிட்டிஷ் பிடியிலே சிக்கிவிட்டது. அப்போது இந்தியா என்றோர் நாடுண்டு, அது ஆங்கிலேயர்க்கு நல்ல வேட்டைக்காடு என்று உலகம் இழித்தும் பழித்தும் பேசிக்கொண்டது. விடிவெள்ளி தோன்றுவதுபோல திலகர் காலத்திலே விடுதலைக்கு முயற்சி செய்யப்பட்டது என்றபோதிலும், காந்தி அடிகள் காங்கிரசுக்குள் புகுந்த பிறகே இந்தியா என்றோர் நாடுண்டு, அங்கு விழிப்பும் எழுச்சியும் மிக உண்டு என்று உலகம் அறிந்துகொள்ள முடிந்தது. காந்தி அடிகளின் புகழொளி மூலமே, உலகம் இந்தியாவைக் கண்டு வந்தது. தன்னலமற்ற, விளைவுபற்றிய கவலையற்ற போராட்ட மனோபாவத்தை நாட்டிலே காந்தி அடிகளால்தான் உண்டாக்க முடிந்தது. அதற்கு முன்பெல்லாம் விடுதலை கோரி மனுச்செய்யும் மேதாவிகளிடமே நாடு இருந்தது. அவருடைய உருவமோ. உடலமைப்போ, பேச்சோ, நடவடிக்கையோ இராணுவ மனப்பான்மையை ஏற்படுத்தக்கூடிய விதமாக இல்லை. ஆனல் அவரால் இராணுவங்களையும் எதிர்த்து நிற்கக்கூடிய வீர உணர்ச்சியை இலட்சக்கணக்கானவர்களிடத்தில் உண்டாக்க முடிந்தது.

அவருடைய பொதுப் பணியிலே ஒரு கடுமையான சொல், ஒரு நேர்மையற்ற செயல், ஒரு சுயநலத்திட்டம் இருந்ததில்லை. அவருடைய



சேவையினல் ஏற்பட்ட செல்வாக்கு இந்தியாவின் ஒளியையும், ஆசியாவின் புகழையும், நிறத்திமிர் கொண்டு இறுமாந்திருந்த ஐரோப்பிய வல்லரசுகளுக்கும் கிலி உண்டாக்கக்கூடிய அளவுக்கும் பரப்பிற்று. அவருடைய மொழியைக் கேட்க வெளிநாட்டு அரசாங்கத் தலைவர்கள் ஓடோடி வந்தனர். அவர் மண் குடிசையிலே தங்கினல், அது மதிப்பளிக்கக் கூடியதென்று மன்னர் மன்னர்கள் எண்ணினர்.

'சுயராஜ்யம்'' — ஓர் இலட்சியற்கு வாய்ப்பு என்றே அவர் கருதினர்; ஒரு நாட்டுக் காதையிலே பொன் ஏடு அது. ஆனல் கடைசி ஏடு அல்ல என்பதை வலியுறுத்தினர்.

நாடும் மக்களும் எந்தநிலை பெறவேண்டுமோ அதற்கு அடிமைத்தனம் தடையாக இருக்கிறது. ஆகவே அதை எந்தவிலைகொடுத்தேனும் அகற்றியாக வேண்டும் என்றே அவர் கூறினர்.

அடிமைத்தளை அகற்றப்பட்டது. ஆனல் அவர் எந்த நிலையிலே நாடும் மக்களும் இருந்திட வேண்டும் என்று கருதினரோ, அந்த நிலையை ஏற்படுத்திவிட்டோமா? இல்லை என்பதைச் சொல்லக் கூச்சப்படத் தேவை இல்லை. ஏற்படுத்தியாகவேண்டும் என்ற உறுதியைப் பெற்றிட இந்நாள் உணர்ச்சி அளித்திடவேண்டும்.

அச்சம் அகற்றினர் – ஆங்கில அரசிடம் கொண்டிருந்த அச்சத்தை! ஆனல், அச்சம் பிற துறைகளிலே இருந்து அகன்றதா? இல்லையே! சமுதாயத்தில் மேலோர் கீழோர், செல்வர் வறியர், எளியோர் வலியோர், இருக்குமட்டும், அச்சம் எங்கனம் அகலும்.

பசி அச்சுறுத்துகிறது! பற்றுக்குறை பயமூட்டுகிறது! குரோத உணர்ச்சி விரட்டுகிறது! அச்சம் அகலவில்லை, அச்சம் அகல வேண்டும்; அறநெறி தழைக்க வேண்டும்; அண்ணலில் பிறந்த நாள் விழா நடாத்திடும்போது, இதற்கான உறுதி பெற்றிட வேண்டும்.

ஒருபுறம் செல்வம், அதனைச் சூழ வறுமை.

ஒருபுறம் பளபளப்பான பட்டினங்கள். கோடியிலே வறுமை நெளியும் சேரிப்புறங்கள்.

ஒருபுறம் தொழிற்கூடங்கள், மற்ருெருபுறம் வேலையில்லாதார் கூட்டம்.

ஒரு புறம் அறநெறி நிலையங்கள், பிறிதோர் புறம் சுரண்டல்காரர், சூது மதியினர், பதுக்கல்காரர் கள்ளச் சந்தையினர்!

இதைக் காண அல்ல அவர் காலமெல்லாம் உழைத்தது. இந்ந கேடுகளற்ற ஒரு தூய நாடு காண விரும்பினர்.

கொலையும் களவும் சூதும் குடியும், நிரம்பிய இடம், நாடு அல்ல, காடு.—காடுகூட அல்ல, அங்கு மது விற்பதற்காக ஓர் ஏற்பாடும் இல்லை; கொடுமையைமறைத்திட பட்டாடை இல்லை; பாதகத்தைச் செய்தும் தப்பித்துக்கொள்ள பணம் எனும் ஆயுதம் இல்லை!

காந்தி அடிகள் இந்தியாவை மாண்புமிகு நாடு ஆக்கிட விரும்பினர்–சூதற்ற, சுரண்டலற்ற

வகுப்பு பேதமற்ற, நாடாக ஆக்க விரும்பினார். அவர் பிறந்த நாளைக் கொண்டாடும் நாம், காணும் நாடு எத்தகைய நிலையில் இருக்கிறது?

வகுப்புக் கலவரம்,
தீண்டாமைக் கொடுமை,
வலியோர் சிலர் எளியோர்தமை
வதைபுரியும் கொடுமை,
கலாம் நெளியும் நகரங்கள்,
கவலை ததும்பும் கிராமங்கள்,
அரசியல் சூதுகள்,
சமுதாயச் சதிகள்

எல்லாம் நெளிகின்றன! அடக்குவார் எவர் உளர் என்று கொக்கரித்தபடி.

ஜனநாயகம் நடக்கிறது — மொழி ஆதிக்க சண்டைகூட ஓயவில்லை.

காந்தி அடிகள் பிறந்த நாளைக் கொண்டாடுகிறோம் கள்ளுக்கடை ஒழிப்பிலேகூட வெற்றி காணாமல், கடைகளைத் திறந்து வைக்கவும் துணிந்த நிலையில். காந்தி அடிகள் மகான், அற்புதம் நடத்தினார், மறைந்தார்—என்ற முறையிலே எண்ணிக்கொள்ளுகிற வரையில், இந்த நிலை மாறாது.

காந்தி அடிகள் மறையவில்லை! நம்மோடு இருக்கிறார்; நம்முள் இருக்கிறார் நம்முடன் கலந்துவிட்டார் என்று எண்ணுதல் வேண்டும். அவருடைய எண்ணங்கள் மடிந்திடவில்லை! அவைகளை நம்முடைய இலட்சியமாகக் கொண்டுள்ளோம் என்ற உறுதி பிறந்திடவேண்டும்.

மறைந்த காந்தி அடிகளின் பிறந்த நாளைக் கொண்டாடுவதன் பொருள் இதுவாகவே இருக்க வேண்டும், அவர் இறவாப்புகழ் பெற்றார் என்பதனை எடுத்துரைக்கும் நாள் மட்டுமல்ல இது. அவருடைய எண்ணங்களை ஏற்றுக்கொண்டவர் நாங்கள், அவர் காணவிரும்பிய மாண்பு பிறந்திடப் பணிபுரிவோம் என்ற உறுதி பெற!

அவருடைய நாட்களில் அவர் குரல் கேட்டு, அன்னிய அரசு வெருண்டோடிற்று! ஆனால் ஓட்டப்பட வேண்டியவை பல இருக்கின்றன.

''பொய்ம்மையும்
கயமையும்''
''கல்லாமையும்
இல்லாமையும்''
''ஜாதிப்பித்தமும்
வகுப்பு மாச்சரியமும்''

வெருண்டோட வேண்டும். அதற்குத் தேவைப்படும்

' தூய்மையும்
வாய்மையும்''
''அஞ்சாமையும்
பணியாற்றும் தன்மையும்''

நம் ஒவ்வொருவருக்கும் இன்று பிறந்திடவேண்டும். அதற்கே இன்று காந்தி அடிகளின் பிறந்த நாளைக் கொண்டாடுகிறோம்.

''பரம ஏழைகளும் இது தங்கள் நாடு என்று எண்ண வேண்டும். அதன் அமைப்பில் தங்களுக்கு முக்கியத்துவமும் அதிகாரமும் இருக்கிறது என்று அவர்கள் நினைக்கவேண்டும், மக்களில் உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி என்பதே இருக்கக் கூடாது. எல்லாச் சமூகத்தினரும் அன்னியோன்யமாய் வாழ வேண்டும். அத்தகைய இந்தியா உருவாகவே நான் பாடுபடுவேன்.''

இதுவே உலக உத்தமர் காந்தி அடிகள் இலட்சியம் என்று பண்டித ஜவகர்லால் நேரு கூறியதை நினைவுபடுத்திக் கொள்வோமாக!

(2—10—67-ல் சென்னை வானொலியில் முதலமைச்சர் அறிஞர் அண்ணா பேசியது.)

## தமிழர் தம் வேட்கை!



**சட்ட அமைச்சர் எஸ். மாதவன்**

திராவிட முன்னேற்றக் கழகத்தின் போர் முரசாய் விளங்கும் இதழ்களில் ''காஞ்சி''க்கு ஒரு சிறப்பிடம் தந்து தமிழ்ப் பெருமக்கள் போற்றி வருகின்றனர். அறிஞர் அண்ணா அவர்களின் கொள்கை விளக்கத்தால், கற்பனைப் படைப்புக்களால் எழுச்சியூட்டும் கட்டுரைகளால், ஏற்றமிகு கருத்தாழத்தால், ''காஞ்சி'' தானும் செழித்து வளர்ந்ததோடு, தமிழகத்தையும் செழிக்க வைத்தது; மக்களை விழிப்படையச் செய்தது. அதன் பலன்தான் இன்று புதியதோர் அரசை—ஏழை எளியவர்கள் வாழ அந்த ஏழை எளியவர்களாலேயே படைக்கப்பெற்ற பைந்தமிழ் அரசை—தமிழகத்தில் காண்கிறோம். இந்த அரசிடமிருந்து மக்கள் ஏராளமான நன்மைகளை நாளும் எதிர்பார்த்த வண்ணம் இருக்கின்றனர். அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்குப் பக்கபலமாக மக்கள் சக்தி இருந்தால்தான் மாபெரும் மாற்றத்தைக் குறுகிய காலத்தில் நாம் நிகழ்த்திக் காட்டமுடியும். மக்களைக் கழகத்தின்பால் திரட்டுவதில் ''காஞ்சி'' தொடர்ந்து தன் பணியினைச் செய்து வர வேண்டும். இது தமிழர் தம் ஒருமித்த வேட்கையாகும்.

''காஞ்சி'' ஆண்டுமலர் கருத்துக் கருவூலமாக வெளிவர எனது நல் வாழ்த்துக்கள்.

தபால்பெட்டி எண்: 124 போன் நெம்பர்: 3247, 2085

# பாலகிருஷ்ண மில்ஸ் பிரைவேட் லிமிடெட்,

47, சேர்மன் முத்துராமய்யர் ரோடு,

மதுரை-9.

*

உயர்ந்த ரக வேஷ்டிகள் மல்கள், காடா துணிகள் முதலியன
மதுரை ஹார்வி மில்ஸ் NF. 17 முதல் NF. 68
நூல்களில் இருந்து தயாரிக்கிறோம்.

மற்றும்

விசைத் தறிகளுக்குத் தேவையுள்ள பாவு நூல்களை சிறப்பான முறையில்
தயார் செய்து கொடுத்து வருகிறோம்.

போன்: 226 தந்தி: SHEIK

ஆதரவாளர்கள் அனைவர்க்கும் எங்கள் வாழ்த்துக்கள்!

# ஷேக் ஷூ மார்ட்,

பழநி.

உயர்தர மிதியடிகள், ஷூஸ் ரகங்கள், கைகெடிகாரங்கள், டைம் பீஸ்கள், ஷூட்கேஸ்கள், குடைகள் மற்றும் பேன்ஸி சாமான்கள் வாங்குவதற்குத் தகுதிமிக்க ஒரே இடம்!

# SHEIK SHOE MART,

BATA & FLEX DEALERS

**PALANI.**

# வரலாறு காட்டும் வழி நடப்பீர்!

## என்.வி. நடராசன் எம்.எல்.சி.

இந்தியர்கள்—நாடாள்வதா? என்ன விந்தை! நாம் ஆளப்பிறந்திருக்கிறோம். அகிலமனைத்தையும் நமது பிடியில் பிணைத்துவைத்திருக்கும் நமது வலிவு எங்கே! கைராட்டையை ஆயுதமாகக் கொண்டுள்ள இந்தக் காந்தியும் மற்றவர்களும் எங்கே! ஒப்பிட்டுப் பார்ப்பதற்கே வெட்கமாயிருக்கிறது — இந்த லட்சணத்தில் சுதந்திரமாம்! சுயராஜ்யமாம்! இல்லையெனில் கிளர்ச்சியாம் போராட்டமாம்! என்ன திமிர் இந்த இந்தியர்களுக்கு? நசுக்கிவிடுவோம் நசுக்கி! பாராள்வதற்கே பரமன் எங்களைப் படைத்திருக்கிறான்! இதைப் புரிந்து கொள்ளாத அடிமைகள் எங்களின் ஆட்சியை எதிர்ப்பதா? நாடாளும் அந்தஸ்து இந்தியர்களுக்கேது அவர்கள் எங்களின் சாடையை அறிந்து ஏவல் புரிவதற்காகவே பிறந்தவர்கள்.........

இவ்வாறெல்லாம் இறுமாந்து பேசிய ஆங்கிலேய ஏகாதிபத்யம் காலத்தின் தீர்ப்பை—உலக நாடுகளின் எழுச்சியை உணர்ந்து— மதித்து தனது ஏகாதிபத்ய தர்பாரிலிருந்து சிறிது சிறிதாக இறங்கி சனநாயகப் பாதையில் நடைபோடத் துவங்கிற்று.

தனது ஆதிபத்யப் பிடியில் கட்டுண்டு வைக்கப்பட்டிருந்த இந்தியாவுக்கு மட்டுமின்றி பிற நாடுகளுக்கெல்லாம் சுதந்திரம் வழங்கிற்று! வழங்கியது மட்டுமல்ல, அந்த நாடுகள் உலகநாடுகள் மன்றத்தில் இடம் பெறச் செய்வதற்கான துணைபுரிந்து அவைகளுடன் சரிசமமாக வீற்று உலகப் பிரச்சினைகளையும் விவாதிக்கிறது!

நாம் ஆளப்பிறந்தோம் — இந்தியர்கள் அடிமைகளாக நின்று நாம் காலால் இட்ட பணியினைத் தலையால் செய்ய வேண்டியவர்கள் என்ற ஆணவத்துடன் பேசிவந்த ஆங்கிலேய ஏகாதிபத்யம் மக்களின்—காலத்தின் தீர்ப்பை மதித்து மற்றவர்களுக்கும் ஆள உரிமையுண்டு நம்மைவிட திறமையும் உண்டு என்ற மனவளத்தையும் பெற்றது. படை பலமும் அறிவுத் திறனும் அரசியல் விவேகமும் நிறைந்த ஆங்கில ஏகாதிபத்யம் காலத்தின் தீர்ப்புக்குப் பணிந்ததால் அதற்கு இழுக்கு ஏற்படவில்லை. அதனின் சனநாயகப் பண்பினை அனைவருமே பாராட்டும் பேற்றினைப் பெற்றது!

ஆங்கில அரசிடமிருந்து சுதந்திரம் பெற்ற இந்தியக் காங்கிரஸ் தலைமைக்கு தாங்கள்தான் ஆளப்பிறந்தவர்கள் என்ற அகம்பாவமும், மற்றவர்களெல்லாம் ஆளத் தகுதியற்றவர்கள் என்ற எண்ணமும் மேலோங்கியிருக்கிறது! அதிலும் குறிப்பாக தென்னாட்டுக் காங்கிரஸ் முகாமினருக்கு உள்ள எண்ணமிருக்கிறதே அதை என்னவென்று பெயரிட்டழைப்பதென்றே புரியவில்லை!

தி. மு. கழகத்தினர் அரசியலில் பிரவேசிப்பதா? அவர்களுக்கு என்ன அந்தஸ்து இருக்கிறது! மிகவும் சாமான்ய மக்கள், இவர்களா அரசியலில் நமக்குப் போட்டி—இது என்ன காலம் என்றெல்லாம் காங்கிரசிலுள்ள கோமான்களும் சீமான்களும் அங்கலாய்த்துக் கொண்டிருந்தனர். அதுமட்டுமா? இந்த கழகத்துக்காரர்களுக்குத் தியாக முத்திரை ஏது? அரசியலோ—பொருளாதாரமோ எதுவும் புரியாமல் ஏதோ அடுக்கு மொழிகளைப் பேசி காலத்தைக் கடத்தும் கூட்டம் அது! என்று இழித்தும் பழித்தும் பேசினர்!

கழகத்தின் மாபெரும் தலைவர் நமது வழிகாட்டி அறிஞர் அண்ணா அவர்களின் அரசியல் பண்பினை உணருவதற்குக்கூட தகுதியில்லாதவர்களாய் எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற முறையில் எள்ளி நகையாடினர்!

அறிஞர் அண்ணா அவர்களின் நிதானமான அரசியலைக் கோழைத்தனம் என்று கணித்தனர் காங்கிரசார்! அந்த நிதானத்தில் பொதிந்துள்ள உறுதி, தூய்மை, விவேகம் ஆகியவைகளை உணரும் ஆற்றலைப் பொதுவாக காங்கிரஸ் தலைவர்கள் இழந்துவிட்டனர்.

காந்தியடிகளின் கொள்கைகளுக்கே வேட்டு வைத்துவிட்ட காங்கிரஸ் தலைவர்களுக்கு, காந்தியாரின் வன்முறையற்ற, தூய அரசியல் முறையைக் கழகத்திற்கே உரித்தாக்கித் தந்த அறிஞர் அண்ணா அவர்களின் அரசியலைப் புரிந்துகொள்ளும் சக்தி ஏது?

ஆதலால்தான் காங்கிரஸ் தலைவர்கள் திசை தடுமாறிப்போய் நாட்டை ஆள்வதென்றால் நாங்கள்தான் ஆளுவோம்! இல்லையெனில் இராணுவம்தான் ஆளும் என்றுகூட கொக்கரிக்கின்றனர்!

சர்வ வல்லமை படைத்த பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் காலத்தின் தீர்ப்பை மதித்து அதற்கேற்பமற்றவர்களுக்கு உரிமை அளித்தது. ஆனால் அத்தகு வல்லமை சிறிதுகூடயில்லாத காங்கிரசோ கழகத்தையும் அதனின்

மாபெரும் தலைவரையும்! ஆளத் தகுதி உங்களுக்கேது—அதை எங்களுக்கல்லவோ ஆண்டவன் உரிமையாக்கி விட்டான் என்று இறுமாந்து பேசிவருகின்றனர்!

ஆங்கிலேய ஏகாதிபத்யம் — நிறைகுடம் தளும்ப வில்லை!

இந்திய காங்கிரஸ் ஏகாதிபத்யம்......? தளும்பு கிறது!

கழகத்தைப் பற்றி வேறு எந்த குறையும் கூற வழி யில்லாத காங்கிரஸ் தோழர்கள், தி. மு. க அடக்கு முறைகளைத் தாங்கும் உள்ளம் படைத்ததா? எங்கள் தலைவர்களைப்போல அந்தக் கொடுமைகளைத் தாங்கவும், துப்பாக்கிச் சூடுகளுக்கு அஞ்சாது நிற்கவுமான தியாக புத்தியுண்டா என்று கேட்டனர்!

காங்கிரஸ் முகாமினரின் இந்தக் கேள்விக்கு தட்டுத் தடுமாற்றமில்லாத பதிலை நாம் அளிப்பதென்றால் ஏடு இடங்கொள்ளாது—ஆதலின் கடந்த கால அதாவது கழகத்தின் இருபது ஆண்டு கால பணியினையே—ஏன் வரலாற்றையே அவர்களுக்குக் காணிக்கையாக்கு கின்றோம்!

தங்களின் மகத்தான உயிரை—தாய் மொழியின் தன்மானத்தைக் காக்க—பிறந்த பொன்னாட்டின் வளத் தைக் காக்க—மக்களின் வாழ்வில் ஒளிவீசச் செய்ய—அர்ப்பணித்த செம்மல்களின் வீர வரலாறு அரசியலி லேயே தனிச் சிறப்புக் குரியது என்று கூறின் மிகை யாகாது.

திராவிட முன்னேற்றக் கழகம்—தியாக முத்திரை யைப் பெற்றது மட்டுமல்ல, அந்தத் தியாக முத்திரை தூய்மையின் அடிப்படையில் எழுப்பப்பட்ட எஃகுக் கோட்டையாகவும் சிறந்து விளங்குகிறது.

இதற்குப் பிறகும் காங்கிரஸ் முகாமினர் தங்களின் தவறான எண்ணத்தையும் போக்கினையும் திருந்திக் கொள்ளும் மனவளம் பெறவில்லை.

மக்களின் மகத்தான தீர்ப்பின் எடுத்துக் காட்டாக ஆட்சிபீடத்தில் அமர்ந்து—ஐந்து ஆண்டுகளில் நிறை வேற்ற வேண்டிய கடமைகளை ஆறே திங்களில் நிறை வேற்றியுள்ள கடமை உணர்ச்சியை அரசியல் கண்ணி யத்தை காங்கிரஸ் தலைவர்கள் மதிக்கவில்லையென்றால், அதனால் கழகத்திற்கோ கழக ஆட்சிக்கோ ஊறு நேர்ந்துவிடும் என்பதைவிட தெரிந்தோ-தெரியாமலோ காங்கிரசின் வீழ்ச்சிக்குக் காங்கிரஸ்காரர்களே காரணமா யிருந்தனர் என்ற மன்னிக்க முடியாத குற்றச்சாட்டுக்கு ஆளாகி வருகின்றனர்!

காங்கிரஸ் கட்சி அறவே ஒழிந்துபட வேண்டும் என்பது கழகத்தின் வழிகாட்டியும் தமிழகத்தின் தலை சிறந்த முதல்வருமான அறிஞர் அண்ணா அவர்களின் எண்ணமல்ல—கழகத்தின் திட்டமுமல்ல யென்பதை இதயபூர்வமாகத் தெரிவித்துக்கொள்கிறோம். காங்கிரஸ் ஆட்சிபீடத்தி லிருந்துதான் இறங்கவேண்டுமே யன்றி, அக்கட்சியே அழிந்துவிட வேண்டும் என்று கழகம் எண்ணியது கிடையாது—எண்ணப் போவதுமில்லை.

ஏன்—கழகம் முழுக்க முழுக்க சனநாயகப் பண் புடன் இயங்கிவருகிறது. அறிஞர் அண்ணா அவர்கள் நிறைவு பெற்ற சனநாயக உள்ளம் படைத்தவர்கள். ஆக சனநாயக நாட்டில் ஆளும் கட்சி—எதிர்க் கட்சி என்ற நிலை இருந்தாக வேண்டும். அந்த வாய்ப்பு கட்சி களுக்கு மாறி மாறி வரக்கூடும். ஆகவே கழகம் ஆட்சி பீடத்தில் அமர்ந்து அரசோச்சும்போது எதிர்க் கட்சி யாக யிருப்பதற்கு காங்கிரஸ் கட்சி இயங்குதல் வேண்டு மல்லவா? அந்த அடிப்படையில் காங்கிரஸ் கட்சியும் அரசியல் கட்சிகளில் ஒன்றாக விளங்கவேண்டும் என்று கழகம் மனமார விரும்புகிறது. ஆனால் காங்கிரசின் தலைமையோ தனக்குத் தானே அழிவு தேடிக்கொள்ள விரைந்தோடுகிறது!

காங்கிரசின் தற்போதைய தடுமாற்றத்தைக் கண்டு பரிதாபப்படுகின்றோம். காலத்தின் தீர்ப்பை அறிந்து தனது ஏகாதிபத்யப் போக்கிலிருந்து திருந்திய ஆங்கி லேய அரசின் வரலாற்றை உணர்ந்து நடப்பதற்கான தகுதியைக்கூட அதுவும் தனக்கு ஏற்பட்டுள்ள நெருக் கடியில்கூட—தவறை உணர்ந்துநடக்கும் மனவளத்தை அறவே இழந்துவிட்ட காங்கிரசைக் கண்டு அனுதாபப் பட வேண்டியிருக்கிறது!

கழகம்! கடந்த இருபது ஆண்டுகளாக திசை மாறாத—மக்களுக்கு அளித்த உறுதிகளிலிருந்து தவறாத உறுதியுடனும் அரசியல் உணர்வுடனும் அறிஞர் அண்ணா அவர்களின் சீரிய தலைமையில் நிதானமாக—இலட்சிய உறுதியுடன் பயணத்தை நடத்திவருகிறது. இந்தியத் துணைக்கண்டத்திற்கே வழிகாட்டும் மாநில மாக தமிழ் நாடும் தமிழக அரசும். அதனின் மாண்பு மிகு முதல்வராம் நமது அண்ணா அவர்களும் அமைச்ச ரவையும் மக்கள் ஆட்சிக்கு வகுத்துள்ள அரசியல் நெறி யின்படி ஆட்சியை நடத்தி வருகின்றனர்.

வரலாறு காட்டும் வழியினை மதித்து நடக்காத காங்கிரஸ் இனியாகிலும் ஆணவத்தை விடுத்து அறி வின் வழி பணியாற்றுமென்று எதிர்பார்க்கிறோம்.

நமது கழகத் தோழர்களைப் பொருத்தவரை நமது அண்ணா அவர்கள் பெற்றுத் தந்துள்ள அரசியல் நெறி யிலிருந்து தவறாது கடமைகளை நிறைவேற்றுவோம். 'காஞ்சி' காட்டும் வழி சாதாரணமானதல்ல. அரசியல் வரலாறு பொதிந்துள்ள மகத்தான வழி!


உலக நாடுகளின்—அதன் அதிபர்களின் மனமாற் றத்தை உணர்ந்து நடப்பதுதான் கடமையாகும். அந் தக்கடமையிலிருந்து தவறுபவர்களை—அதாவது வர லாறு காட்டும் வழியைப் புறக்கணித்து நடப்பவர்களை காலம் ஒதுக்கித் தள்ளிவிடும் என்பதை மீண்டும் ஒரு முறை காங்கிரஸ் தலைவர்களுக்கு நினைவுபடுத்திவிட்டு, நாம் இதுவரை இருந்ததைவிட அதிகக் கட்டுக் கோப் புடனும் தோழமையுடனும் கழகப் பணிகளை நிறை வேற்றுவோமாக! அதுதான் நமது அண்ணா அவர் களுக்கு நாம் செலுத்தும் தூய்மையான அன்பும் விலை மதிக்க முடியாத காணிக்கையுமாகும்.

இத்தகுபணிக்கு கழகத் தோழர்கள்—பேச்சாளர் கள் மற்றும் அனைவருக்கும் உற்ற துணையாகயிருந்து வரும் "காஞ்சி" மேலோங்கி வளர்ந்து தனது பணியில் வெற்றி பெற வேண்டுமென்று இதயபூர்வமாக வாழ்த்துவோமாக!

வாழ்க அண்ணா!

வளர்க காஞ்சி!

வெல்க அதனின் தொண்டு!



# பொற்காலம் காண்போம்!



நாட்டினரே! நண்பர்களே!

இன்று விடுதலைத் திருநாள் கொண்டாடுகிறோம். இது போது உங்களுடன் சேர்ந்து இந்தத் திருநாள் தந்திடும் மகிழ்ச்சியிலும் எழுச்சியிலும் பங்குகொள்ள விரும்புகிறேன்.


இன்று நாம் நடத்திடும் திருநாள்—சுதந்திர விழா—இங்குள்ள நம்மால் மட்டுமல்ல, உலகெங்கும் உள்ள பல்வேறு நாட்டினராலும் போற்றப்படும் பொன்னுளாகும்.

இன்று ஆகஸ்டுபதினைந்தாம் நாள்—ஆங்கில நாட்டின் ஆதிக்கத்திலிருந்து இந்தியா விடுதலை பெற்று, சுதந்திரக் கொடியினைப் பெருமிதத்துடன் ஏற்றிடும் நன்னுள்—தன்னரசு பெற்ற நாள்—உரிமைப் போரிலே வெற்றி கண்ட நாள்—என்று பாராட்டுவர்:; பாராட்டுகின்றனர்.

வரலாற்று ஏடுகளிலே, இந்நாள் தனிச் சிறப்பை அளிக்கும் நாளாகப் பொறிக்கப்பட்டிருக்கின்றது.

கவிஞர்கள் எழுச்சிமிக்க கவிதை கொண்டு இந்நாளை வரவேற்கின்றனர்.

இந்நாள் திருநாள் — ஐயமில்லை; இந்நாள் பொன்னுள்—மறுப்பார் இல்லை; இந்நாள் நமது உரிமையை உலகு ஒப்புக்கொண்டு விட்டது என்பதனை அறிவிக்கும் நாள்—அறிகிறோம்; அகமகிழ்ச்சி பெறுகிறோம்.



அடிமைத் தளைகளை அகற்றி, அன்னிய அரசு அகற்றி, ஆதிக்கத்தினை அகற்றி, நம்மை நாமே ஆண்டு கொள்ளும் உரிமை பெற்றிட எவரெவர் என்னென்ன முறையில் தொண்டாற்றினர். எத்தகைய இன்னல்களை யும் இழப்புகளையும் ஏற்றனர். இன்னுயிர் ஈந்தனர் என்பது பற்றிய நினைவு நெஞ்சத்தில் நிரம்பி, அம் மாவீரர்கட்கு வீரவணக்கம் செலுத்திட வேண்டும் என்ற உணர்ச்சியைத் தருவதுடன், அத்தகைய வீரர் கள் வழி வழி வந்தோர் நாம் என்ற எழுச்சிமிக்க உணர் வைக் கொடுத்திடும் நாள்—இந்த ஆகஸ்டு பதினைந்து.

இழந்த அரசையாவது, இவர்கள் மீட்பதாவது—இவர்களுக்கு ஏது அதற்கான ஆற்றல்—இவர்களாவது ஒன்றுபட்டு நம்மை எதிர்ப்பதாவது என்று ஏகாதிபத்திய வாதிகள் எக்காளமிட்டனர். வேட்டு கேட்டதும் விடு தலை வீரர்கள் மிரண்டோடுவர், சிறை என்றதும் சிந்தை குழம்புவர் என்று எண்ணினர்.

ஆனல் வீரக்கனல் கொழுந்துவிட்டு எரிந்தது! உரிமைக் கிளர்ச்சி புயலாக வடிவமெடுத்தது! கூனிக் கிடந்தோன் நிமிர்ந்து நின்ருன்! விழி பழுதாகிக் கிடந் தவனுக்கும் கண்களிலே ஓர் புத்தொளி கிளம்பிற்று. அச்சம் அழிந்தது. ஆணவபுரியினர், ஓர் புதிய நாடு எழுந்து நிற்பதனைக் கண்டனர்.

''எதற்கும் அஞ்சப் போவதில்லை எதிர்த்துத் தாக்கப் போவதில்லை, எம்மை வாட்டி வதைத்திடினும் தாங்கிக்கொள்வோம். எமது நாடு எமக்கே; எமது அரசு எமக்காதல் வேண்டும் என்ற முழக்கம், எம்மை அடக்க வரும் பீரங்கிச் சத்தத்தையும் அடக்கிடும்'' என்று வீரர் கூறினர்—'இதுவா இந்தியா' என்று ஆங் கிலர் கேட்டனர்.

ஆம், இது விழிப்புற்ற இந்தியா, வீறு கொண்டு எழுந்துவிட்ட இந்தியா, விடுதலையைப் பெற்றிட எந்த விலையையும் தந்திடத் துணிந்து நிற்கும் தூய்மை நிறைந்த நாடு என்று உலக உத்தமர் காந்தியார் உரைத்தார்; இந்நாள் அவர் அந்நாளில் காட்டிய அறநெறியால் கிடைத்தத் திருநாளாகும்.

இந்நாள், நமக்கெல்லாம் அந்நாள் நிகழ்ச்சிகளை நினைவிலே கொண்டு வந்து பாடம் கற்பித்திடும் நாளா கும். இந்நாள் வந்திடின், நாடு என்னென்ன வண்ணம் பெற்றிடும். ஏற்றம் பெற்றிடும் என்றெல்லாம் விடுதலை வீரர்கள் அன்று எண்ணினர் என்பதனை இன்று எண் ணிப் பார்த்திடல் வேண்டும்.

வந்தது சுதந்திரம், வாழ்கின்ருேம்—நம்மை நாமே ஆள்கின்ருேம் என்ற உரிமையுடன். ஆனல், 'வாழ் கின்ருேமா?' நம்மை நாமே கேட்டுக்கொள்ள வேண் டிய கேள்வி இது. வாழ்கின்ருேமா?

வாழ்கின்ருேம் என்பதற்கும், இருக்கின்ருேம் என்ப தற்கும் பொருள் வேறுபாடு மிகுதி...நம்மிலே மிகப் பெரும்பாலோர் இன்று 'ஏதோ இருக்கின்ருேம்' என்று கூறிடும் நிலையிலே உள்ளோம்; 'வாழ்கின்ருேம்' என்று மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்ளும் நிலையில் அல்ல.

பட்டொளி வீசிப் பறந்திடும் சுதந்திரக் கொடி யினைக் காணுகின்ருேம். இன்னிசை கேட்கின்ருேம். அணிவகுப்புகள் நடாத்துகின்ருேம். அவனிக்கு அறி விக்கின்ருேம்—இது எமது சுதந்திர நாள் என்று. ஆனல் வாழ்கின்ருேமா...? வாழ்வு நல்வாழ்வாக, புது வாழ்வாக முழுவாழ்வாக மலர்ந்திருக்கிறதா?

ஏழ்மையும் அறியாமையும் ஒழிந்த நிலையே, வாழ் கின்ருேம் என்று கூறிட நாம் உரிமை பெறும் நாளாகும், இல்லாமையும் போதாமையும் ஒழிந்த நாளே, நாம் வாழ்வு பெற்றிடும் புதுநாளாகும்.

பேதமும் பிளவும் நீங்கி எல்லோரும் ஒன்று என்ற நிலை பிறந்திடும் நாளே வாழ்விலோர் திருநாள். பிற ரைத் தாழ்த்தாமல், பிறர் தாள் விழாமல், சுரண்டாமல், சுரண்டப்படாமல், உழைத்து உழைப்பின் பயனைப் பெற்று, புன்னகை பூத்திடும் முகத்தினராகிடும் நாளே, நாம் வாழ்கின்ருேம் என்று கூறிடும் நிலையினை நமக்கு அளித்திட முடியும்.

இந்நிலையை நாம் அடையும் வரையில், 'இருக் கின்ருேம்' என்று மட்டுமே கூறிக்கொள்ள முடியும்; 'வாழ்கின்ருேம்; என்று கூறிக்கொள்ளும் உரிமை நமக்கு இல்லை.

விடுதலை பெற்ற நாடுகள், வாழ்வது மட்டுமல்ல, பிற நாடுகளை வாழவைக்கவும் வல்லமையும் வசதியும் பெற்றுள்ளன. காணுகின்ருேம் நாம்! வாழ்வின் இலக் கணத்தை நாடி நடைபோடுகின்ருேம்.

சுதந்திரம் பெருத நாட்களில், நாம் ஏழ்மையிலும் அறியாமையிலும் சிக்கிக் கிடந்தோம்—எனினும் உல கின் பண்பாளர். நம்மைக் கேவலமாகக் கருதவில்லை. பரிவு காட்டினர் பாவம்! வளம் நிறைந்த நாடுதான்! பொன் விளையும் பூமிதான்! என்ருலும் என்ன செய்ய இயலும்? ஆங்கில ஆதிக்கம் அந்நாட்டு மக்களை அவ திக்குத் தள்ளிவிட்டது!' என்று பேசினர். விடுதலை பெறவேண்டும் என வாழ்த்தினர். நல்லெண்ணத்தை வழங்கினர்.

ஆனல் விடுதலை பெற்ற பிறகும் ஏழ்மையும் அறி யாமையும், பேதமும் பிளவும் நீடித்து இருந்திடக் காணும்போது, என்ன எண்ணுவர், என்ன கூறுவர், யாரைக் காரணமாகக் காட்டுவர், இந்நிலைமைக்கு? நம்மை நாமே அல்லவா ஆண்டுக்கொண்டிருக்கிருேம்; நம்முடைய வாழ்வுக்கும் தாழ்வுக்கும் நாமே அல்லவா பொறுப்பாளிகளாகிவிட்டோம்!

ஆகஸ்டு பதினைந்து என்னும் விடுதலைத் திருநாள் மகிழ்ச்சி, எழுச்சி, வீர உணர்ச்சி ஆகியவைகளைத் துவக்கத்தில் தந்திட உதவிற்று. ஆண்டு இருபதைக் கடந்துவிட்டோம். இன்றைய ஆகஸ்டு பதினைந்து, நமக்குப் பொறுப்புணர்ச்சிகளைத் தந்திடும் நாளாகிறது. 'சுயராஜ்யம் பெற்றிடுவோம். சுயராஜ்யம் அமைத்திடு வோம்' என்று சூள் உரைத்தோமே, அதற்கான முயற்சி யிலே முனைந்து நிற்கிருேமா, யாது செய்திடின் அந்த இலட்சியத்தை அடைய முடியும் என்பது பற்றி எண் ணிச் செயலாற்றிடும் பொறுப்புணர்ச்சியைத் தந்திடும் நாள், இன்றைய ஆகஸ்டுப் பதினைந்து.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எடுத்துரைத் தார் வள்ளுவப் பெருந்தகை, 'உறு பசியும் ஓவாப் பிணி யும் செறுபகையும் அற்றது நாடு' என்று! இருபதாண்டு கள் உருண்டோடி விட்டன. ஆண்டுக்காண்டு விழா நடத்துகின்ருேம். விருத்தம் பாடுகின்ருேம்; வள்ளுவர் தந்த நாடு காண்பதில் வெற்றி பெற்ருேமா? இது இன் றுள்ள கேள்வி.

விழா மகிழ்ச்சியைக் கெடுத்துவிடுமோ என்று அஞ்சி, இந்தக் கேள்வியினை எழுப்பாமல் விட்டுவிடு வது மிகமிகத் தவறு.

ஆயாசப்படவோ சலிப்படையவோ. மனம் உடை யவோ அல்ல, இந்தக் கேள்வியை எழுப்பவேண்டும் என்று நான் கூறுவது. மேலும் செம்மையாகச்செயலாற் றும் உணர்வு பெற, இந்தக் கேள்வி தேவை!

இந்தக் கேள்வி அரசியல் கட்சிகளுக்கு அப்பாற்பட்டது. இது நாட்டு மக்கள் இதயத்திலிருந்து எழுந்திடும் கேள்வியாகும்.

இயற்கை கொஞ்சுகிறது. இல்லாமை கொட்டுகிறது—மறுப்பதற்கில்லை.

வளம் பெருகுகிறது, சிறு சிறு வளைக்குள்ளே புகுந்துகொண்டுவிடுகிறது—மறைப்பதற்கில்லை

மக்கள் தொகை பெருகுகிறது. நலிவு நெளிகிறது—ஒப்புக்கொண்டாகவேண்டும்.

பற்றுக்குறை மிரட்டுகிறது அக விலை அலைக்கழிக்கிறது. கள்ள வாணிபம், கொள்ளை லாபம், குறுக்கு வழிகள், கலப்படம் இவை போன்ற கேடுகள் நாட்டைப் பாழ்படுத்துகின்றன. கொடி பறக்கிறது, கோலாகலமாக! கூடவே இக் கொடுமைகள் நெளிகின்றன — அடக்குவார் யார் என்று கேட்டபடி!



இந்நாள், நாட்டின் நிலையை நாம அறிந்திடல் வேண்டும். சுதந்திரத் திருநாள் தந்திடும் மகிழ்ச்சியுடன், விழிப்புணர்ச்சியும் இழைந்திட வேண்டும். அப்போதுதான். எதற்காக சுதந்திரம் பெற்றளித்தனரோ பெரியோர்கள், அந்த நல்ல நிலையினை நாடு பெற்றிடும்; சுதந்திரத்தின் கனிச்சுவை கிடைத்திடும்.

பாலைவனம் சோலைவனம் ஆகவேண்டும். அங்கு பசுங்கிளிகள் பாடிடவும் வேண்டும்—இது வெறும் கவிதையாகவே என்றென்றும் இருந்திடக் கூறப்பட்டது அல்ல. செயல்படுத்திக் காட்ட முடியும் என்ற உறுதியை நாம் அனைவரும் பெற்றிட, தரப்பட்டதே இதுபோன்ற கவிதைகள்.

இந்நாள், அந்த உறுதியினைப் பெற்றிட வேண்டும்.

'சுதந்திரம் பெற்றோம். அதைக் காத்திடும் வல்லமையும் பெற்றோம்' என்று கூறிக் களித்திடுவதுடன் நில்லாது, "சுதந்திரம் பெற்றோம், சுகவாழ்வு பெற்றோம்' என்று கூறிப் பெருமிதம் கொண்டிடத்தக்க இலட்சியத்தை நோக்கி நடந்திட வேண்டும். உறுதியுடன், உற்சாகத்துடன், நம்பிக்கையுடன்.

மிகப் பெரிய ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து விடுதலை பெற்றிட முடிந்தது. அதற்கான ஆற்றல் நம்மிடம் இருந்திருக்கிறது. அதே ஆற்றல், இந்நாட்டிலுள்ள ஏழ்மையையும் அறியாமையையும், பேதத்தையும் பிளவையும் போக்கிடப் பயன்படவேண்டும் என்ற உணர்ச்சியையும் பெறவேண்டும்.

கொடி ஏற்றுபவர், கோலாகல விழா நடத்துபவர், விடுதலை வீரர்களைக் கொண்டாடுபவர்—இவர்கள் மட்டும் போதுமா, அந்த இலட்சியம் நிறைவேற!

உச்சிப்போது வந்தது கண்டும் சளைக்காமல் உழுதுகொண்டிருக்கிறானே உழவன் அவனும்...

பல தொழில்களிலே ஈடுபட்டுப் பொருளை உற்பத்தி செய்கிறானே பாட்டாளி, அவனும்...

சிறுவர்க்கும் சிறுமியர்க்கும் அறிவுக் கண்களைத்திறந்து வைத்திடும் ஆசிரியர்கள் உள்ளனரே, அவர்களும்...

நலிவு நீக்கிடத் தொண்டாற்றுகின்றனரே மருத்துவத் துறையினர் அவர்களும்...

காட்டு வெள்ளத்தை அடக்கி, நீர்வளம் கொண்டு நிலவளம் பெருக்கி, ஊர் அமைத்து சீர் அமைத்துத் தருகின்றனரே, பொறியியல் துறையினர் அவர்களும்...

நாட்டு நிர்வாகத்திற்கான பல்வேறு துறைகளிலே பணியாற்றுகின்றனரே அலுவலர், அவர்களும்...

இவர்களின் திறமையிலும் செயலார்வத்திலும், வெற்றியிலும் இருக்கிறது சுதந்திரத்தின் சோபிதம்—விடுதலையின் விளைவு!

அவர்கள் சுதந்திரத்தின் காவலர். அவர்களுக்கு என் வணக்கம்.

நாட்டை மீட்டிட்ட நல்லோர் அதனை இன்று எவரும் பறித்திடா வண்ணம் பாதுகாத்து நின்றிடும் போர்வீரர் ஆகியோருடன், நாட்டு நிலையை உயர்த்திட நாளும் பாடுபடும் செயல்வீரர், ஆகியவர்களுக்கு வணக்கம் கூறிட வாழ்த்து வழங்கிட போற்றிப் பாராட்டிட ஏற்ற நாள், இத்திருநாள்!


கூட்டுறவே நாட்டுயர்வு!

# காஞ்சீபுரம் கூட்டுறவு பண்டகசாலை லிமிடெட்.,

எண் G. 1063 காஞ்சீபுரம்.

தலைமை நிலையம்: 64, நடுத்தெரு, சேக்குப்பேட்டை.

காஞ்சித் திருநகரில் மக்கள் நலம் புரியும் மூத்ததோர் பண்டகசாலை!

மலிவு விலைகளிலே மளிகை சாமான்கள்

எங்களது ஆறு கிளை விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.

A. B. கண்ணபிரான்,
தலைவர்,

# காதல் ஏக்கம்

—[கவிஞர் பி. மணிவேந்தன், எம். ஏ.,]—

ஊரெல்லாம் உறங்குகின்ற வேளை; நானும்
உறங்காமல் விழித்திருக்கும் நேரம்; மின்னும்
கூரம்பு விழிபடைத்த மங்கை; அன்பால்
கொஞ்சுமொழி பேசும்இள நங்கை; தங்கப்
பேரழகுச் சிலைபோல வந்தாள்; வெட்கம்
பேதையினைத் தடுத்திடவே நின்றாள்: அந்த
மார்பழகுப் பெட்டகத்தைக் கண்டேன்; என்றன்
மாங்குயிலே வா என்றேன்; அருகே வந்தாள்!

வந்தவளை ஆர்வமுடன் பார்த்தேன்; மின்னும்
வடிவழகி செவ்விதழைக் கண்டேன்; காதல்
சொந்தமுடன் இருகணைக்கச் சென்றேன்; வண்ணச்
சொக்குமெழில் பைங்கிளியாய்த் தோன்றும் அந்தச்
சுந்தரியின் பொன்னுடலும் எரிய; தீயின்
சுடுநெருப்பாய் என்னுடலும் தகிய; வேர்வை
சிந்துகின்ற இருவுடலும் தழுவ; கொஞ்சிச்
சிரிக்கு(ம்)அவள் இதழோடேஇதழைச்சேர்த்தேன்!

சேர்த்திருந்த இதழெடுத்துச் சிரித்து நின்றாள்
செம்பவள வாய்திறந்தே 'அத்தான்' என்றாள்!
வேர்த்திருந்த முகமலரில் பனிமுத் துக்கள்
வேல்விழியாள் சிரிப்பினிலே நகை முத் துக்கள்
பார்த்திருந்த குவளைமலர்க் கண்க ளாலே
பாவியென்றன் உயிர்மலரைப் பறிக்க வந்தாள்!
கோர்த்திருந்த கையெடுக்க மனமில் லாமல்
கொடிபோலும் என்னுடலைத் தழுவிக் கொண்டாள்!

கொடிபோன்ற அவளுடலைத் தழுவ லானேன்
குமுதமலர் வாயிதழைப் பருக லானேன்
துடியிடையைக் கைகளினால் தேட லானேன்
தோகைமயில் மேனியினைத் தடவ லானேன்
விடியாத நல்லிரவை வாழ்த்த லானேன்
விளங்காத புதுப்பாடம் படிக்க லானேன்
முடியாத தொடர்கதையை முடிக்க லானேன்
முத்தமழைத் தேனமுதைக் குடிக்க லானேன்!

கடிமலரில் வண்டினங்கள் வாயை வைத்து
கருத்துடனே தேனுண்டு களித்தல் போலே
கொடிவுடலில் பூத்திருக்கும் இதழாம் பூவில்
கோடிமுறை தேனருந்தி மகிழும் போது
அடிவிழுந்த உணர்வுடனே எழுந்தேன்; என்னை
அணைத்திருந்த ஆரணங்கைக் கண்டேன் இல்லை!
இடிவிழுந்த பனைமரம்போல் எழுந்து நின்றேன்
எல்லாமே கனவென்று உணர்ந்து நைந்தேன்!

ஏறுநடை, ஒளிவிடும் கண்கள், புன்னகை பூத்த முகம் எனும் காட்சி கண்டிடத்தக்க திருநாள்.

இவற்றைவிட, நமது கடமையை உணர்ந்து, நாட்டை வாழவைத்திடும் செயலில் ஈடுபடும் உறுதியைப் பெற்றிடும் நன்னாளாகும்.

தனித்தனியே நமக்கு உள்ள விருப்பு வெறுப்பு, உரிமை, சலுகை எனும் எல்லாம், நாடு வாழவேண்டும் என்ற பொதுக் கடமைக்குத் துணை செய்வதாக அமைய வேண்டும். நமது முறைகள் அவ்விதம் இருந்திட வேண்டும்.

நாடு வாழ, நம்முடைய உழைப்பும் தேவை என்ற உணர்வு எல்லோருக்கும் எழவேண்டும்.

இவனால் என்ன ஆகும். இவனே இதற்கு ஏற்றவன், இவனுக்கு ஏது அந்த ஆற்றல்—என்று, மறந்தும், எவரைப்பற்றியும் எண்ணிடலாகாது. அந்த எண்ணம் நாட்டு வாழ்வுக்கே ஊறு செய்திடும்.

நாம் எல்லோரும் எப்படி இருக்கிறோமோ. அப்படித்தான் நாடும் இருக்கும். இது எவரும் ஒப்புக்கொள்ளக் கூடிய உண்மை. நாடு என்பது வெறும் பூகோளப் படம் அல்ல, அங்கு வாழும் மக்களின் உணர்ச்சித் தொகுப்பு.

நாம் யாவரும் நமது அறிவாற்றலை நாட்டுக்காக எந்த அளவு தருகின்றோமோ, அந்த அளவுக்கே நாட்டுப் பொது நன்மை உயர முடியும்.

விடுதலை பெற்றதால் நாடு நல்வாழ்வு பெற்றிருக்கிறது என்று அவனி பாராட்டும் நிலையைக் காண நாம் என்ன செய்திடவேண்டும், நாம் தந்திடும் காணிக்கை யாது என்பதுபற்றி ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டிய நாள்.

களிப்படைய மட்டுமல்ல, நண்பர்களே! இது கணக்குப் பார்க்கும் நாளாகும். 'நாம் சுதந்திரம் பெற்ற பிறகு, நாடு வாழ்ந்திட நாம் தந்தது என்ன, இனி என்ன தரவேண்டும் எவ்வளவு தரவேண்டும்?' என்ற கணக்குப் பார்த்திடும் நாள்,

முதல் ஆகஸ்டு பதினைந்து, கணக்கு தீர்த்தநாள்—ஏகாதிபத்தியத்துக்கும் நமக்கும் இருந்து வந்த கணக்கைத் தீர்த்த நாள், புதுக் கணக்கு போட்ட நாள்.

இருபதாண்டுகளுக்குப் பிறகு, இன்றைய ஆகஸ்டு பதினைந்து, கணக்குப் பார்க்கும் நாள்—சுதந்திரம் பெற்ற பிறகு, நமது சொல்லும் செயலும் எந்தமுறையில், எந்த அளவுக்கு நமக்குச் சுகவாழ்வு பெற்றளித்தது என்ற கணக்குப் பார்க்கும் நாள்.

இந்நாளில் உங்களோடு சேர்ந்து மகிழ்ச்சியும் எழுச்சியும் பெறுகின்றேன்.

உமது அறிவாற்றலின் துணையுடன், பெற்ற சுதந்திரம் பேணிக் காப்பாற்றப்படும் என்ற உறுதி பெறுகின்றேன்.

சுதந்திரத்தின் பலனை நல்ல அளவுக்கு நாட்டவர் அனைவரும் பெற்றிட, உழைத்திட வாரீர் என்று அழைக்கின்றேன். மனக்கண்ணால் காணுகிறேன். உறுதி படைத்த உம்மை வாழ்த்துகின்றேன். வணங்குகின்றேன். உமது ஒப்பற்ற ஆற்றலின் துணைகொண்டு நாடு எத்தகைய ஏற்றம் பெறப்போகிறது என்பதுபற்றி எண்ணுகின்றேன். ஒரு புன்னகைப் பூந்தோட்டம் என் எதிரே காணுகின்றேன், எழில் மிக்கதோர் எதிர்காலம் காண்கின்றேன். அந்த பொற்காலம் கண்டிட, வழி அமைத்திடும் நன்னாளே, இத் திருநாள்.

வாழிய நீவிர்! வாழிய நம் நாடு!

[ 15—8—67-ம் நாள் முதலமைச்சர் அறிஞர் அண்ணா சென்னை வானொலியில் பேசியது. ]

என்றும்

# கோபால் பல்பொடி

உபயோகியுங்கள்.

தயாரிப்பவர்கள்:


## எஸ். பி. எஸ். ஜெயம் அண் கோ.,

வேல் கெமிக்கல் ஒர்க்ஸ்

மதுரை-1

போன்: 4653





டெலிபோன்: 2203 தந்தி: எச்சிபிட்டர்

ரசிகர்களுக்கு

எங்கள் வாழ்த்துக்கள்!

# ஸ்ரீ தேவி டாக்கீஸ்

மதுரை.

உரிமையாளர்கள்: கே. ராமகிருஷ்ணன்

கே. மீனாட்சிசுந்தரம்

# வா. அ. புன்னையப்ப நாடார் குழும்பு

இரும்பு, வன்சரக்கு, வண்ணப்பூச்சு வணிகர்கள்

247, கீழைமாசி வீதி, மதுரை-1.

தொலைபேசி: 4238 கம்பி: VAPCO

---

கிளை:

2137, வெங்கடாசல முதலி தெரு, சென்னை-3.

தொலைபேசி: 33334 கம்பி: VAPSONS

**V. A. PUNNAIYAPPA NADAR & COMPANY.**



தொலைபேசி: 2506

## T. M. M.

# கந்தசாமி நாடார் சன்ஸ்,

பலசரக்கு நவதானிய வியாபாரம்,

7, வெங்கலக்கடை தெரு,

மதுரை.

*

தலைமையகம்:

விருதுநகர்

தொலைபேசி: 26

*

கிளை:

தூத்துக்குடி

தொலைபேசி: 246




நாம் அரசுப் பொறுப்பேற்றுக் கொண்டபோது, தமிழகத்தின் அரசியல் நிலை எப்படி இருந்தது? பதவி ஒன்றுக்காக எதனையும் செய்தே தீருவது என்று முன்னாள் ஆண்டவர்கள் செயல்பட்டதனால் நாட்டின் மொத்த நிலைமை எப்படி எப்படிப் பாழ்படுத்தப்பட்டிருந்தது?

பொறுப்பேற்கப் போகிறோம்! என்ற நினைப்பு இதயத்தில் இன்பத்தைப் பாய்ச்சவில்லை! மாறாக, காங்கிரஸ்காரர்களால் பாலையாக்கப்பட்டுவிட்ட இந்த நாட்டை சோலையாக்கும் ஒரு கூட்டுப் பொறுப்புக்கு அழைக்கப்படுகிறோம் என்ற அச்ச உணர்வுதான் எழுந்தது!

எல்லோருக்கும் வழிகாட்டியாகவும் அண்ணனாகவும் தலைவர்க்குத் தலைவராகவும் இருக்கின்ற அண்ணா அவர்கள் காட்டும் பாதையில் நாம் நடையிடப் போகிறோம் என்ற ஒன்றுதான், பாலையைச்சோலையாக்கி விட முடியும் என்ற தன்னம்பிக்கையைத் தோற்றுவித்தது! செயல்படுகிறோம்! செயல்படச் செய்கிறோம்! நீங்களும் செயல்பட வேண்டுமென உரிமையோடு அழைக்கிறோம்!

கழக அரசாங்கத்தின் ஒரு சில செயல் திட்டங்களை சோலையாக்கும் பணியில் ஒரு சிறு துளியை இங்கே எடுத்துக் காட்டுவது இந்த நேரத்தில் எல்லோருக்கும் பயன்படுமென்றே நம்புகிறேன்.

தாழ்த்தப்பட்ட, பிற்போக்கு நிலைமையிலுள்ள ஏழை எளிய குடும்பத்தினரின் வருவாய் ரூ. 1500-க்குக் குறைவாய் இருந்தால்தான், அந்தக் குடும்பத்துக்கு அரசாங்கத்தின் உதவித் தொகை கிடைத்து வந்தது முன்னைய அரசாங்கத்தில். கழக அரசாங்கம் அதன் வரம்மை ரூ. 2000 ஆக உயர்த்தியுள்ளது. இதனால் இன்னும் பல குடும்பங்கள் கல்வித்துறையில் பயன் பெற வாய்ப்புண்டாகியுள்ளது.

நிலமில்லாத, ஏழை எளிய பாட்டாளி மக்களுக்கு வீட்டுமனை, சாகுபடி நிலம் முதலான வற்றிற்கு நீண்டகாலக் குத்தகை முறையில் பட்டா வழங்கிக் கொண்டு வருகிறது.

அரிஜன மக்களுக்கான கல்வி வீதத்தை 16 லிருந்து 25 வரை உயர்த்தியுள்ளது தி. மு. க அரசு. ஆனால் இந்தக் கல்வியாண்டில் இந்த 16 சதவீதம்கூட பூர்த்தியாகாமலே இருந்து வருகிறது. அரிசன மக்கள், அரசாங்கத்தின் இந்த சலுகையை சரியான முறையில் பயன்படுத்திக்கொள்ள முன் வர வேண்டும்.

கிராமங்களில் குடிதண்ணீர், சாலைவசதி முதலானவைகளை அந்தந்த பஞ்சாயத்துக்கள் முழு அக்கறையுடன் கவனித்துச் செயல்படாததினால், வருங்காலத்தில் அரசாங்கமே மேற்கொண்டு அதனைச் செயல்படுத்தத் திட்டமிட்டிருக்கிறது.

கலப்புத் திருமணத்துக்கு ஆக்கம் தரும்வகையில் நிதி ஒதுக்கி, பதக்கம் வழங்கி வருகிறது! சீர்திருத்தத் திருமணங்களைச் செல்லுபடியாக்கும் சட்டம் கொண்டுவர ஏற்பாடுகள் நடக்கின்றன.

நாகரிகம் வானளாவ வளர்ந்து விட்ட இந்த நாளிலும் இன்னமும் பல நகராட்சிகள், தம் நகரசுத்தித் தொழிலாளர்க்கு கூடையும் வாளியும் கொடுத்துக் கொண்டிருக்கிறது, கழிவுகளைச் சுத்தம் செய்ய! இதனை பூருவும் மாற்றி 'பிளஷ்—அவுட்' (FLUSH-OUT) முறைக்குக் கொண்டுவர முடிவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தை மல்கானீர் ரிபோர்ட் படி அரசுத் துறையிலேயே மேற்கொள்ள முடிவெடுக்கப்பட்டுள்ளது. இந்த திட்டப் பரிந்துரை காங்கிரஸ் காலத்திலேயே கொடுக்கப்பட்டிருந்தும், அது இது வரையில் மேற்கொள்ளாமலிருந்தது வருந்தத் தக்கதாகும்.

தீண்டாமைப் பேய் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களது தீவிர பிரசாரத்திற்குப் பிறகும், காந்தி அடிகளின் வேண்டுகோளுக்கு அப்புறமும் கழக முயற்சிகளையும் மீறி நடமாடிக் கொண்டுதான் இருக்கிறது; இத்துறையில் இதுவரை எடுக்கப்பட்ட முயற்சிகள் போதிய பலன் தரவில்லை. அதனால் போலீஸ் துறை மூலமாவது அதனை அகற்ற முடியுமா என்பதுபற்றி யோசிக்கப்படுகிறது.

சென்னை நகரத்துக்குள்ளிருக்கும் குடிசை வீடுகளை எல்லாம் அகற்றி—புதுமுறை வீடுகளாய் மாற்றியமைக்கப்பட்டுக் கொண்டு வருவது உங்களுக்குத் தெரிந்ததுதான்!

தமிழக அரசாங்கத்தின் அச்சகத் துறை பற்றியும் சில பல சீர்திருத்தங்கள் மேற்கொள்ள முனைந்துள்ளது அரசு. கெய்வார் தலைமையில் ஒரு நபர் குழு நியமித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதன் முடிவு கிடைத்ததும், அதனை ஆராய்ந்து நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

அரசின் பல துறைகளிலும் எல்லா நடவடிக்கைகளும் தமிழ் மயமாக்கப்பட்டுள்ளது. அது போலவே செய்தி விளம்பரத் துறையும் தமிழ் மயமாக்கப்பட்டுள்ளது. இன்னும் சில துறைகளில் தமிழ் மாற்றம் விரைவில் நடை முறைப் படுத்தப்படும்.

திரைப்படக் கொட்டகைகளை, அரசுடைமையாக்குவது பற்றி யோசனையிலிருக்கிறது. இது நல்ல வருவாய் தரத்தக்கதொரு திட்டமாகும்.

இப்படி சோலைவனமாக்கும் முயற்சியில் உங்களால் பணிக்கப்பட்ட கழக அரசு ஈடுபட்டிருக்கிறது. அடுத்த 5 ஆண்டுக்குள் தமிழகம் முதலமைச்சர் அண்ணா அவர்கள் தலைமையில் புது மிடுக்கோடு தலை நிமிர்ந்து நிற்கப்போகிறது என்பதை 'காஞ்சி' மலர் மூலம் தெரிவித்துக் கொண்டு ஒத்துழைக்க வாரீர்! என்று அழைப்பதில் பெருமைப்படுகிறேன்.

கடும் கோடையில் அதிக வியர்வையி ஞல் ஏற்படும், தலைவலி, ஜலதோஷம், புளூ ஜுரம், முதலியவைகளுக்குச் சிறந்தது.




# ஆர். எஸ். பதி மருந்து

★ எந்த பருவ காலத்திலும் ஏற்படும் தலைவலி, ஜலதோஷம், புளூஜுரம் முதலியவைகளுக்குச் சிறந்தது.

★ எல்லா மருந்து ஷாப்புகளிலும் டிரக் ஸ்டோர்ஸ்களிலும் தாராள மாகக் கிடைக்கிறது.

★ புட்டி 1-க்கு 82 காசுகள்தான் (வரி தனி)

## ஆர். எஸ். பதி அன் கோ,

(ஸ்தாபிதம் 1909)

த. பெ. எண். 99 மதுரை-1

சைபால் கம்பெனியின் மூன்று தயாரிப்புகள்!

ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்க வேண்டிய அரிய சாதனங்கள்!

# சைபால்

வெட்டுக் காயம், சொறி சிறங்கு, வேனல் கட்டி, கரப்பான், தீப்பட்ட புண், சேத்துப்புண் முதலிய வியாதி களைக் குணப்படுத்தும் களிம்பு.

*

# எல்லிஸ்பாம்

ஜலதோஷம், நரம்புவலி, தலைவலி, பல்வலி முதலிய வைகளைப் போக்கவல்லது.


*

"ரமணீஸ்"

# பேபி கிரைப்

குழந்தைகளுக்கு உண்டா கும் வாய்வு, வயிற்றுப் பொருமல், மாந்தம், முதலிய வைகளைப் போக்கி ஆரோக் கியத்தைத் தரும்.

# உங்களை நம்பித்தான் நண்பர்களே!







நண்பர்களே,

உங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இன்று சட்டமன்றத்தில் உறுதிமொழி தெரிவித்து பொறுப்பினை ஏற்றுக்கொண்டுள்ளனர். இந்நாட்டு மன்னர்களாகிய நீங்கள் பிறப்பித்த ஆணையினை ஏற்றுக்கொண்டு அவர்கள் சட்டமன்றத்தில் அமர்ந்துள்ளனர், அவர்களின் துணையுடன் நானும் என்னுடன் உள்ள மற்ற அமைச்சர்களும் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளோம். மன்னர்களாகிய உங்களிடம் எமது வணக்கத்தையும், நன்றி அறிதலையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

பல ஆண்டுகளாக தொடர்ந்து என்னிடமும் என் தோழர்களிடமும் பாசம் கலந்து பரிவு காட்டி வருகிறார்கள். இந்த ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில், நாடாளும் பொறுப்பினையும் தந்துள்ளீர்கள். தங்கள் அன்பினையும் ஆதரவினையும் மிகப் பெரிய அளவுக்குப் பெற்றிருக்கும் நான், நெஞ்சு நெகிழ்ந்திடும் நிலையிலேயே, பேசுகிறேன். தங்களின் மேலான நம்பிக்கைக்கு முழுதும் ஏற்றவனாக நடந்துகொள்ள வேண்டும் என்ற பொறுப்புணர்ச்சியைத் துணைகொண்டு கடமையைச் செய்திடுவதில் ஈடுபடுகிறேன். என்னைச் சுற்றிலும் கனிவு நிரம்பிய கண்கள்; என்னைச் சுற்றிலும் கைகொடுக்கும் கரங்கள்; என்னை ஊக்குவிக்க, எந்தப் பக்கமிருந்தும் அன்பு மொழிகள்... துணை நிற்கிறோம்; வழி காட்டு



கிரோம்; முறை அறிவிக்கிரோம்; குறை களைகிரோம்; தயக்கம் வேண்டாம்; பொறுப்பினை நிறைவேற்றிடுக என்று தகுதிமிக்க தமிழகத்தார் கூறிடுவது செவிக்குச் செந்தேனுக இருக்கிறது. பொறுப்பினை ஏற்றுக்கொண் டேன், ஒரு புனிதக் கடமையில் ஈடுபடுகிரோம் என்ற உணர்ச்சியுடன் பொறுப்பினை ஏற்றுக்கொண்டிருக் கிறேன்.

நான் பொறுப்பேற்றுக்கோண்டிருப்பது தமிழ் நாட் டில்—வழிவழிவந்த வல்லவர்கள், வித்தகர்கள் நிரம்பிய தமிழ்நாட்டில். காவிரி தென்பெண்ணை பாலாறு வைகை போன்ற ஆறுகளும் அருவிகளும் பண்பாடி வளமளித் திடும் தமிழ்நாட்டில், ஆயிரம் தொழில்களில் ஈடுபட்டு, நாட்டுக்குச் செல்வத்தை ஈட்டித்தரும் பாட்டாளிகள் நிரம்பிய தமிழ்நாட்டில். பாட்டு மொழியாம் தமிழ்மொழி யுடன் இழைந்துள்ள பண்பாடு சிறந்திடும் தமிழ் நாட் டில், பாருக்குள்ளே நல்ல நாடு என்று பாவலர் கொண் டாடிடும் தமிழ் நாட்டில்—அதனை எண்ண எண்ண இனிக்கிறது...ஆனுல்...ஆமாம் அந்தக்கவலை தந்திடும் சொல்லைத்தான் செய்கிறது. ஆனுல் எத்தனை எத்தனை சிக்கலுள்ள பிரச்சினைகள் நெளிந்துகொண்டு தமிழ்நாடு என்பதனை எண்ணும்போது கவலை ஏற்படுகிறது. இந்தப் பிரச்சினைகளைச் சந்திக்கவும். சிக்கல்களைத் தீர்க்கவும் போதுமான உறுதியும் திறமையும் துணையும் தோழமை யும் தொடர்ந்து கிடைத்திடவேண்டுமே என்பதனை எண்ணும்போது நீங்கள் உடன் இருக்கிறீர்கள் என்ற நினைவுதான் கவலையை ஓட்டுகிறது, கடமையைச் செய் வோம் என்ற உறுதியைத் தருகிறது.

உங்களுக்காக நான் என்பது மட்டுமல்ல; நண்பர் களே...உண்மையைச் சொல்லுவதானுல், உங்களால் நான்—அதனை உணருகிறேன்—மறந்திடுபவனும் அல்ல நான்.

ஆனுல் என்னிடம் நீங்கள் ஒப்படைத்துள்ள வேலை யின் கடினத்தையும், ஆண்டு பலவாக குவிந்துகுவிந்து கெட்டிப்பட்டுவிட்டுள்ள சீர்கேடுகளையும். சிக்கல்களை யும் மறந்துவிடாதீர்கள். கடமையை நான் செய்து முடித் திட உங்கள் ஒவ்வொருவருடைய முழு ஒத்துழைப்பும் தேவை என்பதை மறந்துவிடாதீர்கள். ஆட்சி நடத்திட ஆணை பிறப்பித்துவிட்டோம், இனி நாம் இல்லாமலே கூட ஆட்சி செம்மையாக நடந்திடும் என்று இருந்து விடமாட்டீர்கள் என்று நம்புகிறேன். நீங்கள் ஒவ்வொரு வரும் அவரவர் துறையில் இருந்து நற்பணியாற்றினுல் மட்டுமே, என் வேலை நடந்திடும்; நாடு சீர்படும்.

நாட்டு ஆட்சி செம்மையானதாகிட, நானும் எனது நண்பர்களும் அமைச்சகரகத்தில் அமர்ந்து பணியாற்றி னுல் மட்டும் போதாது, அரசு நடந்திட ஆயிரமாயிரம் திறமைமிகு அலுவலாளர்கள் பணியாற்றினுல் மட்டும் போதாது; ஆட்சி உண்மையில் செம்மையானதாக அமைந்திட வேண்டுமென்றுல், வயலில், தொழிற்சாலை யில், அங்காடியில் பணிபுரிந்திடும் உற்பத்தியாளர்கள், உழைப்பாளர்கள் அனைவரும் 'ஆட்சி நடத்திடுவோர் நாமே' என்ற உணர்வுடன் தத்தமது—கடமையினைச் செய்யவேண்டும். கற்றறிவாளர் எம்மை நல்வழி நடந் திடச் செய்யவேண்டும். இதழ் நடாத்துவோர் உடனி ருந்து முறை கூறிடவேண்டும். இவர் யாவரும் சேர்ந்து நடத்திடுவதே அரசு — நாங்கள் உங்களாலே அமர்த் தப்பட்டவர்கள்.

வயல்களிலே கதிர் குலுங்கிடின், சர்க்கார் அலுவல கங்களில் மகிழ்ச்சி துள்ளும்; தொழிற்சாலைகளிலே தோழமை மலர்ந்து, நிதியும் நிம்மதியும் கிடைத்து உற் பத்தி பெருகிடின், நாட்டுநிலை உயர்ந்திடும். அங்காடி யிலுள்ளோர், கொள்வன கொடுப்பன என்பவை நேர் மையில் அடிப்படையில் அமைந்திருத்தல் வேண்டும் என்று இருந்திடின், அகவிலையும் பதுக்கலும் அழிந்து படும். பொதுமக்களின் வாழ்வு சரிபடும். நாட்டின் நிலை உயர்ந்திடப் பணியாற்றிடவே நாம் என்ற உணர்வுடன் மாணவமணிகள் கல்விக் கூடங்களில் பயிற்சி பெற்றி டின் நாடு மேம்பாடடையும். இவை எல்லாவற்றின் கூட்டே ஆட்சி...சில மண்டபங்களிலே மட்டும் செய் யப்படுகிற காரியமல்ல ஆட்சி...நாட்டு ஆட்சி, வீட் டுக்கு வீடு காணப்படும் பண்பைப் பொறுத்திருக்கிறது.

இல்லாமை போதாமை நீக்கப்பட்டு, வலியோர் எளியோரை வாட்டிடும் கொடுமை ஒழிக்கப்பட்டு, எல் லோர்க்கும் ஏற்றம், இன்பம் உறுதி அளிக்கப்பட்டு நாடு பூக்காடாகத் திகழ்ந்திடவேண்டும் என்ற ஆசையால் உந்தப்பட்டு இந்தநிலை பெறுவதற்கான பணியில் ஒரு சிறு பகுதியையேனும் நாம் செய்து முடிக்கவேண்டும் என்ற ஆவலுடன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண் டுள்ளேன். எல்லா முனைகளிலும் பற்ருக்குறை மிரட்டிய படி இருப்பதைக் காண்கிறேன்...பல்வேறு முனைகளில், தவருன நோக்கம், தனக்குத்தான் என்ற எண்ணம் மேலோங்கி இருக்கக் காண்கின்றேன். பொது நலனில் மட்டுமே தனி மனிதர் நலன் காணமுடியும் என்பது ஏட்டுக்கு—நாட்டுக்கு அல்ல என்ற எண்ணம் கொண் டோர் உலவிடக் காண்கிறேன்.

பிளவுகள் ஏற்படுவதற்கான முறைகளையும் விட் டொழிக்க மனமற்று, இருப்பவர்களைக் காண்கிறேன். கூட்டுமுயற்சிக்குப் பல தடைக்கற்கள் போடப்பட்டிருப் பதைக் காண்கிறேன். இவைகளை நீக்கிடின் நாடு எத்த கைய எழில் பெறும் என்பதனை எண்ணுகிறேன்; உம்மை அழைக்கிறேன் நண்பர்களே! நம்பிக்கையுடன் அழைக்கிறேன். இந்த தூய தொண்டாற்ற வாரீர் என்று அழைக்கிறேன். ஒவ்வொருவரிடமும் உள்ள அறிவும் ஆற்றலும், கிடைத்திடும் வசதியும் வாய்ப்பும், பெற்றிடும் நேரமும் நினைப்பும், இதற்காகவே பயன் படுத்தப்பட வேண்டும். உங்களோடு சேர்ந்து இதற் காக உழைத்திட நானும், பொறுப்பேற்றுக்கொண்டுள்ள என் நண்பர்களும் காத்திருக்கிரோம்.

உணவுக்கே உழைக்கிரோம்—அறிவீர்கள்—அறிந்த பின் செய்திட வேண்டியது என்ன? இந்த நிலைமைக் கான காரணம் காண்கின்ரோம், குறை களைகின்ரோம், முறை வகுக்கின்ரோம், அரசாள்வோர் என்ற நிலையில். ஆனுல் வகுத்திடும் முறைகள் வெற்றிபெற உங்களைத் தான் நம்பியிருக்கின்ரோம். நாமாகத் தேடிப் பெற்றுக் கொண்ட அரசு இது, நம்முடைய துணையை நம்பியே இயங்கும் அரசு இது, எனவே இது செம்மையாக நடந் திட நாம்தான் துணையிருக்க வேண்டும் என்று ஒத் துழைத்திட முனைந்து நின்றிட வேண்டுகிறேன்.

உணவு உற்பத்தி பெருகிடவும், உற்பத்தியாவது உண்போற்க்கு முறையாகக் கிடைத்திடவும், கிடைப் பது அடக்கமான விலையில் நின்றிடவும் முறைகள் யாவை, என்பதறிந்திட விற்பன்னர்களிடம் கருத்தறிந்து வருகின்றேன். செயலில் ஈடுபடுமுன்னர், சிந்தித்திடல் தேவை அல்லவா? அதிலே இப்போது கவனம் செலுத்தி வருகின்ரோம். உழைப்பவன் வாழ்வு உயர்ந் திட, வழி யாது என்பதனை ஆராய்ந்து வருகின்ரோம்.

மக்களுடன் மிக நெருங்கிய தோழமை தொடர்பு கொண்டதாக நிர்வாகம் இருந்திட, என்ன செய்ய வேண்டும் என்பதுபற்றி யோசித்து வருகின்றோம்.

ஊழலும் ஊதாரித்தனமும் போக்கப்பட, என்ன நடவடிக்கை மேற்கொள்வது என்பதுபற்றி கலந்துபேசி வருகின்றோம். எங்கள் துறையிலிருந்து என்னென்ன செய்ய இயலுமோ அவற்றைச் செய்திடத் தயங்கிடோம், உடனிருந்து, எமது முயற்சிக்கு வெற்றி கிடைத்திடச் செய்வது உமது கடமை.

புதிய அரசு அமைந்திருக்கிறது இங்கு. புதிய அரசு மட்டுமல்ல, அரசியலிலே புதிய பிரச்சினையை எழுப்பிவிடும் நிலையில் உள்ள அரசு. இங்கும், கேரளத்திலும், வங்கத்திலும், பீகாரிலும், பஞ்சாபிலும் ஒரிசாவிலும் ஆட்சிப் பொறுப்பில் காங்கிரசல்லாத கட்சியினர் உள்ளனர். வேறு சில மாநிலங்களில், காங்கிரஸ் கட்சி அரசு அமைத்திருக்கிறது. மத்திய சர்க்காரில் காங்கிரஸ் கட்சி அரசோச்சுகிறது. இந்த நிலை கடந்த இருபதாண்டுகளாக, நாடு காணாத நிலை.

இந்த நிலை காரணமாக சிக்கல்கள், எரிச்சல்கள், மோதல் ஏற்பட்டுவிடுமோ, ஒற்றுமைக்கு ஊறு நேரிடுமோ, குழப்பநிலை வளர்ந்திடுமோ என்ற அச்சமும் ஐயப்பாடும் கொண்டிடுவோர் உள்ளனர். தமிழகத்தில் அரசோச்சும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கூறிக்கொள்கிறேன், இங்கு அமைந்துள்ள அரசு மேற்கொள்ளும் நடவடிக்கை. அந்த நிலைமை நிச்சயமாக உண்டாக்காது, மாநில அரசுகளுக்கும் மத்திய அரசுக்கும் உள்ள உறவு முறைகள், அந்த முறைகள் செயல்படுத்தப்படும் வகை, என்பனபற்றிய புதிய சிந்தனையைக் கிளறவும், செம்மையானதாக்கப்படவும், இன்று பல இடங்களில் காங்கிரசல்லாத அரசு அமைந்திருப்பதை ஒரு நல்ல தேவையான, பயன்தரத்தக்க வாய்ப்பாகக் கருதவேண்டுமேயொழிய, கைபிசைந்து கொண்டு, கலக்கமடைவது தேவையற்றதாகும்.

என்றென்றும் எல்லா மாநில அரசுகளும், மத்திய அரசும் ஒரே கட்சியின் ஆட்சியில்தான் இருக்கும் என்று அரசியல் நுட்பம் அறிந்த யாரும் கூறமாட்டார்கள். கருதிடமாட்டார்கள், எதிர்பார்த்திடமாட்டார்கள்.

ஆகவே இங்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியும் வேறு இடங்களில், பல கட்சிகள் கொண்ட கூட்டு ஆட்சியும் ஏற்பட்டிருப்பது கண்டு, திகைப்பு கொள்ளாமல், எரிச்சல் அடையாமல், கசப்பு கொள்ளாமல், மத்திய சர்க்காரை நடாத்திடும் காங்கிரஸ் அரசு நடந்துகொள்ளுமானால், எரிச்சலும் மோதலும் எழ வேண்டிய நிலையே வராது. மிகச் சிறந்த, பண்புமிக்க ஆட்சிமுறை நுண்ணறிவு இதற்குத் தேவை, மற்றவர்களின் கருத்தறிவதிலே ஓர் அக்கறை, அவர்களின் முறை முறையீட்டைக் கேட்பதிலே ஒரு கனிவு, அவர்களுக்காக காரியமாற்றுவதிலேயும் துணை நிற்பதிலேயும் ஒரு ஆர்வம், இவை எல்லாவற்றையும்விட ஒருவர் மனதை மற்றவர் புரிந்துகொள்வதிலே தனித்திறமை இன்சொல் நட்பு, பரிவு ஆகியவை தேவை. இந்தியப் பிரதமராக வந்திடும் திருமதி இந்திரா காந்தி அவர்கள் இந்தப் பணிவுடன் நடந்துகொள்வார்கள் என்று நம்பிக்கை கொண்டிருப்பவர்களில் நான் ஒருவன். சிந்நாட்களுக்கு முன்புகூட அவர்கள் இந்தி பேசாத பகுதியினரின் உரிமைக்கான உத்தரவாதத்தை சட்ட வடிவமாக்கித் தந்திட உறுதிகொண்டிருப்பதாகக் கூறி நம்மை மகிழ்வித்தார்கள்.

மாநிலங்களின் தேவைகள் நாளுக்கு நாள் வளருகின்றன. அடிப்படைத் தேவைகளை மட்டுமே கூறுகிறேன், இவைகளை மக்கள் பெறுவதற்கான முறையில் மாநில அரசு செயல்பட இயலாது தடுத்திடும், குறைபாடுகள் நீக்கப்பட்டாக வேண்டும்.

நிதிநிலை, வருவாய்ப் பெருக்கம், உதவி, கடன், என்பவைகளை மட்டுமே நான் குறிப்பிடுவது. செயலாற்றுவதற்குத் தேவைப்படும் அதிகாரம் பற்றியும் குறிப்பிடுகிறேன்.

அரசியல் சட்டத்தில் தரப்பட்டு உள்ள அதிகார வரம்பும் வகையும், மாற்றி அமைக்கப்பட்டால்தான் மாநில அரசு முழு வளர்ச்சி பெற முடியும், மக்களின் வாழ்வைச் செம்மைப்படுத்த முடியும் என்றால், அந்த நோக்கத்துடன் அரசியல் சட்டத்தைத் திருத்தத் தயக்கம் காட்டக்கூடாது,

அணைத்தல், பிணைத்தல், கட்டுவிடு கிடத்தல், இவை வெவ்வேறு. மாநில—மத்திய சர்க்கார் உறவு எம்முறையில் இருந்தால், பொது நன்மையைக் கெடுக்காத வகையில் மாநிலத்தின் மாண்பும் வளமும் ஏற்றம் பெற முடியும் என்பது அக்கறையுடன் கவனித்தாக வேண்டிய பிரச்சினையாகும்.

எனது நண்பரும் கேரளத்து முதலமைச்சருமான நம்பூதிரிபாத் அவர்கள் இதே கருத்தைக் கொண்டவர். அவருடைய சீரிய முயற்சி, இந்தப் பிரச்சினைக்குப் பெரிதும் வலிவளிக்கும் என்று நம்புகிறேன். வங்கத்து

## நான்கு வருடமே படித்த நாவலாசிரியர்

இறவாத புகழுடைய நூல்கள் பல எழுதியுள்ள சார்லஸ் டிக்கன்ஸ் நான்காவது வகுப்பு வரையிலுமே படித்தவர். கடனில் மூழ்கித் தந்தை சிறை சென்றுவிட்டதால் வயிற்றுப்பாட்டுக்கே திண்டாட்டமேற்பட்டது. படிப்பை நிறுத்திவிட்டுப் பத்து வயதிலே பிழைப்புக்காக மருந்துக் கடை ஒன்றில் வேலைக்கு அமர்ந்தார். அங்கே மருந்து புட்டிகளின்மீது 'லேபிள்' ஒட்டும் வேலை கிடங்கிலேயே வாசம்.

எழுத வேண்டுமென்ற ஆர்வம் அந்த இளம் வயதிலேயே அவருக்கேற்பட்டுவிட்டது. வேலை முடிந்ததும் இரவில் வெகுநேரம் கண் விழித்து ஏதாவது எழுதுவார். இப்படி எத்தனையோ கதைகள் எழுதி அவர் பத்திரிகைக்களுக்கு அனுப்பினார். எல்லாம் பத்திரிகாசிரியர்களின் குப்பைக் கூடையிலேயே தூங்கிற்று.

கடைசியாக ஒரு பத்திரிகையில் அவருடைய கதையொன்று பிரசுரமாயிற்று. அதற்கு சன்மானமாக ஒரு காசும் கிடைக்காதபோதும்—ஆசிரியர் கதையைப் பாராட்டி, ஒரு சிறு குறிப்பு எழுதி இருந்தார். மனந்தளர்ந்து தமது முயற்சியைக் கைவிட இருந்த அவரது உற்சாகம் தடைப்படாமல் மேலும் ஊக்கமளித்தது இச்சிறு பாராட்டுரையே ஆகும். இந்தப் பாராட்டு அவருக்குக் கிடைக்காமற்போயிருந்தால் எழுதுவதைப்பற்றி நினைப்பதையே அவர் விட்டிருப்பார். இலக்கிய உலகிற்குப் பெரிய நஷ்டமேற்பட்டிருக்கும்.

ஆ. கி. மூர்த்தி

முதல்வர், அஜாய்குமார் முகர்ஜி அவர்கள், காங்கிரசல்லாதார் நடத்திடும் அரசுகளில் கூட்டு மாநாடு நடத்திட விரும்புகிருர். அத்தகைய மாநாடும், இந்தப் பிரச்சினையை ஆராய உதவும் என்பதால், அந்த முயற்சியை வரவேற்கிறேன்,

அதுபோலவே, தென் மாநிலங்களான தமிழகம், ஆந்திரம், கேரளம், கர்நாடகம் ஆகியவை தோழமைத் தொடர்பை வலுவாக்கிக்கொள்வது தேவை எத்தனையோ துறைகளில், இந்த மாநிலங்கள் தமக்குள்ள இயற்கை வளங்களை இணைப்பதன் மூலம், புதிய பொலிவும் பணிவும் பெற்றிட முடியும், அதற்கான முயற்சிக்கு ஆக்கம் தரவேண்டுமென, அந்த அரசுத் தலைவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

உள்ளத்திலே தோன்றிடும் யோசனைகள் பலப் பல. சில மட்டுமேஇன்று கூறுகிறேன். ஆனல் எல்லா எண்ணங்களும் ஒரு அடிப்படையான இலட்சியத்தைச் சுற்றியே வட்டமிடுகின்றன, மக்களுக்கு நல் வாழ்வு தரவேண்டும், என்ற இலட்சியம்.

இலட்சியம் தூய்மையானது; அந்த இலட்சியம் வெற்றிபெற்ருல் மட்டுமே அறநெறி அரசு அமைந்ததாக பொருள்படும்; அந்த இலட்சியத்துக்காகப் பணியாற்றப் புறப்படுகிறேன். உமது நல்லெண்ணத்தைத் துணைகொண்டு. இலட்சியம் மிகப் பெரியது, நான் சாமான்யன்—ஆனல் உங்கள் தோழன்—ஆகவே என்னுடைய திறமையை நம்பி அல்ல — உங்கள் எல்லோருடைய திறமையையும் நம்பி இந்தப் பணியில் ஈடுபடுகிறேன்.

முன்பு தரிசாகக் கிடந்த இடத்தை விளை நிலமாக்கிட வியர்வை சிந்துவோர், குறை அளவு இயங்கிவந்த யந்திரத் தொழிற்சாலையை முழு அளவு இயங்கிடச் செய்யப் பாடுபடுவோர், மக்களின் வசதிப் பெருக்கத்துக்காக உற்பத்தி விநியோகம் ஆகியவற்றில் ஈடுபட்டு அதனை நேர்மையான முறையில் நடத்திடுவோர் இவர்களெல்லாம், என் நண்பர்கள், என் வணக்கத்திற்கு உரியவர்கள்.

உற்பத்தித்துறைக்கு முட்டுக்கட்டையிடுவோர், உற்பத்திக்காகப் பாடுபடுவோரின் வயிற்றிலடிப்போர்—இவர்கள் எனக்கு மட்டுமல்ல — சமூகத்துக்கே பகைவர்கள்,

விலையை ஏற்றிடுவோர் — விளைந்ததைப் பதுக்கிக் கொள்வோர்—நாட்டை நாசமாக்கும் நடமாடும் நோய்கள்.

ஊழல் ஊதாரித்தனம் இலஞ்ச இலாவணம் ஆகிய கேடுகளைச் செய்வோர் — நாட்டின் அவமானச் சின்னங்கள்.

நண்பர்களே! நாட்டின் பகைவர்கள், சமூக விரோதிகள் ஆகியோரிடமிருந்து நாட்டைக் காத்திட வேண்டிய பொறுப்பும், கடமையும், நமக்கு இருக்கிறது. கேடு களைந்திட, நாடு வாழ்ந்திட, சுயநலம் மடிந்திட, பொதுநலம் மலர்ந்திட, தொண்டாற்றுவோம் வாரீர், வாரீர் என்று அழைக்கிறேன். வணக்கம். நன்றி.

தென்னகத்திலே
தரத்திற்கும், உறுதிக்கும்
தங்கப் பதக்கம் பெற்ற

ஸ்டீல் பர்னிசர் தயாரிப்பாளர்கள்:

**கார்த்திகேயா என்ஜினியரிங் பவுண்டரி,**

**திண்டுக்கல் ரோடு, பழனி.**

போன்: 302

**எங்களது தயாரிப்புகள்:**

ஸ்டீல், பீரோ, டேபிள், கட்டில் சோபா-கம்-பெட், சேர்கள் முதலியன, இன்று மலிவான விலையில் அதிக அளவில் விற்பனையாகிக்கொண்டிருக்கின்றன.

உரிமையாளர்:

**S. நாராயணசாமி.**

தரத்தில் சிறந்தது!

சுத்தத்திற்கு உத்திரவாதம் உள்ளது!

குணம் மணம் நிறைந்தது!

# V. V. S. நல்லெண்ணெ

வாங்கி உபயோகித்து ஆனந்தமடையுங்கள்.

## V. V. சண்முக நாடார் & சன்ஸ்,

V. V. S. நல்லெண்ணெ, உளுந்து & துவரம்பருப்பு

தயாரிப்பாளர்கள்.

விருதுநகர்.

TEL: VEEVEEYES PHONE: 88

களிறு கட்டக் கயிறு வேண்டுவோர்க்கு அல்ல...

கைத்தறியின் ஓட்டத்திற்குத் தக்க

வலிமை வேண்டுவோர்க்கு மட்டுமே!

அனைவரும் விரும்பி வரவேற்கும் உயர்தர நூல்

மேல்நூல்

(20, 30, 40, 2 x 20, 2 x 30 தரங்களில்)

தயாரிப்போர்:

மதுரை மாவட்டக்

## கூட்டுறவு நூற்பு ஆலை லிமிடெட்,

மேலூர் (மதுரை மாவட்டம்)

தொலைபேசி எண்: 340

பெரிய காஞ்சிபுரம்

# கூட்டுறவு டவுன் பாங்கி லிமிடெட்

## எண். 3

## காஞ்சிபுரம்.

(1904-ம் ஆண்டில் துவக்கப்பட்டது)

தலைவர்:

திரு. A. B. கண்ணபிரான் முதலியார்.

| | | |
|---|---|---|
| செலுத்தப்பட்ட மூலதனம் | ரூ. | 4 60,000 |
| ரிசர்வு நிதியும், இதர நிதிகளும் | ரூ. | 2,35 000 |
| டிபாசிட்டுகள் | ரூ. | 30,00,000 |
| கொடுத்துள்ள கடன்கள் | ரூ. | 30,00,000 |

டிபாசிட்டுகளின் வட்டி விகிதங்கள்:

| பிக்சட் டிபாசிட்டுகள் | ரூ. 5000க்கு உட்பட்ட தொகை. | ரூ. 5000க்கும் அதற்கு மேலும் |
|---|---|---|
| 3 மாதம் | $5\frac{1}{2}$ % | $5\frac{3}{4}$ % |
| 6 மாதம் | $6\frac{1}{2}$ % | $6\frac{3}{4}$ % |
| 1 ஆண்டு | 7 % | $7\frac{1}{4}$ % |
| 2 ஆண்டு | $7\frac{1}{2}$ % | $7\frac{3}{4}$ % |
| 3 ஆண்டு | $7\frac{3}{4}$ % | 8 % |
| 4 ஆண்டு | 8 % | 8 % |

சேவிங்ஸ் டிபாசிட்டு $4\frac{1}{2}$ % & கரண்டு டிபாசிட்டு $\frac{1}{2}$ %

மாதாந்திர டிபாசிட்டுகள் 7 % முதல் 9 % வரை

தந்தி: ''ராம்சென்பேங்க்'' தொலைபேசி எண்: 2444

இராமநாதபுரம் மாவட்ட

# கூட்டுறவு மத்திய பாங்கு லிமிடெட்,

165, வக்கீல் புதுத் தெரு,

## மதுரை-1

கிளைகள்:

காரைக்குடி, ஸ்ரீவில்லிபுத்தூர், பரமக்குடி. அருப்புக்கோட்டை, சிவகங்கை, இராமேஸ்வரம், திருவாடானை, இராஜபாளையம்

தலைவர்:

திரு. ஏ. கே. திருவேங்கடப்ப நாயக்கர்.

ரூ. லட்சங்களில்

| | | |
|---|---|---|
| செலுத்தப்பட்ட மூலதனம் | ரூ. | 56·28 |
| சேமநிதியும், இதர ரிசர்வ் நிதிகளும் | ரூ. | 37·76 |
| அலுவல் நிதிகள் | ரூ. | 342·23 |
| டிபாசிட்டுகள் | ரூ. | 147·54 |

சேவிங்ஸ் டிபாசிட் வட்டி விகிதம் $4\frac{1}{2}$ %

நிரந்தர இட்டுவைப்பு வட்டி விகிதம் $5\frac{1}{2}$ % முதல் $7\frac{1}{2}$ % வரை

36 மாதங்களும், அதற்கு மேலும் பெற்றுக்கொள்ளப்படும் நிரந்தர இட்டு வைப்புக்களை (FIXED DEPOSIT) அசல் வட்டியுடன் திருப்பித் தர தமிழ்நாடு அரசாங்கம் உத்திரவாதம் அளித்துள்ளது.

மற்ற விபரங்களுக்கு தயை செய்து விண்ணப்பிக்கவும்.

(ஒப்பம்) எஸ். சிவராஜன், பி.ஏ., எச்.டி.சி.
காரியதரிசி.

# காஞ்சியும்-வாஞ்சையும்



உள்ளாட்சித்துறைஅமைச்சர் M.முத்துசாமி

'காஞ்சி'—இந்தச் சொல்லை உள்ளுந் தோறும் உள்ளும் தோறும் உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளுகின்றது! எனக்குமட்டுமல்ல! இந்த நாட்டுமக்கள் அனைவருக்குமே! நாட்டுமக்களுக்கு மட்டுமல்ல—இந்தியத் துணைக்கண்டத்தில் உள்ளோர் எல்லோர்க்குமே! உப கண்டத்து மக்களுக்கு மட்டுமேயன்றி உலகத்தார்க்கே! இது உண்மை—வெறும் புகழ்ச்சியல்ல! காரணம்?—

புண்ணிய தலங்களைக் கொண்ட மண் என்ற காரணத்தாலா? புவியாண்ட பல்லவ மன்னர் காலத்துச் சிறந்து விளங்கிய பல்கலைக் கழகத்தாலா? புன்னகையும், பொன்னகையும் பூண்டிலங்கும் பூவையர் தம் மனங்கவரும் வண்ண வண்ணப் பட்டாடைகளை வழங்கும் பதி என்பதாலா? அல்ல! அல்ல. இவைகளெல்லாம் ஏதாவது ஒரு சாராரை மட்டுமே மகிழ்ச்சியிலாழ்த்தவல்லன! எல்லாரையும், எல்லாக் காலங்களிலும் இன்பத்திலாழ்த்தவல்ல ஏதோ ஒரு 'மாயசக்தி' அந்த மண்ணில் நிச்சயமாக இருக்கிறது! அது எது? அத்தகைய வாஞ்சையை வளர்க்கும் வரலாறு என்ன?

கல்வியில் சிறந்து, கேள்வியில் தெளிந்து, சிற்றினம் சேராமல், குற்றம் கடிந்து, சுற்றம் தழுவி, சோர்வு நீக்கி, ஊக்கம் கொண்டு, உறுதி பூண்டு, காலமும், இடமும் வலியுமறிந்து, தெரிந்து, தெளிந்து கண்ணோட்டம் கொண்டு, காரியமாற்றும் திறமது பெற்று, இடுக்கண்வந்தால் எதிர்த்து நின்று, வெருவந்த செய்யாமல், வினைத் திட்பம் மிகப் பூண்டு, அன்பு போற்றி அறவழி ஓம்பி, நல்லோர் நட்பை நாடி, கொள்ளுவன கொண்டு, தள்ளுவன தள்ளி, அடக்கமதனை அணிகலனுக்கி, பெரியாரைப் பிழையாமல், பிறர் மனம் கோணுமல் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, மற்றவர்க்கு வழிகாட்டியாகி, நிற்கும் ''ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோன்! ''குணக் குன்று''! தமிழனை ஈராயிரம் ஆண்டு ஏங்கிக் கிடந்த பின்னர் வாராது வந்த மாமணி—வள்ளுவனின் மறுபிறப்பு! தன்னைப் பெற்றெடுத்த அன்னை—தமிழ்த்தாய் அரசோச்சிய தரணி—தரணி வாழ் தன்னேரில்லாத் தமிழ் மக்கள்—இருந்த புகழை இழந்து நிற்கும் ஏக்கம் நீக்கி ஏற்றம் காக்கப் பாடுபடும் ஏந்தல்! தமிழறிந்த நாள் முதலாய் தன்வகையில் இரவும் பகலும் ஒன்றெனக் கருதி, இல்லாததை, பொல்லாததை, தீதானதை, வேண்டாததை, மற்றேனைய ஆகாததையெல்லாம் கட்டிக் காத்துவரும் புரையோடிப் போனசமுதாயத்தை மாற்றியமைத்து, இன்பம் தத்தித் தவழும் புதிய சமுதாயத்தை உருவாக்கப் போராடிவரும் புனிதன்! ஆண்டான்—அடிமை, ஏழை-பணக்காரன், முதலாளி—தொழிலாளி, வலியோர் — மெலியோர், ஓடப்பர் — உயரப்பர், மகான் — மாபாவி என்ற பேதா பேதங்களையும், ஏற்றத்தாழ்வுகளையும் நாட்டைவிட்டு, ஓட்ட ஓயாது உழைக்கும் உத்தமன்! ''இழந்த பழம் புகழ் மீளவேண்டும்—நாட்டில் எல்லாரும் தமிழர்களாய் வாழவேண்டும் — வழிந்தொழுகும் சுவைத்தமிழே பெருக வேண்டும்—மாற்றலர்கள் ஏமாற்றம் தொலையவேண்டும்—விழுந்த தமிழ்நாடு தலை தூக்க எந்தன் உயிர்தனையே வேண்டினும் தருவேன்'' என்ற உணர்ச்சி மிகு உரையாடி—உருவான பணியாற்றி நல்லோர் உள்ளமெல்லாம் தம்பால் ஈர்த்த நாயகன்! மறத் தமிழைக் காக்க மாங்குயில் கூவிடும் பூஞ்சோலையாக சிறைச்சாலையை ஏற்றுக் கொண்ட செம்மல்! ''வாழு—வாழவிடு'' என்ற தத்துவத்தையும். ஏழை சிரிக்க வேண்டும்'' என்ற இலட்சியத்தையும் வையத்துக்கு வழங்கி நிற்கும் வள்ளல்! நாலு கோடி மக்களின் வாஞ்சையால் நற்றமிழ் நாட்டின் நாயகனுகி நிற்கும் மூத்தக் குடிமகன்! நம் இயக்கத் தலைவன்—அறிஞர் பெருந்தகை—'அண்ணு' பிறந்த மண்ணல்லவா அது! இப்பொழுது புரிகிறதா ஏன் இந்த வாஞ்சை என்று?

அண்ணு இந்த மண்ணின் முதலமைச்சரானபின்பு ஏற்பட்ட வாஞ்சையல்ல. முதலமைச்சர் பதவி ஒட்டிக்கொண்டிருக்கின்ற காரணத்தினுலேயே சிலர்மீது ஏற்பட்ட வாஞ்சை இன்று அப்பதவி அவர்கள் பெயரினின்று மக்களால் பிரித்தெடுக்கப்பட்ட பின்பு மக்களின் வாஞ்சையினின்றும் அவர்கள் பிரித்தெடுக்கப்பட்ட பரிதாபமான நிலைமையை இன்றைக்கு அரசியல் வரலாறு நமக்குப் புலப்படுத்துகின்றது. ஆனல் அறிஞர்அண்ணு அவர்களைத் தேடி முதலமைச்சர் பதவி சென்றடைந்தமையால் மக்கள் வாஞ்சை அந்தப் பதவிக்கும் ஏற்பட்டிருப்பதனை இன்று கண்கூடாகப் பார்க்கிறேம். ஆகவே முதலமைச்சர் பதவி தூய்மைப்படுத்தப்பட்டிருக்கிறது. அண்ணு அவர்கள்மீது இத்தகைய ஒருமித்த வாஞ்சை யாருக்கும் கிடைக்க முடியாத வாஞ்சை ஏற்படக் காரணம் என்ன? அவர் அறிஞர் என்பதாலா? ஆற்றல் மிகு எழுத்து வேந்தர் என்பதாலா? விசை யொடிந்த தேகத்தை வன்மை பெறச் செய்யும் எழுச்சி மிக்க பேச்சாளர் என்பதாலா? கண்ணியமிக்க அரசியல் கட்சியின் கண்போன்ற தலைவர் என்பதாலா? வெட்டி வா என்ருல் கட்டிவரக் கூடிய தம்பிமார் படையைப் பெற்றிருப்பதாலா? எழுச்சி மிக்க இளைஞர் படையும் எழுத்தறிவற்ற பாமரர் கூட்டத்தையும் ஏற்று நடத்திச் செல்லும் தானைத் தலைவன் என்பதாலா? பிறந்த குழந்தை முதல் முதிர்ந்த பெரியோர் வரை வாஞ்சையுடன் 'அண்ணு, அண்ணு'' என்று அழைப்பதாலா? வெள்ளித் திரை வியந்து போற்றும் தெள்ளு தமிழ்த் திரைக் கதை ஆசிரியர் என்பதாலா? நடிப்பிற்கோர் இலக்கணம் வகுக்கும் சிறந்த நடிகர் என்பதாலா? பத்திரிகை உலகிலே தமது முத்திரையைப் பதித்துவிட்ட சிறந்த பத்திரிகை யாசிரியர் என்பதாலா? 'எட்மண்ட பர்க்'கிற்குப் பிறகு ஏற்றமிகு பாராளுமன்ற மரபினைப் போற்றிக் காக்கும் புரட்சிமிகு பாராளுமன்ற வித்தகர் என்பதாலா? இத்தனைக்கும் மேலாக எதிர்த்துவரும் இந்தியினை தடுத்து நிறுத்த வல்லத் தமிழ்க்காவலர் என்பதாலா? இல்லை, இல்லை. இவையத்தனையும் சேர்ந்த மொத்த உருவமாக, தமிழகத்தின் தத்துவமாக அவர்கள் விளங்குவதாலேயே தான் நாட்டின் பலதரப்பட்டவர்களின் வாஞ்சையைக் கவர்ந்துவிட்டவராக இன்று திகழ்கிருர்கள். இருண்டு

கிடந்த தமிழர் சமுதாயத்தின் நம்பிக்கை ஒளி பரப்பும் உதயசூரியனாக, திசை தெரியாது தேம்பிக் கிடந்த தமிழர் சமுதாயத்தின் திசை காட்டியாக, கடல் கடந்த தமிழர்களின் கலங்கரை விளக்கமாக, அண்ணா விளங்குவதாலேயே அவர் பிறந்த புனித மண்ணாகிய காஞ்சியின்மீது அனைவருடைய வாஞ்சையையும் காணிக்கையாக்கப் பட்டிருக்கிறது.

இந்த வாஞ்சை என்றும் நின்று நிலைக்கவேண்டும்; அறிவுப் பெட்டகம் அண்ணா அவர்களின் காலத்துக்குப் பின்னும், காருள்ளளவும், கடல் நீருள்ளளவும் இந்தப் பாருள்ளளவும் அந்த மண்ணின்மீது அனைவரும் வாஞ்சை கொள்ளத் தக்க வழிவகைகளைத் தேடவேண்டியது நம் அனைவரின் கடமையாகும்; அவரது பெயரால் நல்லதோர் அறிவாலயம் உருவாக்கப்படல் வேண்டும்; அந்த அறிவாலயத்தில் அகிலத்துக் கலைகள் பலவும் கற்றுத் தரப்படல் வேண்டும்; மலரின் தேனைப் பருக வரும் வண்டினங்கள் போல நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் நல்ல மாணவர் பல்லோர் அங்கு வந்து பயின்று பயனடைய வேண்டும்; பாவலரும் நாவலரும் போற்றிப் புகழும் பல்கலைக் கழகமாக அது விளங்கவேண்டும்; அண்ணனின் மணி விழாக் கொண்டாடும் அந்த நன்னாளில் இந்த அறப்பணி ஆரம்பமாக வேண்டும்; அருமை நண்பர்களின் முயற்சி வெற்றிபெற வேண்டும்; 'காஞ்சி' ஆண்டு மலர் விரிந்து மணம் பரப்பும் இந்நாளில் இந்த ஏற்றமிகு என் கருத்து மணமும் தமிழர்களின் நெஞ்சமெலாம் விரிந்து பரவவேண்டும் என்பதே என் வாஞ்சை.




மதுரை
மாவட்டத்தில்
மூன்று
தலைமுறையாக
நடைபெற்று
வருகிறது.

# ஒரிஜினல் நாகப்பட்டணம் நெய் மிட்டாய்க் கடை

20, மேலச்சித்திரை வீதி, மதுரை-1.

வைரவிழா: 1901—1961

போன்: 4074 தந்தி: அம்பிஸ்வீட்ஸ்

புதிய கிளை: 75, அம்மன் சன்னதி, மதுரை.

உரிமையாளர்; | வி. வெங்கட்ராமய்யர் சன்
| வி. அனந்தநாராயணன்.

கிளை: ஞாயிறு விடுமுறை.



ஸ்தாபிதம்: 1939. தந்தி: COOPTSTORE

தொலைபேசி: | அலுவலகம் 67
| ஆயில் & ரைஸ்மில் 357

# A. 1382 விருதுநகர் கூட்டுறவுமொத்தவிற்பனை பண்டகசாலை லிட்.,

12/87, கடைத் தெரு, விருதுநகர்.

பண்டகசாலையின் நிதி நிலைமை
30—6—67

| | | |
|---|---|---|
| பங்குத்துகை அரசாங்கம் | ரூ. | 1,00,000-00 |
| அங்கத்தினர்கள் | ரூ. | 47,354-00 |
| க்ஷேம நிதி | ரூ. | 1,44,060-00 |
| கூட்டுறவு ஸ்தாபனங்களில் பங்குத் துகையாக முதலீடு செய்தது | ரூ. | 66,551-00 |
| அரசாங்க கடன் பத்திரங்களில் முதலீடு செய்தது | ரூ. | 41,500-00 |
| இதர வகைகளில் முதலீடு செய்தது | ரூ. | 15,596-00 |
| கட்டிடம் மிஷனரியில் முதலீடு செய்தது | ரூ. | 2,22,124-00 |
| அரசாங்கக் கடன் | ரூ. | 2,77,212-00 |
| 1966—1967ம் வருட கொள்முதல் | ரூ. | 54,68,500-00 |
| 1966—1967ம் வருட விற்றுமுதல் | ரூ. | 56,85,963-00 |
| தினசரி சராசரி விற்பனை | ரூ. | 15,600-00 |

1962—63ல் சேலம் கூட்டுறவு மாநாட்டில் முதல்தரமான கூட்டுறவு பண்டகசாலையெனத் தேர்ந்தெடுக்கப்பெற்று அரசாங்கக் கேடயம் வழங்கப்பட்டது.

கூ. மு. அ. சி. வெயில்முத்துசாமி நாடார்,
தலைவர்.

வே. வ. ஷ. நடராஜன்,
உபதலைவர்.

மதுரை மாவட்ட

# மத்திய கூட்டுறவு வங்கி லிமிடெட்,

## மதுரை-I

தொலைபேசி எண்: 4023, 4024, 2134. தபால்பெட்டி எண்: 14

தந்தி: "சென்கோபாங்க்"

**தலைவர்:** திரு. வ. அழகப்பன், பி.ஏ., பி.எல்.,

கிளைகள்:

வத்தலகுண்டு, கம்பம், திண்டுக்கல், கொடைக்கானல், மேலூர், நிலக்கோட்டை, ஒட்டன்சத்திரம், பழனி, பெரியகுளம், சோழவந்தான், தன்னாகுளம், தேனி, திருமங்கலம், உசிலம்பட்டி.

விசேஷ கால வைப்புகள் (Season Deposits) 1½ சதவிகிதம் முதல் 3 சதவிகித வட்டிக்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

தவணை வைப்புகள் (Fixed Deposits) 3 மாதம் முதல் 84 மாதங்களுக்கு மேலும் 5½ முதல் 7½ சதவிகித வட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

சேமிப்புக் கணக்கு வைப்புக்கள் (S. B.) காசோலை (Cheque) மூலம் நடத்திக்கொள்ளலாம். 12 வயதுக்கு மேற்பட்ட மைனர்கள் அவர்கள் பெயரில் கணக்குகள் வைத்து அவர்களே வரவு செலவு செய்யலாம். வட்டி 4 சதவிகிதம். வாரமொன்றுக்கு ரூ. 5000/ வரை பணம் திரும்பப் பெறலாம்.

6½ சதவிகித வட்டிக்கு ரிக்கரிங் டிபாசிட்டுகளும் 7 சதவிகித கூட்டு வட்டிக்கு பிராவிடெண்ட் நிதி வைப்புகளும் மாதாந்திர தவணையில் பெற்றுக்கொள்ளப்படும்.

விபரத்திற்கு விண்ணப்பிக்கவும்.

S. N. ராஜமாணிக்கம், B.A . B.COM. (HONS) C A,I.I B.,
காரியதரிசி.

சின்ன காஞ்சிபுரம்

# கோவாபரேடிவ் அர்பன் பாங்கி

## லிமிடெட் எண். 381

சின்ன காஞ்சிபுரம்.

செங்கற்பட்டு மாவட்டம்.

ஸ்தாபிதம்: 1910 தொலைபேசி எண்: 223

புள்ளி விபரம் 25-9-1967ல் உள்ளபடி

| | | |
|---|---|---|
| அதிகாரம் பெற்ற பங்கு மூலதனம் | ரூ. | 2,50,000-00 |
| செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் | ரூ. | 1,89,316-00 |
| டிபாசிட்டுகள் | ரூ. | 9,96 893-48 |
| கடன்கள் | ரூ. | 11 03,376-00 |
| நடைமுறை மூலதனம் | ரூ. | 12,66 996-32 |
| காப்பு நிதி | ரூ. | 80,786-84 |

டிபாசிட்டு வட்டி விகிதங்கள் வருமாறு

| நிரந்தர டிபாசிட் காலம் | ரூபாய் 5000க்கு உட்பட்ட துகைக்கு வட்டி விகிதம் |
|---|---|
| 6 மாதம் | $6\frac{1}{2}$ % |
| 1 வருடம் | 7 % |
| 2 வருடம் | $7\frac{1}{2}$ % |
| 3 வருடம் | $7\frac{3}{4}$ % |

ரூபாய்க்கு 5000-க்கும் அதற்கு மேற்கொண்டும் எட்டு சத வீதம் வட்டி வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| ரெகரிங் டிபாசிட்டு | 5% |
| சேவிங்ஸ் டிபாசிட்டு | $4\frac{1}{2}$ % |
| கரெண்டு டிபாசிட்டு | $\frac{1}{2}$ % |

தயவு செய்து மேற்கொண்டு விபரங்களுக்கு செயலாளரிடம் தொடர்பு கொள்ளவும்.

K. M சுப்பிரமணியன், B COM. செயலாளர்.

N. K. கணபதி முதலியார் தலைவர்

தொலைபேசி எண்: 264

காஞ்சிபுரம்

# கூட்டுறவு மொத்தவிற்பனை பண்டகசாலை

லிமிடெட் எண். ஜி. 2115 காஞ்சிபுரம்.

(மத்திய அரசினரின் உபயோகிப்போர் பண்டகசாலை திட்டத்தின் கீழ் துவக்கப்பட்டது.)

கிளைகள்:

காஞ்சீபுரம்—14
கம்மவார்பாளையம் 1
வாலாஜாபாத்—1

எங்கள் பண்டகசாலையின் எல்லா கிளைகளிலும் குடும்பத்திற்குத் தேவையான எல்லாவித பலசரக்குப் பொருள்களும், அத்தியாவசிய பண்டங்களும், காப்பிக் கொட்டை வகைகளும், ''கூட்டுறவு காப்பித்தூள்'' பொட்டலங்களும், எவர் சில்வர் பாத்திரங்களும் எல்லாவித மில் ஜவுளி கைத்தறி ரகங்களும் நல்ல தரமான தாகவும் மலிவான விலையிலும் கிடைக்கும்.

உங்கள் தேவைகளுக்கு
எங்கள் கிளைகளுக்கு
விஜயம் செய்யுங்கள்.

C. R. உமாபதி,
தலைவர்.

# கந்தலீலா

## எஸ்.எஸ்.தென்னரசு

“கந்தா!”

‘வந்திட்டேன்யா!’:

“தபால் வாங்கி வந்தாயா?”

“ஓ!”

“பால்?”

“அப்பவே எல்லாம் முடிஞ்சு போச்சு!—வக்கீல் வரதராசன் அவரது வேலைக்காரப் பையனைக் குறுக்கு விசாரணை போட்டுக்கொண்டிருக்கும்போதே வீட்டுக்குள்ளே இருந்து ஒரு குரல் வந்தது.

“கந்தா!” ருக்குவின் குரல் வந்தது.

“வந்திட்டேம்மா!”

“ஏண்டா உனக்கு எப்பப் பாத்தாலும் முகப்பிலே என்ன வேலை?”

“அய்யா கச்சேரியிலே இருந்து வந்திட்டாரு; அவர் வேலையைப் பாக்க வேண்டாமா? — கந்தன் சொன்னான்.

“அவருக்குத்தான் நானிருக்கேனே! நீ வேறையா? போடா. போய் காய்கறி வாங்கி வா!”

ருக்கு, கந்தனை கடைத்தெருவுக்கு அனுப்பி வைத்தாள்.

* * *

கந்தன் அறியாப் பிள்ளையாக இருந்தாலும் சுறுசுறுப்பானவன். பம்பரம்போல் சுழன்று சுழன்று வேலை செய்பவன். தாயில்லாப் பிள்ளை. விபரம் தெரிந்த நாள் முதலாக வக்கீல் வரதராசன் இல்லத்தில்தான் இருந்து வந்தான். கந்தனுக்கு வயதுக்கு மேற்பட்ட மூளை; அவனுக்கு குறுக்கு வழிச் சிந்தனைகள் அதிகம்.

வக்கீல் வீட்டுக்கு அடுத்த வீட்டில் ஒரு மிராசுதார் இருந்தார். அவருக்கு ஒரு மகள்—லீலாவதி அவள் பெயர்.

அன்று கடைத்தெருவுக்குப் போய்வந்த கந்தனை அவள் வழியில் கண்டாள்.

“கந்தா!”

“லீலா அக்கா எனக்கு ஒரு நாளைக்குக்கூட காசு தரமாட்டேங்கிறீங்களே” — கந்தன் வாஞ்சையுடன் கேட்டான்.

“உனக்கில்லாத காசா? சரி; உன்னிடத்திலே ஒரு தகவல் சொல்ல நினைத்தேன். உன்னைச் சந்திக்க முடியாதென்று நினைத்து உனக்கு ஒரு கடிதம்கூட எழுதி வைத்தேன். இந்தக் கடிதத்தைப் படித்துப் பார். நான் போஸ்டாபீசுக்குப் போய்வந்து பார்க்கிறேன்” என்று சொல்லி கடிதத்தைக் கொடுத்துவிட்டு சைக்கிளில் கிளம்பினாள் லீலா.

கந்தனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. கடிதத்தைப் பிரித்தான்; அதில்,

அன்புள்ள கந்தனுக்கு,

நான் ஒரு முக்கியமான காரியத்திற்காக உனது எசமான் வக்கீலைச் சந்திக்க விரும்புகிறேன். அதற்கு நீ ஏற்பாடு செய்து தரவேண்டும்.

அன்புள்ள
லீலாவதி.

—இந்தக்கடிதம் கந்தனுக்குக்கூடுதலான அதிர்ச்சியைத் தந்தது. லீலாவதி தபாலாபீசுக்கு போய்த் திரும்பும்வரை கந்தன், வீட்டு வாசலிலேயே காத்துக்கொண்டிருந்தான். லீலா வந்தாள்.

“என்ன அக்கா இது கடிதம்?” அய்யா கோவிச்சுக்கிற மாட்டாங்களா?” என்றான்.

“ஒன்றுமில்லை வா இப்படி!” என்று கந்தனை அழைத்துக்கொண்டே போனாள் லீலா. இருவரும் சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்தார்கள்.

* * *

“கந்தா!”

“.........”

கந்தா! இவன் போனால் போன இடம்தான்! வந்தால் வந்த இடம்தான்,” என்று முணங்கிக்கொண்டே முகப்புக்கு வந்த ருக்மணி அடுத்த வீட்டு முற்றத்தில் கந்தனும் லீலாவும் பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்தாள். அவள் முகம் சிவந்தது. “இப்பத்தானே புரிகிறது. பொடியனுக்கு அடிக்கடி அய்யா கிட்டே என்ன வேலை என்று” ருக்கு கருவிக்கொண்டே உள்ளே போனாள்.

“ருக்கு!” வக்கீல் அழைத்தார்.

“ருக்கு அடுத்த வீட்டிலே இருக்கா!” என்று வெடுக்கென்று பதில் சொல்லிவிட்டாள், பெண்கள்

குழந்தைகள் மாதிரி. குழந்தை கண்டதையெல்லாம் கேட்கும்; பெண்கள் கண்டதையெல்லாம் நம்புவார்கள்.

வக்கீலுக்கு ஒன்றும் புரியவில்லை. அருகில் வந்து,

"என்ன வேதாளம் திடீரென்று முருங்கை மரத்தில் ஏறிக்கொண்டது" என்று கேட்டார், அதற்குள் கந்தன் வந்துவிட்டான்.

* * *

தங்கவேல்—அந்த ஊரில் ஒரு தலைவெடித்த இளைஞன். ஊர் வம்பு, தகராறு எல்லாவற்றிற்கும் அவன் தான் தலைவன். ஒரே வரியில் சொன்னால் அவன் ஒரு ரௌடி!

தங்கவேல் சீட்டை அடித்தவண்ணம் தெருவில் வந்தான். தபால்காரன் அவனிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்தான். அதில்,

அன்புமிக்க தங்கத்திற்கு,

நான் தங்களைச் சந்திக்க மிகுந்த ஆவலுள்ளவளாக இருக்கிறேன். உங்களுடைய வீரம் நிறைந்த நடவடிக்கைகள் என்னைப் பெரிதும் கவர்ந்துவிட்டன. நீங்கள் இன்று இரவு 11 மணிக்குமேல் எங்கள் வீட்டு கொல்லைக்கு வந்தால் நான் உங்களுக்காகக் காத்திருப்பேன். நான் லீலாவைவிட அழகானவள். அவளைவிட நன்றாகப் படிப்பவள். நான் உங்களை நினைத்து முதல் அவளை எதிரியாகவே பாவித்துவிட்டேன்.

உங்கள் அன்பின் உருவம்
முத்துக்கண்ணு.

—இந்தக் கடிதத்தைப் படித்ததும் தங்கவேலுக்கு உச்சி குளிர்ந்தது. முத்துக்கண்ணுவை அவன் நினைத்து நினைத்து ஏங்கிய காலம் ஒன்று உண்டு முத்துக்கண்ணு அவனைத் திரும்பிக்கூடப் பார்த்ததில்லை. இப்போது அவளிடமிருந்தே காதல் கடிதம் வந்துவிட்டால்...!

தங்கவேல் இரவை எதிர்நோக்கி இருந்தான்.

* *

மறுநாள் காலை! ஊரெங்கும் ஒரே பேச்சு! 'தங்கவேல் கைது! சப்இன்ஸ்பெக்டர் சுகுமார் வீட்டுக்கொல்லையில் இரவு 11 மணிக்குமேல் திருடும் எண்ணத்துடன் தங்கவேல் ஒளிந்திருந்தான். சப்இன்ஸ்பெக்டர் சுகுமாரே நேரடியாகக் கண்டு அவனை விரட்டிப் பிடித்தார்" என்ற செய்தி ஊர் முழுதும் பரவியது.

கந்தன் மனதுக்குள்ளேயே சிரித்துக்கொண்டான். "என்னுடைய திட்டம் வெற்றி பெற்றதோடு மட்டுமல்லாமல், லீலாவிற்கு இனிமேல் தெருவில் நின்று தங்கவேல் தொல்லை கொடுக்கமாட்டான். பாவம்; இதற்குப் போய் வக்கீலைப் பார்க்கவேண்டும் என்று லீலா அக்கா சொன்னதே! இதற்கு நான் போதாதா? சப்இன்ஸ்பெக்டர் மகள் முத்துக்கண்ணு எழுதுவதுபோல் ஒரு கடிதத்தை எழுதி தங்கவேலுவுக்கு அனுப்பினேன்; அந்த மடையன் அதை உண்மை என்று கருதி இரவோடு இரவாகச் சிக்கிக்கொண்டான். ஊரிலே இருக்கிற பெண்களை யெல்லாம் கண்ணடிப்பது, காரித் துப்புவது! சே! அப்பேர்ப்பட்டவர்களுக்கெல்லாம் இது தான் கதி!" என்று தனக்குள்ளேயே நினைத்துக்கொண்ட கந்தன் அடுத்த வீட்டு ஜன்னல் பக்கமாகப் பார்த்து லீலாவுக்கு வெற்றிச் செய்தியை ஜாடைமூலமாகச் சொன்னான். அதற்குள்ளாக வீட்டுக்குள்ளேயிருந்து ஒரு குரல் வந்தது;

"கந்தா!"

"என்னம்மா?"

அதற்குள்ளாக வக்கீல் மனைவி ருக்கு வாசலுக்கு வந்துவிட்டாள்.

"கந்தா, உனக்குக் கணக்குப் பாத்தாச்சு! இந்தா முப்பது ரூபா! இனி உனக்கு இங்கு வேலை இல்லை!"

—ருக்கு திட்டவட்டமாகச் சொன்னாள்.

கந்தன் எதிர்பார்க்கவில்லை; ஏன் இந்த வேலை நீக்கம்? கேட்கவும் அவனுக்குத் துணிவில்லை. பிள்ளை குட்டி இல்லாத இளம்தம்பதிகளுக்கு செல்லப்பிள்ளையாக—விசுவாசமுள்ள பணிப்பையனாக இருந்த அவன், முகம் விம்ம சிலையாக நின்றான்.

"இந்தா, இதையும் எடுத்துக் தொலை!" என்று ஒரு துண்டுக் கடுதாசியையும் தூக்கி எறிந்தாள் ருக்கு. 'வக்கீலைச் சந்திக்க ஏற்பாடு செய்து கொடு' என்று அடுத்த வீட்டு லீலா, கந்தனுக்கு எழுதிய கடிதம் அது!

'ருக்கம்மா! இந்தக் கடிதத்தைத் தவறாகப் புரிந்து கொண்டீர்கள்!" என்று கந்தனால் வாதாட முடியவில்லை. கண்ணீரைத் துடைத்துக்கொண்டு உடுத்தியிருந்த அரைக் கால்சட்டையுடன் படியை விட்டு இறங்கினான். பெற்றோர், உற்றார், யாருமில்லை கந்தனுக்கு! கடைசியாக முகம்பில் மாட்டப்பட்டிருந்த வக்கீலின் படத்தை வணங்கினான். ருக்கம்மாவையும் வணங்க எண்ணினான். அதற்குள் 'டமார்' என்று கதவை மூடிவிட்டாள் ருக்கம்மா!

*

## விசித்திர வழக்கு!

பல வருடங்களுக்கு முன்னே மேற்குக் கெண்டக்கி ராஜ்யத்தில் ஒரு வழக்கு வந்தது. ஒருவன் காதை இன்னொருவன் கடித்துவிட்டதாகக் குற்றம் சாட்டினர்கள்.

விசித்திரமான வழக்கமல்லவா; நாட்டிலே பெரிய பரபரப்பை உண்டாக்கிவிட்டது. அது, நெடுநாள் நடந்த வழக்கில் அநேக சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர்.

கடைசியில் முக்கியமான சாட்சியாக ஒரு பணக்காரக் குடியானவக் கிழவர் வந்தார்.

கிழவரைப் பிராசிக்யூஷன் தரப்பு வக்கீல், "என்ன தாத்தா, வாதி காதை எதிரி கடித்ததை நீர் பார்த்தீரா?" என்று கேட்டார்.

"இல்லை, சார்!" என்றார் கிழவர்.

அவர் 'சட்'டென்று பதில் சொல்லிவிட்டார் என்றாலும், அவரது பதிலிலே சிறிதும் திருப்தி அடையவில்லை வக்கீல். ஆகவே மீண்டும் கேட்டார்:

"ஐயா! இதோ பாரும்; நீரோ பிரமாணம் செய்து சாட்சி சொல்லுகிறீர். வாதி காதை எதிரி கடித்தார் என்று நம்ப ஆதாரமான எதையாவது பார்த்தீரா? யோசித்துச் சொல்லும்."

கிழவர்: "இல்லை, சார், இல்லை. ஆனால், நீங்கள் இவ்வளவுதூரம் சொல்லும்போது, ஒன்று எனக்கு நினைவு வருகிறது. எதிரி வாதியோடு சண்டையிட்டாரா; அப்புறம் எதிரி வாயிலிருந்து துப்பினர். ஒரு பெரிய காது வெளியே வந்து விழுந்தது. அது யார் காதோ? அதெல்லாம் எனக்குத் தெரியாது."

வழக்கு மன்றமே அவரது விசித்திரமான பதில் கண்டு வியப்பிலாழ்ந்தது!

—ஜோ க்ரீஸன், 'லூயிஸ்வில் கூரியர்'.

# செய்தி செய்கிருர்கள்

## எஸ். இராமசாமி எம்.ஏ.

[அந்த நாளிதழின் அலுவலகம் களை தட்டுகிறது. ஒன்றுமில்லே, அதன் ஆசிரியர் வருகிருர். அவர் தான் எல்லாம்; எல்லாம் அவரே! அப்படி அந்த தினசரியுடன் தன் ளைப் பிணைத்துக்கொண்டவர் அவர். வழக்கமாக பெரிய பெரிய பத்திரிகை களில் இருப்பதுபோன்று தொழில்—திறமை அடிப்படையில் அங்கே அலுவல்கள் கிடையாது. அவர் எந்த வேலேயைத் தொடுகிருரோ மற்றவர்கள் அதை விட்டுவிடுவார் கள். எல்லாவற்றுக்கும் அவரைத் தான் எதிர்பார்ப்பார்கள்.

எப்போது வருவார் எப்போது போவார் என்று சொல்ல முடியாது. வரும்போது அவரைப் பயன்படுத் திக்கொள்வார்கள். வந்ததும் அவ ருடன் ஒரு சுறுக்கெழுத்தாளர் இருந்து கொண்டே இருப்பார்.

இப்போது நீங்கள் காணப் போவது அங்கே நடக்கும் ஒரு ஒருநாள் அலுவல்கள்.]

**ஆசிரியர்:-** என்ன, அந்த பறக்கும் நிருபர் வந்தாரா இல்லேயா?

**போர்மேன்:-** இல்லேயே! அவருக் காகத்தான் 'பானர் லே'னே காத் துக்கொண்டிருக்கிறது. இன்றைய எட்டுகாலத் தலேப்புக்கு அவர் வந்தால்தான் செய்தி. இல்லே யென்ருல் பீதிதான்.

**ஆசிரியர்:-** அவரைத்தரையில்தான் பறந்து சென்று போலீஸ் துப் பாக்கிச் சூடு எங்காவது இருக்கி றதா என்று பார்த்துக் கொள்ளச் சொன்னேன். ஆகாயத்திலேயே பறந்து கொண்டிருக்கிருர் போலி ருக்கிறது. கொடுத்தது ஒரே வேலே என்ருலும் முக்கியமான வேலே என்பதை மறந்து எங்கே திரிந்து கொண்டிருக்கிருரோ தெரியவில்லே!...

**போர்மேன்:-** அவரை எதிர்பார்த்துப் பிரயோசனமில்லிங்க. நேரம் ஆகுது. நீங்களே ஏதாவது...

[வெளியே ஏதோ 'டப்' என்று சத்தம் கேட்கிறது]

**ஆசிரியர்:-** (அதிர்ந்தவராய்) ஏய்! என்ன அங்கே சத்தம் பார்த்து வா!

**பையன்:-** ஒன்றுமில்லேசார். பசங்க வெடி வெடித்துக்கொண்டிருக் கிருர்கள். தீபாவளி வந்துவிட்ட தோல்லியோ! அதுதான்! அதிலே ஒரு வெடி பலமாக வெடித்துவிட்டிருக்கிறது. சுத்தி யிருக்கிற பசங்களுக்கெல்லாம் காயம் பட்டிருக்கிறது.

**ஆசிரியர்:-** (துள்ளிக் குதித்தவராய்) இந்தா ஐயா, எழுதிக்கொள்.

சென்னேயில் துப்பாக்கிச் சூடு. பலர் காயம்; சிலர் கவலேக்கிடம் சிறுவர்கள் படும் அவதி!

இது தலேப்பு. உள்ளே மேட்ட ரில் சிறுவர்கள் விளேயாடிய துப் பாக்கி வெடியைப்பற்றி விபரமாக எழுதிச் சேர்த்துக்கொள்ளுங்கள். தலேப்புச் செய்தியில் 'துப்பாக்கி' என்ற வார்த்தையை கொக்கி களுக்குள் போட்டுக்கொள்ளச் சொல்.

[வெற்றிப் புன்னகையுடன் நாற்காலியில் சாய்கிருர்]

**உதவி ஆசிரியர்:-** (தயங்கியபடி வந்து) 'சென்சேஷனல் நியூஸ்' இன்று எதுவும் கிடைக்கலேங்க.

**ஆசிரியர்:-** அதாகக் கிடைக்குமா? கொஞ்சம் சிந்தனே பண்ணணும். அன்ருடம் நடப்பது என்ன என் பதையும் முன்கூட்டியே தெரிந் திருக்கணும். ஏனய்யா? இன்று கடற்கரையில் நமது கூட்டம் என்று உமக்கு தெரியுமா, தெரி யாதா?

**உ. ஆசிரியர்:-** என்ன இப்படிக் கேட்கிறீங்க? நமது நிருபர் போயி ருக்கிருரே!

**ஆசிரியர்:-** அவர் போயிருப்பது எனக்கும்தெரியும். அவர்கொண்டு வருவது 'செய்தி' என்றும் தெரி யும் 'சென்சேஷன்' வேண்டுமே ஐயா? அதற்குத்தான் அவரை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிருய். நீ இந்த உலகத்தில் இருந்தால் தானே? 'இங்கே' நடப்பது என்ன என்று தெரிந்து கொள்வதில் உனக்கு அக்கறையே இல்லே. சரிசரி.....கடற்கரையில் நடக்கும் நம்ம கூட்டத்துப் பேச்சுக்களுக்கு நடுவில் இதை பாக்சாகப் போட் டுக்கொள்

கடற்கரைக்
காங்கிரசுக் கூட்டத்தில் கலாட்டா!
போலீசு என்ன செய்கிறது?

என்னய்யா விழிக்கிருயே? கலாட்டாவைப் பற்றி இங்கே... அதுவும்......கூட்டம் நடந்து கொண்டிருக்கும்போதே எப் படித் தெரியும் என்ருு? அதற்கெல் லாம் அட்டவணே போட்டு காரி யம் நடைபெறுகிறது. அது சரி... செய்தியில் "குழப்பத்துக்குக் கார ணம் கழகத்துக்காரர்களே என்று மறக்காமல் சேர்த்துக்கொள்!

**உதவி ஆசிரியர்:-** சரிங்க...தலேயங்க எழுத்தாளர் உங்களேப்பார்க் கணுமாம். ரொம்ப நேரமாகக்காத் துக்கிட்டிருக்கார்!

**ஆசிரியர்:-** அதுவேரு; வரச்சொல்

**தலேயங்க எழுத்தாளர்:-** நிலேமையே சரி இல்லிங்க. மதுவிலக்கு மன்! னர்கள் மானயம் மொரார்ஜிதேச யின் முரண்பட்ட பேச்சு; மொழிக் கொள்கையில் அபத்தங்கள் சிவ சேனு சீனு என்று இப்படி எல் லாம் எழுதி ஏன் காங்கிரசுக்காரர் களுக்குள் ஒரு ஒருமித்த கொள்கை இல்லேண்ணு கழகத் துப் பத்திரிகைகளெல்லாம் எழுது கின்றன.

பொது ஜனங்களும் வெளியே பேசிக்கொள்கிருர்கள். இந்தப் பிரச்சனேயெல்லாம் வரும்போது தலேயங்கம் எப்படி எழுதுவ

தென்றே புரியலை, செய்தி செய்தி என்று நீங்களும் :அதிலேயே நேரத்தை செலவழிக்கிறீர்கள்....,

ஆசிரியர்:- சரிதானய்யா நீர் சொல்றதும். இப்படிப்பட்ட 'ட்ராபாக்' கெல்லாம் இருக்குதுண்ணு எனக்கு இப்பதான் தெரியுது. உமது நிலைமையும் கஷ்டம்தான் போலிருக்கிறது. அந்த வம்பிவெல்லாம் கைவைத்து மாட்டிக் கொள்ளாதே! அதுபோன்ற பிரச்சனைகள் சீரியசா வரப்பெல்லாம் ''மத்திய அரசைக் காப்போம்'' ''மத்திய அரசைத் தாக்குவது தான் மாநிலங்களுக்குவேலையா?'' இப்படி வேறு எதையாவது எழுதி 'சைட்டிராக்' செய்துடு...இதோ பார்...மத்திய அரசில் காங்கிரசு இருக்கும் வரை நமக்கு 'பழைய பெருமை' போய்விடவில்லை. மனதுக்குக் கஷ்டம் வரும்போது அதை நினைத்துக்கொள். இங்கே இருக்கிற 'சப்ஜக்ட்' எதுவும் ஒத்து வரவில்லையென்றால் உடனே 'டில்லி'யைப்பற்றி ஏதாவது எழுது...என்ன புரிகிறதா? சரி சரி...போய் அந்தப் புதியதாக வந்திருக்கிற உதவி ஆசிரியரை உள்ளே அனுப்பு...

[புதிதாக வந்துள்ள உதவி ஆசிரியர் உள்ளே வருகிறார்]

பு. வ. ஆசிரியர்:- கூப்பிட்டீர்களாமே...!

ஆசிரியர்:- ஆமாம்.......முந்தாநாள் நீர் வந்து சேர்ந்தபோது ஒரு 'சீக்குவன்'சைச் சொல்லி அதுக்கு செய்தி தயார் பண்ணச் சொன்னேன்...

பு. வ. ஆசிரியர்:- அதை நேற்றைக்கே எழுதிவிட்டேங்க...... நீங்க வல்லே...

ஆசிரியர்:- சரி போகட்டும். இப்போது படித்துக் காட்டு பார்க்கலாம்...

புதிய உதவி ஆசிரியர்:- படிக்கிறார்

தி. மு. க. கொடிக்குக் கீழ் கோரக் கொலை? சம்பவத்துக்கு அரசியல் தொடர்பு இருக்கலாம்?

தாக்கியவர் கழகத்துக்காரரா?

சென்னை செப்டம்பர் 10

இந்நகருக்கு நேர் கிழக்கே பத்தாவது மைலில் உள்ள கடலூரில் வாலிபர் ஒருவர் தாக்குதலுக்குள்ளாகியிருக்கிறார். அதன் விளைவாக அவர் இறந்திருப்பாரோ என்று சந்தேகிக்கப்படுகிறது. இறக்கலாம் என்று நம்பப்படும் அவர் முன்பு ஒரு தடவை காங்கிரசில் சேர்வதாக இருந்தார். தாக்கியவர் தி. மு. க. கொடி பறந்து கொண்டிருந்த கம்பத்துக் கீழ் நின்றுகொண்டிருந்தார். அவர் கழகத்துக்காரராக இருக்குமோ என்ற சந்தேகத்தைத் தெளிவுபடுத்த நமது சிறப்பு நிருபர் சம்பவம் நடந்த இடத்துக்குச் செல்ல இருக்கிறார்.

ஆசிரியர்:- (அதிர்ச்சியை சமாளித்தபடி)பேஷ். பிரமாதம் இதை அப்படியே நாளைய பேப்பரில் போட்டுவிடு. போய் அந்த உதவி ஆசிரியரை வரச்சொல்லும்......

உதவி ஆசிரியர்:- (உள்ளே வந்தபடி) என்ன புதியவர் எப்படி இருக்கிறார்? ஏன் இப்படி பேயறைந்தார்போல உட்கார்ந்து விட்டீங்க...

ஆசிரியர்:- மனுஷன் இப்படி படு சாமர்த்தியமாக இருப்பான்னு நினைக்கவே இல்லை ஐயா! ஒரு சோறுபதம்! கொடுத்த முதல் வேலையிலேயே நம்மையெல்லாம் சாப்பிட்டுட்டானே !சரி!சரி!நம்ம இடத்துக்கு ஆபத்து வராமல் பார்த்துக்கணும்.......போகட்டும். ஜெனரல் ஆஸ்பத்திரிக்குப் போன நிருபர் வந்தாரா இல்லையா? போய் காஷுவாலிடி, எமர்ஜன்சி வார்டுகளுக்குப் பக்கத்தில் இருந்து ஏதாவது கிடைத்தால் தயாரித்து வாண்ணு அனுப்பினா எங்கே தானே வைத்தியம் பார்த்துக்கொள்ளப் போயிட்டார் போலிருக்கு!

ஜெனரல் ஆஸ்பத்திரி நிருபர்:- (வந்துகொண்டே) என்ன சார் என்னைப் பற்றிய பேச்சா? என்னால் எதுவும் டிலே' ஆகாது. இதோ குறித்த நேரத்துக்கு வந்துட்டேன். ஆனால் இன்னைக்கு விசேஷம்...அதாவது....கொலை....கிலை எதும் இல்லை. டல்'தான். இருந்தாலும் எமர்ஜன்சி வார்டுக்கு ஒரு கேஸ் வந்துது பாருங்கள். அடடா! என்னமா காயம் ஒரே அடிதான் பாவி அடித்திருக்கான். ஆனால் கை அதாவது கை...... போயே போய்விட்டது அப்படியே தொங்குது...படிக்கிறேன் கேளுங்கள்......தலைப்பும் இப்போதெல்லாம் நானே கொடுத்துக் கொள்கிறேன். உங்கள் தயாரிப்பில் வந்தவனல்லவா?கேளுங்கள்;

எங்கோ அல்ல: கழக நிர்வாகத்தில் உள்ள தமிழகத்தில் நடந்தது.

...இப்ப படித்தேனே அது காலர் லைன். அதாவது உயரே கட்டம் போட்டு பெரிதாகப் போடவேண்டும். இனி அடுத்துப் படிக்கிறேன் ......

**கணவன் அடித்ததால்**
**கை இழந்தாள் மனைவி**
**நெஞ்சை உருக்கும் சம்பவம்**
**கழக ஆட்சியில் பெண்கள் நிலை இதுவா?**

ஆசிரியர்:- (சிரித்துக்கொண்டே) போதும் ஐயா போதும் தாயைத் தண்ணீர்த் துறையில் பார்த்தால் பெண்ணை வீட்டுக்குச் சென்று பார்க்கவேண்டியதில்லை. ஆரம்பத்திலேயே தான் காட்டிவிட்டாயே உன் திறமையை...

(டெலிபோன் மணி அடிக்கிறது. பதட்டத்துடன் 'இதோ வருகிறேன்' என்று பதிலளித்துவிட்டு ஆசிரியர் பறக்கிறார். உடன் ரோட்டரி மிஷின் சத்தம் போடுகிறது. வெள்ளைக் காகிதங்கள் கறுப்பாகின்றன. கட்டுகள் தயாராகிறது. பத்திரிகைக் 'கோட்டா'வை வாங்க வந்த சைக்கிள் பையன் நாளிதழின் வாசற்படியிலிருந்தே தனது வேலையைத் துவக்குகிறான், அதாவது பின்வருமாறு சந்தம் போடுகிறான், பேப்பர் விற்பனையாவதற்காக!

* சென்னையில் துப்பாக்கிச் சூடு
* காங்கிரசுக் கூட்டத்தில் கலாட்டா.
* மத்திய அரசுக்கு எதிராக சதி
* தி. மு. க. கொடிக்குக் கீழ் கோரக் கொலை
* கழக ஆட்சியில் கணவன் மனைவி சண்டை

சைக்கிள் பையன் தேய்ந்துபோன கிராமபோன் ரிகார்டுபோல திரும்பத் திரும்ப கூவியபடி செல்கிறான்.

அப்போது வேறொரு நாளிதழில் பணியாற்றிவிட்டு வரும் இருவர் ஒருவரை யொருவர் இப்படிப் பேசிக் கொள்கிறார்கள்.

''இந்த செய்தி யெல்லாம் ஏன் நம்ம பத்திரிகைக்கு வரவில்லை?''

''பையன் கூவுகிறானே, இதெல்லாம் நடந்த செய்தி இல்லை; செய்த செய்தி! அதனால்தான் நமக்குத் தெரியவில்லை!''

●

GRAMS: "YESYES" PHONE No. 297

# S. பிரகாசம் & சன்ஸ்

சிறந்த பட்டு சேலைகள் தயாரிப்பாளர்கள்

27, மேட்டுத் தெரு, காஞ்சீபுரம்.

---

காஞ்சீபுரம்

# கூட்டுறவு மத்திய பாங்கு லிமிடெட், காஞ்சீபுரம்.

அஞ்சல் பெட்டி எண். 9. தொலைபேசி எண். 338

கிளைகள்:

திருவள்ளூர், திருத்தணி,
செங்கற்பட்டு, படாளம்.

| | | |
|---|---|---|
| அதிகாரம் பெற்ற மூலதனம் | ரூ. | 125 இலட்சம் |
| செலுத்தப்பட்ட மூலதனம் | ரூ. | 67,43,010 |
| காப்பு நிதி (ரிசர்வ் பண்டு) | ரூ. | 15,37,467 |
| இதர நிதிகள் | ரூ. | 21,46,017 |
| செயல்பாட்டு நிதி (Working capital) | ரூ. | 2,41,03,419 |
| பாநில அரசினர் பாங்கு | ரூ. | 5,50,000 |

செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள எல்லாக் கூட்டுறவு நிறுவனங்களுக்கும் பாங்காக இருந்து வருகிறது. குறைந்த கமிஷன் விகிதத்தில் எல்லா இடங்களுக்கும் டிராப்டுகள் வழங்கப்படுகின்றன.

கீழ்க்கண்ட விபரப்படி நிரந்தர முதலீடுகளின் பேரில் (Fixed Deposit) உயர்ந்த வட்டிவிகிதம் வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| 3 மாதங்கள் முதல் 6 மாதங்களுக்கு | 5 % |
| 6 மாதங்களுக்கு | 6 % |
| 1 ஆண்டிற்கு | 6¼ % |
| 2 ஆண்டுகளுக்கு | 6½ % |
| 3 & 4 ஆண்டுகளுக்கு | 6¾ % |
| 5 & 6 ஆண்டுகளுக்கு | 7½ % |
| 7 ஆண்டுகளுக்கும் அதற்கு மேலும் | 7½ % |

சேமிப்பு டிபாசிட்டுகளின் பேரில் 4 % வட்டி அளிக்கப்படும். வாரத்திற்கு ரூ. 1000/- வரை வாங்கலாம்.

மாதாந்திர சேமிப்பு டிபாசிட்டுகள் (Recurring Deposit) 1 ஆண்டு முதல் 7 ஆண்டுகள் வரை ஏற்றுக்கொள்ளப்பட்டு 6 % வட்டி வழங்கப்படுகிறது.

விபரங்களுக்கு பாங்கியின் செயலாளரையோ அல்லது உங்கள் அருகிலுள்ள எங்கள் பாங்கியின் கிளை நிருவாகியையோ அணுகவும்,

மணலி இராமகிருஷ்ண முதலியார்,
தலைவர்.

தொலைபேசி எண்: 212 தந்தி: ஆர்வீஸ்

ஆர்வீஸ்

காபி

38, நெல்லுக்காரத் தெரு, காஞ்சீபுரம்.

உயர்ந்த ரக காப்பிக் கொட்டையும்,

மண மிக்க காப்பித்தூளும்

மொத்தமாகவும், சில்லரையாகவும், மலிவாகவும் கிடைக்கும்.

இதயங்கனிந்த வாழ்த்துக்கள்!

V. V. C. R. முருகேசமுதலியார் & சன்ஸ்

ஈரோடு, சேலம், மதுரை ஆகிய ஊர்களுக்கு

மதுரா மில்ஸ் கோ., லிட்டின்

விற்பனை ஏஜண்ட்ஸ்.

மற்றும்

ஹார்வி ட்வின் டஸ்கர் ஆடைகளுக்கு

சேலம், தர்மபுரி, கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டங்களுக்கு

வட்டார விநியோகஸ்தர்கள்!

| ஊர்: | தந்தி: | போன் |
|---|---|---|
| மதுரை | "PULLICCAR" | 2161 |
| சேலம் | "VELMURUGAN" | 3241 |
| ஈரோடு | "PULLICCAR" | 12 |

Engineering Group

SIMPSON & COMPANY LIMITED (Estd. 1840), MADRAS-2

ADDISON & COMPANY LIMITED (Estd. 1873), MADRAS-2

ADDISONS PAINTS & CHEMICALS LIMITED, MADRAS-11.

AMCO BATTERIES LIMITED. BANGALORE-26.

BIMETAL BEARINGS LIMITED. MADRAS-11.

GEORGE OAKES LIMITED, MADRAS-2.

GEORGE OAKES LIMITED, (BOMBAY OPERATIONS) BOMBAY-2

INDIA PISTONS LIMITED. MADRAS-11.

INDIAPISTONS-REPCO LIMITED. MADRAS-11.

REICHHOLD CHEMICALS INDIA LIMITED, MADRAS-51.

SHARDLOW INDIA LIMITED, SEMBIAM, MADRAS-11.

SRI RAMA VILAS SERVICE LIMITED, MADRAS-2.

SRI RAMA VILAS SERVICE LIMITED, KUMBAKONAM.

STANES MOTORS (SOUTH INDIA) LTD., COIMBATORE.

STANES TYRE & RUBBER PRODUCTS LTD., COIMBATORE.

TRACTORS AND FARM EQUIPMENT LIMITED, MADRAS-34.

L. M. VAN MOPPES DIAMOND TOOLS INDIA LIMITED, MADRAS-2

THE WHEEL & RIM CO OF INDIA LIMITED, MADRAS-11.

The Amalgamations Group is the largest Light Engineering Group in South India.
The Corporate strength of **Amalgamations** is due to a successful plan of acquiring or constructing a network of manufacturing units and progressively rationalising them to be complementary units of production in related fields of activity.

**Non-Engineering Group**

ASSOCIATED PRINTERS (MADRAS) PRIVATE LIMITED, MADRAS-2.

ASSOCIATED PUBLISHERS (MADRAS) PRIVATE LIMITED, 'THE MAIL', MADRAS-2.

HIGGINBOTHAMS PRIVATE LIMITED, MADRAS-2.

SIMPSON & GENERAL FINANCE COMPANY LIMITED, MADRAS-2.

SPEED-A-WAY PRIVATE LIMITED, MADRAS-2.

T. STANES & COMPANY LIMITED, COIMBATORE.

THE UNITED COFFEE SUPPLY COMPANY LIMITED, COIMBATORE

WALLACE CARTWRIGHT & CO. LIMITED, 55/58, St. James Street, LONDON S. W. 1.

The Group Manufactures Automotive and Industrial Diesel Engines, Agricultural Tractors and farm implements, Castings, Stampings, forgings, Engineers Cutting Tools, spares and ancillaries such as pistons, piston rings, bimetal bearings, flywheel ring gear as original equipment or for use in the automobile and other industries, lead acid batteries for transport, telecommunication and industrial uses,
Builds coaches and bodies,
Fabricates mechanical light engineering specialities,
Formulates Synthetic resins, pigments, lacquers, paints, colours, varnishes, emulsions, enamels,
Operates transport and passenger services,
Produces tea and coffee,
Publishes an evening newspaper.

The Group's Industrial Estates cover over 150 acres and provide as many as 17 separate manufacturing units using latest equipment and modern techniques.
Its valuable experience of cost and quality considerations over many years in the domestic market enables the Group to export a wide range of first class products which have been accepted by discriminating buyers in over thirty countries in the world.

Total Number of Employees: About 14,000
Bankers: The Central Bank of India Limited, Madras-2.
Advertising Consultants:
THE MADRAS ADVERTISING CO. PRIVATE LTD., MADRAS-2

**Amalgamations**
**PRIVATE LIMITED**
202, Mount Road, Madras-2
and subsidiary Companies
*(Unit Companies of Simpson Group Industries)*

With the best compliments of:

# INDIAN BRIGHT STEEL CO LTD.,

Plot No. 24, INDUSTRIAL ESTATE

AMBATTUR, MADRAS-58.

PHONE: No. 60386

With the best compliments of:

# Aures & Associates Private Limited

38, Whites Road, MADRAS-14.

PHONE No. 85113

"Dealers in Exide Batteries"

தமிழ் நாட்டில் தனிச் சிறப்புடன் விளங்குவது

# ★ ஜெயா பார்மஸி ★

## H. O. பெரியகுளம்

**(Recognised by central Board of Indigenous Madicine Madras)**




பொதுமக்கள் ஏமாற்றமடையா திருக்க, எங்களது மருந்துகளை வாங்கும்போது, ஜெயாபார்மஸி H. O. பெரியகுளம் என்பதை லேபிளில் உள்ள முத்திரையை யும் கவனித்து வாங்கும்படி கேட்டுக்கொள்ளப் படுகிருர்கள்.

JEYA

பிராஞ்சுகள்:

51 Dr நடேசன் ரோடு, சென்னை-5.
51, செஞ்சி ரோடு, திண்டிவனம்.
17, நெல்கடைத் தெரு. மாயவரம்.
2, வள்ளிமால் தெரு (சிங்காரத்தோப்பு எதிர்) பெரிய கடைவீதி, திருச்சி-8.
28, நேத்திமேடு, கோயம்புத்தூர் ரோடு, சேலம்-2.
208, ஒப்பணக்காரத் தெரு, கோயம்புத்தூர்.
63, மார்க்கட் ரோடு, தஞ்சாவூர்.
47-A, கண்ணம்மாள் கோயில் தெரு, திருநெல்வேலி ஜங்.

மற்றும் தமிழகமெங்கும் ஏஜண்டுகள்.

புதிதாக ஏஜன்ஸி வேண்டுவோர் தலைமை நிலயத்திற்கோ பிராஞ்சிற்கோ விண்ணப்பிக்கவும்.

உரிமையாளர்:

**J. M. ராஜன்,**

**ஜெயா பார்மஸி, மதுரை ரோடு, திண்டுக்கல்.**

போன்: 348, 348-A, 438.

முகப்பு விளக்கம்:

# அவன் மகன்தான் ஆளுகின்றான்!

—[கவிஞர் சுரதா]—

கிழக்கிருந்து மேற்குவரை சென்று, மீண்டும்
கீழ்த்திசையில் உதித்திட்டான் கதிரோன், தீரா
வழக்கிருந்து வருகின்ற உலகம், வெய்யில்
வட்டத்தால் விளங்கிற்று, வேந்தன் வந்தான்.
மழைக்கிருந்து வருகின்ற தன்மை கொண்டோன்,
மன்றத்துச் சான்றோரைக் கூர்ந்து நோக்கி,
"அழுக்கிருந்து வருகின்ற நிலவை நீங்கள்
ஆதரிக்கச் சொல்லுகின்றீர்! ஒப்ப மாட்டேன்.

சோழமென்றால் சூரியனாம். அதனா லன்றோ
சூரியன்போல் சிறந்தோனைச் சோழன் என்றார்.
ஆழமென்று கண்டறிந்த தாலே, கற்றோர்
அலைகடலை ஆழியென்றார், உங்கட் கெல்லாம்,
வேழமென்றால் தெரியாதா? பெண்டி ரோடு
விளையாடும் என்மகனா வேழம்? சான்றோர்,
ஈழமென்றால் கள்ளென்பர்; செம்பொன் என்பர்.
என்மகனைப் பொன்னென்று சொல்லு கின்றீர்?

மழைத்துளிபோல் பயன்படுவான் என்று மிக்க
மகிழ்ச்சியொடு நானிருந்தேன். ஆனால் அன்னோன்
மொழிக்குமுதல் வாராத எழுத்தே போலும்,
மூடிவைக்கும் புண்போலும் ஆகி விட்டான்.
வழித்தெறியும் வியர்வையவன், கன்னிக் கண்ணன்
மற்றவர்கள் அறியாத வண்ணம், பூவின்
குழிக்குள்விழும் கருவண்டு! மங்கை மோகன்,
குடைநிழலில் அதன்பள்ளம் தெரிவ துண்டோ?

கழுத்துக்கோர் அணிகலன்போல் சிறந்த தான
கட்டளையாம் கலித்துறையின் அடிகள் தோறும்,
எழுத்துக்கள் எண்ணுகின்றார் இளைஞர். ஆனால்
என்மகனோ, எத்தனைபேர் இங்கே வாழைப்
பழத்துக்கு நிகரான பெண்கள், என்று
பார்வையினால் எண்ணுகின்றான்! வேங்கை போலே
விழித்துப்பார் என்றுரைத்தால், அவனோ பெண்மான்
விழிப்பதுபோல் விழிக்கின்றான். மருளு கின்றான்.

நாணிக்கண் புதைப்பதெல்லாம் பெண்கள் காட்டும்
நாகரிகம்; அவர்க்குரிய நடத்தை. மின்னும்
ஆணிப்பொன் மங்கையர்போல் நாணம் காட்டல்
ஆண்பிள்ளைக் கழகாமோ? ஒவ்வோர் நாளும்,
ஊணுக்கும், உப்பமைந்த காமத் திற்கும்
ஓடுகின்றான். அவனினிமேல் திருந்த மாட்டான்!
காணிக்கை தருவோரே! பசுப்பால் கொண்டு
கழுவிடினும் கரித்துண்டு வெண்மை யாமோ?

முள்ளிருக்கும் கள்ளியெல்லாம் பாலை மண்ணில்
முளைத்திடலாம். 'மென்பாலாம் மருதம்' தன்னில்,
கள்ளிருக்கும் தாமரைக்கே இடமுண் டன்றிக்
கள்ளிக்கோ தாழைக்கோ இடமே இல்லை.
புள்ளிருக்கும் பட்டணத்தில் பொன்னி யாற்றின்
புனல்ததும்பும் உறையூரில், வணிகர்க் காக
எள்ளிருக்க இடங்கொடுத்தேன். மகனோ, ஊரார்
எள்ளிநகை யாடஇடங் கொடுத்து விட்டான்.

வினைவிருப்பம் கொண்டவர்கள், விரக தாப
வெறிகொண்ட காமுகன்போல், ஒவ்வோர் நாளும்
மனைவிருப்பம் கொள்வதில்லை. கொள்வா ராயின்
மாண்டபயன் நீண்டபுகழ் பெறவே மாட்டார்!
தனிவிருப்பம் எத்தனையோ உண்டென் றாலும்,
தமிழ்மீதும் தமிழகத்தின் மீதும், மாந்தர்
நனிவிருப்பம் வைத்திடுதல் வேண்டும்; இந்த
நல்விருப்பம் என்மைந்தன் இடத்தில் உண்டா?

வெள்ளிவிழா; வெற்றிவிழா; ஆற்றின் வெள்ளம்
வீங்கிவரின் அதற்குவிழா; ஆண்டு தோறும்
உள்ளிவிழா நடாத்தும்நான், தமிழுக் கிங்கோர்
உலகவிழா நடாத்துதற்கு முயலு கின்றேன்.
துள்ளிவிழாப் பருவமெனும் முதுமை வந்தால்,
துன்புறுத்தநோய்கள்வரும்.அந்நோய்போன்றோன்,
பள்ளிவிழா நடத்துதற்கு விரும்பு கின்றான்.
பால்நிலவின் பக்கந்தான் திரும்பு கின்றான்.

நிறத்தாலே கறுத்திருப்போன். வெறுக்கத் தக்க
நிகழ்ச்சியினால் நூறுமுறை கறுத்து விட்டான்!
அறத்தாலே திருத்துதற்கும் முயற்சி செய்தேன்;
அன்பாலே மாற்றுதற்கும் முயன்று பார்த்தேன்.
முறித்தாலும் முறிபடுமோ வானத் தின்வில்?
முயற்சியிலே நான்தோற்றேன்.அவனேவென்றான்!
பொறுத்தேன்யான் இனிபொறுக்க மாட்டேன். பாவம்
புண்ணியமெல் லாமினிமேல் பார்க்க மாட்டேன்.

மெய்நீக்கி எழுத்தெண்ண வேண்டும் என்னும்
விதியுண்டு செய்யுளுக்கு. மக்கள் கூறும்
பொய்நீக்கி மெய்காண வேண்டும். நீரின்
போர்வையெனும் பாசியினை விலக்க வேண்டும்.
நெய்நீக்கிச் சோறுண்ணுச் சோழ நாட்டில்
நீதிக்கே முதலிடமாம்! எனவே இங்கே
மைநீக்கும் கைம்பெண்டிர் போலே, என்றன்
மைந்தனையும் விரட்டுவதே விவேக மாகும்.

புண்புணரும் வேலோடு 'கட்டி' என்பான்
போராடக் காத்திருக்கும் நிலையில், மாந்தர்
கண்புணரும் சோலையிலே பெண்டி ரோடு
காதலுரை யாடுகின்றான் மைந்தன்! இந்த
விண்புணரும் வையத்தில், பழிக்கத் தக்க
வீணன்வந்து பிறந்தானே மகனாய்! இன்றே
மண்புணரும் மலைகளுக்கும் அப்பால் உள்ள
மணல்வெளிக்குத் தன்மகனைத் துரத்தி விட்டான்,

விண்மீது வெள்ளைநிலா படுக்க, மெல்லும்
வெற்றிலையில் ஏலக்காய் படுக்கக் கெண்டைக்
கண்மீது மைபடுக்கப் புருவ மென்னும்
கரைமீது வில்வந்து படுக்கப் பத்துப்
பெண்மீது படுத்திருந்த இளைஞன், அந்தப்
பெருங்காட்டில் புல்லரிசி தன்னை உண்டு,
மண்மீது படுத்திருக்க லானான். ஈரம்
வற்றியதோர் பனையோலைச்சுருள்போ லானான்.

முன்னிருந்த வீரர்களின் பெயரை யெல்லாம்
முல்லைநிலத் தரைமீதில் எழுதிப் பின்னர்
தன்பெயரை அவற்றின் கீழ் எழுதி, அந்தத்
தரைப் பெயரின் பட்டியலைப் படித்துப் பார்த்தான்.
அன்னவரின் தனிப்புகழை நினைத்துப் பார்த்தான்.
அவர்களொடுதன்வாழ்வை இணைத்துப்பார்த்தான்.
''குன்றருகில் கூழாங்கல்! நான்தான்'' என்றான்.
குளிர்மழைமுன் பனித்துளியும் நான்தான் என்றான்

ஏடாள வேண்டியவன் புலவன்; யாழின்
இசைமீட்ட வேண்டியவன் பரிசில் பாணன்;
வீடாள வேண்டியவள் மங்கை; போரின்
விதிசெய்ய வேண்டியவன் தலைமை வீரன்.
நாடாள வேண்டியநான், சோழ நாட்டில்
நடமாட வேண்டியநான், வேங்கை வாழும்
காடாள வேண்டியவ னானேன்! பாராங்
கல்மீது விதைத்திட்ட விதைபோல் ஆனேன்.

இடப்பெயரை என்பெயரால் கெடுத்தேன்; பெற்றோர்
இடுபெயரை இடுகுறியாய் மாற்றிக் கொண்டேன்.
கடைப்பெயரை அங்காடிப் பெயராய் மாற்றிக்
காலத்தைக் காமத்தில் கழித்தேன். தங்கக்
குடப்பெயரை மண்பானைப் பெயராய்க் கொண்டு
குணங்கெட்டேன்; குறிகெட்டேன், கொள்கை கெட்டேன்.
சடப்பெயரைத் தாங்குகின்றேன். இங்கே வந்து
சஞ்சலத்தால் சங்கடத்தால் ஏங்கு கின்றேன்.

இலர்பலராய் ஆவதற்கும்; அறிவின் ஆற்றல்
இல்லாமல் பலரிங்கே இருப்ப தற்கும்:
சிலர்சிலர்போல் வாழ்நாளில் முயற்சி ஏதும்
செய்யாமை காரணமாம்! தனியே இங்கு
மலர்மலராய் இருப்பவற்றைத் தொடுத்தா லன்றி
மாலையெனும் பெயரதற்கு வருவ தில்லை.
சிலர்சிலரின் வெற்றிக்கே ஊக்கம் வித்தாம்!
சிலர்சிலரின் தோல்விக்கே தூக்கம் வித்தாம்!

நான்பிறந்த நாட்டுக்கோர் கோழை யாக;
நற்றமிழைச் சுவைத்தறியா ஊமை யாக;
மான்பிறந்த கானகத்தில் உடைவேல் என்னும்
மரத்தினது மிகச்சிறிய இலைபோ லாகத்
தேன்பிறந்த தாமரையின் தண்டில் உள்ள
சிறியதொரு முள்ளாக இருக்கின் றேன்நான்
ஏன் பிறந்தேன் சான்றோர்கள் பிறந்த நாட்டில்?
எச்சில்இலை பயன்படுமோ மீண்டும் வீட்டில்?

தூங்கெயிலை எறிந்தவனும் என்றன் மாமன்
தொடித்தோட்செம்பியனெங்கே?செந்தேன்சிந்தும்
வேங்கைமலர் மேலுதிரச் சிறுகண் யானை
விழிமயங்கி உறங்குதல் போல், பெண்டி ரோடு
தூங்கியவன் நானெங்கே? இனியும் என்றன்
சுடர் முகத்தைத் தூக்காமல்; புகழ்சேர்க் காமல்
வீங்கியமண் உலகிலுயிர் வாழ மாட்டேன்.
வேலெடுப்பேன்;வாளெடுப்பேன்; வென்றுநிற்பேன்.

மண்டுகம் எனும்தவளை கத்தும் ஆமூர்
மல்லனையான் வெல்லுகின்ற வரையில் இங்கே
உண்டாரை நெடுநாட்கள் வாழ வைக்கும்
உயர் நெல்லிக் கனிதரினும் தின்ன மாட்டேன்!

பண்டோர்நாள் மறைந்தபல நூற்கள் மீண்டும்
பார்ப்பதற்குக் கிடைத்தாலும் அவற்றைப் பாரேன்!
கண்டாரை மயக்கி வரும் கொல்லிப் பாவை
கண்ணெதிரே வந்தாலும் மயங்க மாட்டேன்!

மலையாக நானிருக்க வேண்டும். ஆனல்
மணலாக இருக்கின்றேன். ஊஞ்ச லாடும்
அலையாக நானிருக்க வேண்டும். ஆனல்
அதன் நுரையாய் இருக்கின்றேன். பாயும் வேங்கை
தலையாக நானிருக்க வேண்டும். ஆட்டின்
தலையாக இருக்கின்றேன். இனிமேல் வாழ்வில்
எலியாக நானிருக்கப் போவ தில்லை!
என்றெண்ணி அவ்விடத்தை விட்ட கன்றான்.

கத்தியிலே வீரத்தை வைத்து வந்தான்
கல்வியிலே நேரத்தை வைத்து வந்தான்.
பத்தடுக்கு மாளிகையில் தந்தை; அந்தப்
பாசறையில் மாவீரன்! ஒவ்வோர் நாளும்
நித்திரையே அவன்கண்ட ஓய்வு! வீர
நிகழ்ச்சிகளே அன்றடப் பொழுது போக்காம்!
எத்தனையோ போர்க்களத்தில் வெற்றி பெற்றான்
எண்ணத்தை நிறைவேற்ற ஆமூர் சென்றான்!

''உறையூரில் பிறந்தவனே! என்முன் நிற்கும்
ஒற்றைச் சாண் பொடிப் பயலே வாடா'' என்றே
அறை கூவி அழைத் திட்டான் ஆமூர் மல்லன்.
அடுத்தகணம் தோள்தட்டி எழுந்தான் கிள்ளி.
முறையாகப் போர்புரிந்தான் இளைஞன் சாவின்
முனையேறிக் கொண்டிருந்தான் ஆமூர் மல்லன்!
பிறைவீரன் அன்னவனைக் கீழே வீழ்த்திப்
பிணமாக்கி விட்டெறிந்தான் மக்கள் பக்கம்.

தூண்டுபுகழ் பெற்றவனைக் காண வேண்டித்
தூதுவன்போல் அவன்தந்தை வந்து சேர்ந்தான்
''ஆண்டுபல வாகஉனைப் பிரிந்தி ருந்தேன்.
அடிக்கடிநான் உன்நினைவால் ஒடிந்தி ருந்தேன்.
மீண்டுமுனை நான்பெற்றேன். மகனே! நீயுன்
வீரத்தால், கோப்பெருநற் கிள்ளி என்னும்
நீண்டபெயர் தனையுலகில் நிலைக்க வைத்தாய்!
நெருங்காத நெஞ்சத்தை நெருங்க வைத்தாய்!

காமமெனும் சேற்றில்நீ வீழ்ந்த தாலே
கண்டித்தேன்; தண்டித்தேன், நாக்கில் லாத
ஊமைமணி போன்றிருந்தாய் என்ப தாலே
உபயோகப் படமாட்டாய் எனநி னைத்தேன்.
தேமதுரத் தமிழ்நாட்டில் இன்று வெற்றிச்
சிங்கமெனத் திகழ்கின்றாய்! இனிமேல் உன்னைப்
பூமிமகள் சுமப்பதிலே பெருமை கொள்வாள்.
புகழ்கூட உன்மீது பொறாமை கொள்ளும்!

வாய்திறந்த போதெல்லாம் உன்னை வைதேன்,
வைதாலும் நீயென்னை வாழ்த்தி வந்தாய்.
காய்திறந்த கசப்புமொழி பேசி வந்தேன்
கனிதிறந்த இனிப்புமொழி பேசி வந்தாய்.
நோய்திறந்த புண்ணென்று பழித்தேன்; எங்கும்
நுழைந்துவரும் புகையென்று பழித்தேன்: நீயோ
சேய்திறந்த மழலைமொழி என்றே ஏற்று
செயற்கரிய செய்துபுகழ் சேர்த்தாய்'' என்றான்!

PHONE: 26351

With the best compliments of:

# Universal Radiators

METTUPALAYAM ROAD,

COIMBATORE-11.

Phone: 60358

With the best compliments of:

# MADRAS RADIATORS & PRESSINGS

Avadi Road, AMBATTUR.

# தொடர்கதை!

திருவாரூர் முத்துராமன்

என்னை உனக்குப் புரிகிறதா—என்
இதயத் துடிப்பு தெரிகிறதா
உன்னை எனக்குத் தருவாயா—புது
உலகைக் காண்போம் வருவாயா.

அடியே தோளில் படர்ந்துவிடு—என்
ஆசை நெஞ்சில் நிறைந்துவிடு
முடியா கதையைத் தொடர்ந்துவிடு—முழு
முத்தச் சுவையைத் தந்துவிடு.

கன்னக் குமிழின் சிரிப்பாலே—ஒரு
காதல் கீதம் இசைத்துவிடு
சின்னஞ் சிறிய விழிக்குள்ளே—எனை
சித்திர மாக்கிக் கொண்டுவிடு!

படியாப் பாடம் படிப்போம்வா—இளம்
பருவத் தேரில் பறப்போம் வா!
விடியும் வரையில் சுகக்கதைதான்—பின்
விடிந்தால் என்ன! தொடர்கதைதான்!

இடைஎன் கைக்குள் துவளட்டும்—விழி
இரண்டும் வெளுத்து மயங்கட்டும்!
தடைகள், இடைவெளி மாயட்டும்!—இதழ்
தாமதியாமல் கூடட்டும்!


பருவப் பாடம் படித்திடுவோம்—பயன்
பார்த்தே ஒருநூல் யாத்திடுவோம்!
சரிவா இரவு கழியுமுனம்—சுகச்
சரளி வரிசை தொடங்கிடுவோம்.


With the compliments of

TAFE

Tractors and Farm Equipment Limited, Madras


Manufacturing and Marketing MASSEY-FERGUSON Farm Machinery in India







ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், சின்னகாஞ்சிபுரம்
88, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.



வெல்க தமிழ்!

"காந்தி அண்ணலவர்களின் விருப்பத்தின் விளைவாகத் தோன்றிய இக் 'கதர் - கிராமத் தொழில் ஆயத்'தில் இன்று தமிழகத்தில் இலட்சக் கணக்கான தொழிலாளர்களும், தாய்மார்களும் ஈடுபட்டுப் பாடுபட்டு வருகின்றனர். அவர்தம் வாழ்வு வளமுற, அண்ண[illegible] எண்ணம் நிறைவுற, அனைவ[illegible]ம் இத்தொழிலுக்கு ஆக்கமும் ஊக்கமும் தருவது அவசியமாகிறது...

(ஒம்) மா. முத்துசாமி.
தலைவர்
தமிழக [illegible]தர கிராமத் தொழில் ஆயம்.

# கதர் வாங்குங்கள்



"தமிழகமெங்கும் கதர் விற்பனை நிலையங்கள் இயங்கி வருகின்றன. அக்டோபர் மாதத்தில் மேலும் பல இடங்களில் பொதுமக்கள் வசதியை முன்னிட்டு தற்காலிக கதர் விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டிலும் 2-10-1967 முதல் 1-11-1967 வரை பருத்தி ரகங்கள் மீது 20% ம் பட்டு ரகங்கள் மீது 10% ம் விலையில் விசேஷ தள்ளுபடி அளிக்கப்பட்டிருக்கிறது." தமிழகத்தில் ஒவ்வொரு இல்லத்திலும் கதர் வாங்கி ஆதரவு தர வேண்டும் என மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்."

(ஒம்) பி. என். பரமசிவம்.
துணைத் தலைவர.

தமிழக கதர் கிராம தொழில் ஆயம்.


மகாத்மாவின் மனதிற்குகந்த திட்டம கதர்.
வாழ வகையில்லாத மக்களுக்கு வாழ்வளிப்பது கதர்.
நாட்டு மக்களின் வாழ்வு நலமுற கதரையே வாங்குங்கள்.
ஏழைகளின் வாழ்வு ஏற்றமுற கதரையே வாங்குங்கள்.

கதர் வாங்குக கதர் வாங்குக கதர் வாங்குக

# ROYAL ENFIELD

# Fantabulus

**THE SCOOTER WITH EXCLUSIVE FEATURES**



*It's streamlined...*
*It's different...*
*It's* **Fantabulus**

**THE ULTIMATE IN MODERN SCOOTERING**

*Manufacturers.*
**THE ENFIELD INDIA LIMITED,** TIRUVOTTIYUR, MADRAS-19.

*Sole Selling Agents:*
**THE MADRAS MOTORS PRIVATE LTD.,** MADRAS—BANGALORE—DELHI.

FOS/EI/5